சுதேசமித்திரன்



31st OCT. 1948.

விலை 4 அணா

ஒரு புராதன வைத்தியம்

இவ்விதமாகவே நல்ல செய்திகள் பரவுகின்றன. உட்வார்ட்ஸ் கிரைப் வாட்டர் குழந்தைகளை நன்கு பாதுகாக்கிறது

WOODWARD'S GRIPE WATER

keeps baby well

1-WW 111-111

W. WOODWARD LTD. LONDON, ENGLAND

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு: மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

உங்கள் எதிர்காலம்

பணமில்லமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக்கு ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist, MADRAS 5.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி

திருச்சி கிளை:—
15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்

(தங்கம் சேர்ந்தது.)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும், திடசாலியாயும் யௌவனமாயும்இருக்கலாம், 30மாத்திரை சீசா1 ரூ.7.

மஹா பில்வாதி லேகியம்

பித்தம், அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரி கவசம்

வியாதி, மனோ விசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி, உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை, பிரதிஸரஸூத்ரம், ஸ்ரீ தன்வந்தரீயந்திரம் இவைகளை மந்திரபூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது, கவசம் 1-க்கு ரூ. 3,

ஆனந்த படை நிவாரணி

எல்லாவிதமான படைகளையும திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி

(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)
சென்னை ஹைகோர்ட்டில் உரிமைபெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம். ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

ஜாதகம்! ஆரூடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு :—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:- தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ, தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

குகன் சோப்புகள்

சுதேசி தயாரிப்பு சலவைக்கு மிகவும் சிறந்தது.

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S. I.

கப ரோக நிவாரணி

இருமல், ஈளை இருமல், வரட்சி, இளைப்பு, சுவாசம் எரைப்பு, மூச்சடைப்பு, புகைச்சல் இருமல், சாதாரண இருமல், மார்ச்சளி, அஸ்தி ஜுரம் கபத்தில் ரத்தம் வருதல், தொண்டை ரணம், ஈரல் ரணம், குலை ரணம் இவைகள் போன்ற இன்னும் எந்தவிதமான தீராத கபரோக வியாதியையும் தீர்த்து கபக் கிருமிகளைக் கொன்று கபத்தை தண்ணீராய் கரைத்து இருமலை அறவே ஒழித்து நல்ல நித்திரையைக் கொடுக்கும் — இது ஓர் நிகரற்ற சஞ்சீவி. இதற்கு பத்தியம் கிடையாது—குழந்தைகளும் உபயோகப்படுத்தலாம். 1 அவுன்ஸ் புட்டி ரூ. 2. பாக்கிங் வி. பி. செலவு தனி. முன்பணமாக 50% அனுப்பவேண்டும்.

தயாரிப்பவர்கள் :

சதர்ன் இந்தியா மெடிகல் ஹவுஸ்,

மைலாப்பூர், : : மதராஸ்.

Sole Selling Agents:

என் ஸீ ஏஜன்ஸீஸ்,

2/36, Luz Church Road, MYLAPORE, MADRAS

Consult: Dr. V. ராஜரத்னம்,

For Nervous Debility. Diabetes, T. B., etc., at the above address.

மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம், மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானால், இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும்பெற இச்சையுண்டானால் இன்றே,

'ஜீவவசிய பரம ரஹஸ்யம்'

என்னும் அரிய பெரிய தமிழ் நூலைப்படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக. தமிழில் இந்தச் சாஸ்திர சம்மந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத்தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று பிறகு அப்யசித்து வெற்றிபெற்ற ஒரு மகானால் இது வரையப்பட்ட அனுபவ நூலாகும். இன்றே வாங்கிப்படித்து பயன்பெறுங்கள்.

விலை ரூ. 4—8—0.

வி. பி. செலவு அணா 9.

ஷாஜஹான் புக் டெப்போ, 30, சாந்தோம், சென்னை 4.

REWARD RS. 100

GUPTA VASHIKARAN YANTRA (GOVT. REGD)

இது சித்த வசீகரண யந்திரம் இதை அணிவதால், எந்தக் கஷ்டமான காரியத்திலும் சரி, நீங்கள் வெற்றி பெறுவீர், நீங்கள் விரும்பும் பெண், எத்தனை கடின ஹிருதயம் படைத்தவளாயினும் உம்மிடம் வந்து சேர்வாள். இது உமக்கு அதிர்ஷ்டத்தைத் தரும். வழக்கு, செல்வம், லாட்டரி, பரீக்ஷை முதலியவற்றில் அந்த யந்திரத்தின் மூலம் வெற்றி கிடைக்கும்.

செம்பு விலை ரூ. 2. வெள்ளி ரூ. 3. தங்கம் விலை ரூ. 10.

நரையை ஒழியுங்கள்.

சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும், பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபீஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொற்ப நரைக்கு ரூ. 2—8—0. அதற்கு மேற்பட்டது. ரூ. 3—8—0. எல்லா நரைக்கும் ரூ. 5. வெளிநாடுகளுக்கு வி. பி., போஸ்டல் ஆர்டர் கிடையாது. மணியார்டர் தேவை. கடிதங்கள் ஆங்கிலத்தில்,

KASHIVISHWANATH ASHRAM, No. 14/A, P.O. Katrisarai, (Gaya)

தசை வலிகளுக்கு

உலகப் புகழ்பெற்ற
ஜாம்பெக் நிவாரணமளிக்கும்

ஜாம்-பெக் மிருதுவாக தேய்த்தால் சீக்கிர நிவாரணமேற்படும். இவ்வற்புத மூலிகை மெழுகிலுள்ள மருந்து எண்ணெய்கள் சருமத்திநுள் புகுந்து களைப்புற்ற தசைகளுக்கும் கீல் பிடிப்புகளுக்கும் சமனமூட்டி குணமளிக்கும். பிராணிகள் கொழுப்பு இல்லாததற்கு உத்தரவாதம்.

எப்பொழுதும் உபயோகியுங்கள்.

Zam-Buk

சமனமூட்டி நிவாரணமளிக்கும்
கிருமிநாச மருந்து

சரும நோய்கள். காயங்கள் பூச்சிகடிகள் புண்ணுகி வலிக்கும் கால்கள், தசை வலி. தேகக் குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது.

ஏஜண்டுகள் மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பி. டி. மதராஸ்.



ஸ்தாபிதம் 1924

பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. டி பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோநிதி" தியாகராயநகர், மதராஸ் 17.

கதா மோகன [illegible]

3-பாகங்கள் விலை ரூ. 2-8-0

தபால் செலவு பிரத்யேகம்.

மானேஜர்: "சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை

குதூகலமான தீபாவளிக்கு

இவ்வருஷ தீபாவளிக்காக உயர்ரக வேஷ்டி, புடவைகள், ஸில்குகள் நல்ல அழகிய டிஸைன்களில் பங்களூர், கோயம்புத்தூர், சேலம், உறையூர் முதலிய ஊர்களிலிருந்து வரவழைத்திருக்கிறோம். மில்வேஷ்டி, சீட்டி, வாயில்களும் ஏராளமாகவுண்டு. குறைந்த லாபத்துக்கு மலிவான விலையில் விற்பனை செய்கிறோம்.

ஒரு முறை விஜயம் செய்தால்
திருப்தி அடைவீர்கள்.

நூர்ஜஹான் ஸில்க் ஸ்டோர்ஸ்,
திருவையாறு

ஸாயி - ஜோதிடர்.

உமது எதிர்கால 5 கேள்விகட்கு விவரமாய் பதில் எழுத ரூ. $1\frac{1}{4}$. ஒரு வருடத்திற்கு:—மாதவாரி பலன் ரூ. 3. வாரா வாரி பலன் ரூ. 7. முழு ஆயுட் பலன் ரூ. 10. மேற்படி சுருக்கம் ரூ. 5. வாழ்க்கைச் சித்திரம் ரூ. 2. ஜாதகம் கணிக்க ரூ. 1. லாபம் நஷ்டம், காணுமற்போதல், ஆயுள், லாடரி, ஷேர்மார்க்கெட் காதல்–இவற்றில் ஒன்றைப்பற்றி எதிர்கால பலன் ரூ. 3. ஜாதகம் அல்லது பிறந்த நாள் குறிப்பு அல்லது கடிதம் எழுதும் நேரமும் வயதும் தேவை. ஸ்ரீ ஸாயி கவசம் ரூ. 3–8–0, ரூ. 10. விவரங்களுக்கு எழுதவும்.

ஸாயி ஆஸ்டிரல் ஸ்டுடியோஸ்,
உறையூர் — திருச்சி.

வீட்டிலேயே வாசனை தைலங்கள் தயாரித்தால் பணம் மிச்சமாகும்: கீழ்க்கண்ட மோஹினி பியூர் செண்டுகளில் ஏதேனும் ஒன்றை தேங்காய் எண்ணெய், மணிலா, ஆமணக்கு அல்லது நல்லெண்ணெயில் சேர்த்தால், மலிவான விலையில் சிறந்த வாசனைத் தைலம் கிடைக்கின்றது. இலவசமாக எண்ணெயை சிவப்பாக்கும் ஆல்கானட் வேர்கள் அனுப்புவோம்.

மோஹினி பியூர் செண்ட் ரகங்கள்.

1. சம்பக் செண்ட்	ரூ. 2–0.	8. ரோஜா செண்ட்	ரூ. 1–8.
2. கியோரா	,, 2–0.	9. சுரங்கி	,, 1–8.
3. காஸ்	,, 2–0.	10. வில்வி	,, 1-0.
4. போகுல்	,, 1–8.	11. லோடஸ்	,, 1–0.
5. ஜாஸ்மின்	,, 1–8.	12. ஆரஞ்சு	,, 1-0.
6. கதம்பம்	,, 1-8.	13. மோதியா	,, 1-0.
7. ஹேனு	,, 1-8.	14. கோலோன்	,, 1–0.

அரை அவுன்ஸ் புட்டிகளில். பாக்கிங், போஸ்டேஜ் வி. பி. பி. தனி.

S. PAUL & Co., Perfumers, (Dept. S.W.) 4, Hospital St.. **Calcutta 13.**

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா ?

இதோ லக்ஷிமி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம்; செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமிர்தம்.

40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ் :	லக்ஷிமி & கோ.,
வால்டேர், ஆர். எஸ்.	2/135, பிராட்வே, மதராஸ்.

பிரசித்தி பெற்ற

'காஸினோ ஸ்னோ'

உங்கள் முகப்பருவைப்போக்கி, சருமத்தை மிருதுவாக்கி முகத்தைப் பொலிவுடன் பிரகாசிக்கச் செய்வது 'காஸினோ ஸ்னோவே' வாங்கும்பொழுது "காஸினோ" மார்க்கைப்பார்த்து வாங்குங்கள்.

CHANDRA TRADING CO.,
93, ACHARAPPAN ST., G.T. MADRAS 1

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்திசெய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற அவுஷதம்.

40–நாள் மருந்து ரூ. 3-12-0.

பாக்கிங்கு, தபால்சார்ஜ் கிடையாது

ஜமதக்னி ஔஷதாலயா,
26, வடக்குமாடவீதி, மயிலாப்பூர், சென்னை



எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

M. R. **பார்த்தசாரதி ஐயங்கார்,**
28, துளசிங்கப் பெருமான் கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

வாழிய செந்தமிழ்! சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரிஞூ ஐப்பசிமீ 15உ ★ 1948-ஞூ அக்டோபர்மீ 31உ No 40

பிரஞ்சிந்திய அலங்கோலம்!

பிரஞ்சிந்தியாவில் சென்ற வாரத்தில் நடந்த தேர்தல் கேலிக் கூத்தைப் போல் மட்ட ரகமான நிகழ்ச்சி வேறெதுவேனும் உண்டா என்பது சந்தேகம். அங்கு பொய்யும், புனை சுருட்டும் விசுவரூபம் பெற்றன; அராஜக செயல்கள் தாண்டவமாடியிருக்கின்றன. பிரஞ்சிந்தியாவின் எதிர்காலம் என்னவென்பதை நிதானிக்க நடைபெற்ற ஒரு தேர்தலில், இத்தகைய நேர்மையற்ற முறைகள் கையாளப்பட்டிருக்கின்றன. பிரஞ்சு அதிகாரிகளும் அவர்களுடைய கையாட்களும் இதில் புரிந்திருக்கும் திருவிளையாடல்கள் அயோக்கியத்தனத்தின் சிகரம்.

பிரஞ்சு இந்தியா இந்திய யூனியனுடன் சேராமல் தடுக்கப் பிரஞ்சு அதிகாரிகள் எத்தகைய அட்டூழியத்துக்கும் தயார் என்பதே இத் தேர்தல் வெட்ட வெளிச்சமாக்கும் உண்மை. இப்பிரச்னையில் ஜனநாயக முறையையொட்டி மக்கள் செய்யும் முடிவுப்படியே தாங்கள் நடக்கப்போவதாக அவ்வதிகாரிகள் பிரசாரம் செய்து வந்தது அனைவருக்கும் தெரியும். இது வெறும் மோசடிப் பேச்சு என்பது தெளிவு. பொதுஜனக் கருத்து வெளியாகாமல் செய்ய அவ்வதிகாரிகளும், அவர்களது கையாட்களும் பட்டவர்த்தனமாகச் செய்த அக்கிரமங்களையும், அட்டூழியங்களையும் பற்றிய விவரங்கள் அனைவரையும் பிரமிக்கச் செய்யும்.

பிரஞ்சு இந்தியா இந்திய யூனியனுடன் ஐக்கியமாவதே இயற்கையானது, நியாயமானது என்பது வெட்ட வெளிச்சம். தங்கள் கருத்தைத் தாராளமாக வெளியிடக்கூடிய நிலைமையில், அதுவே தங்கள் அபிலாஷையென்பதைப் பிரஞ்சு இந்திய மக்கள் தெளிவாக்குவரென்பதிலும் சந்தேகமில்லை. ஆனால், அக்கருத்தை அடியோடு அழுத்தி வைத்து, இனியும் அப்பிரதேசத்தைத் தங்கள் பிடிப்பில் வைத்துக்கொள்ளவே பிரஞ்சு அதிகாரிகள் நேரடியாகவும், தங்கள் கையாட்களைக் கொண்டும் அட்டூழியங்களில் ஈடுபட்டனர்.

புதுவையில் அநேகமாக ஒவ்வொரு தேர்தல் சாவடியிலும் ஒரே பித்தலாட்டம். அவ்வளவு சாவடிகளையும் பிரஞ்சு ஏகாதிபத்தியத்தை ஆதரிக்கும் கும்பல்கள் தம்வசமாக்கிக் கொண்டுவிட்டன. மேற்பார்வை செய்வதற்கென்று அதிகாரிகளிடமிருந்தே அனுமதிப் பத்திரம் பெற்ற காங்கிரஸ் அஸெஸர்கள் எவரும் அந்த ஸ்தலத்தை நெருங்கக்கூட விடப்படவில்லை. நெருங்கத் துணிந்தவர்களை அடித்து வீழ்த்தக் காலிகள் சிறிதும் கூசவில்லை. அத் தேர்தலில் அபேட்சகர்களாக நின்ற பிரஞ்சுக் கையாட்களே வாக்குப் பதிவு ஸ்தலங்களில் சர்வாதிகாரிகள். அவர்கள் வோட்டுச் சீட்டுகளில் முன்னதாகவே தங்கள் பெயர்களை எழுதி வைத்துக்கொண்டு, அவற்றை வோட்டுப் பெட்டிகளில் போடும்படி வாக்காளர்களை நிர்ப்பந்திக்கச் சிறிதும் தயங்கவில்லை. இதோடு அந்த அபேட்சகர்கள் தங்கள் கைக்கூலிகளிடமே மற்ற வாக்காளர்களுக்குரிய வோட்டுச் சீட்டுகளைக் கொடுத்து வோட்டுப் பெட்டிகளில் போடச் செய்யும் அக்கிரமமும் தாராளமாக நடந்திருக்கிறது. தேர்தல் சாவடிகளைக் குறித்த நேரம் வரை திறந்திருக்க வேண்டுமென்ற விதியைக்கூடப் பிரஞ்சுக் கையாட்கள் லட்சியம் செய்யவில்லை; ஒரு மணி அல்லது 2-மணி நேரத்துக்கு முன்பேயே எஞ்சியிருந்த வோட்டுச் சீட்டுகளில் தங்கள் பெயரை எழுதி வோட்டுப் பெட்டிகளில் போட்டுக்கொண்டு சாவடிகளைப் பூட்டிக்கொண்டு போய்விட்டனர்.

லண்டனில் நேருவுக்கு உபசாரம்

"இந்தியா ஹவுஸி"ல் நடந்த வரவேற்பின் போது எடுக்கப்பட்ட படம்.

இத்தகைய அயோக்கியத்தனங்களை மேலதிகாரிகளிடம் சுட்டிக்காட்டியபொழுது, அவர்களுக்கு இவை அவ்வளவு பெரிய ஒழுங்கீனங்களாகத் தோன்றவில்லை! இவ்வளவும் புதுச்சேரி தேர்தல் விசித்திரம்.

காரைக்கால் தேர்தலிலோ ஆரம்பத்திலிருந்தே பிரஞ்சு அதிகாரிகளும், அவர்கள் கையாட்களும் வைத்ததுதான் சட்டம். தேர்தல் சாவடிகளுக்குச் சென்ற காங்கிரஸ் அஸெஸர்களை அவர்கள் அடித்து விரட்டிவிட்டார்கள். மேலும், வோட்டுச் சேகரிப்பதற்கான வசதிகள் அனைத்தையும் பிரான்ஸை ஆதரிக்கும் கட்சிக்குத்தான் அளிக்க முடியுமென்று அதிகாரிகள் அறிவித்துவிட்டனர். எனவே, காங்கிரஸ் அத்தேர்தலில் கலந்துகொள்வதில்லையென்று முடிவு செய்துவிட்டது.

மாஹியில் மட்டும் தேர்தல் நடக்கவில்லை. காரணம், அங்குள்ள அமளியான நிலைமையே என்று பிரஞ்சு அதிகாரிகள் கூறுகின்றனர். தேர்தலுக்குத் தேவையான அமைதி அங்கில்லையானால், புதுவை, காரைக்கால் போன்ற இடங்களிலும் அத்தகைய அமைதி இல்லை. எனினும், பிரஞ்சு அதிகாரிகள் அவ்விடங்களில் தேர்தலை ஒத்திவைக்க மறுத்துவிட்டு, மாஹியில் மட்டும் ஒத்திவைத்திருப்பதில் மர்மம் எதுவுமில்லை. மாஹியில் அதிகாரத்தை ஜனங்கள் கைப்பற்றிக்கொண்டுவிட்டனர். இது முக்கியமாக தேர்தல் பற்றிய ஏற்பாடுகளில் பிரஞ்சு அதிகாரிகள் செய்த அக்கிரமங்களைச் சகிக்க முடியாமல் அங்குள்ள மக்கள் கொதித்தெழுந்ததன் விளைவே. சுற்றியுள்ள இந்திய யூனியன் பிரஜைகளோ, இந்திய அதிகாரிகளோ இவ்விஷயத்தில் எவ்விதத்திலும் தலையிட்டதாகப் பிரஞ்சு அதிகாரிகள் கூக்குரல் போடுவது வெறும் புரட்டு. அவ்வாறு தலையிடும் எண்ணம் இந்திய சர்க்காருக்கு இருந்திருந்தால் ஒரு நொடியில் இங்கிருந்து பிரஞ்சுக்காரர்களை விரட்டியடித்திருக்க முடியும். அதற்கு மாறாக பிரஞ்சு இந்தியப்பிரச்னைக்கு சட்டரீதியான, ஜனநாயக முறைப்படி, அமைதியான ஒரு பரிகாரம் ஏற்படவேண்டுமென்பதே ஆரம்பமுதல் இந்திய சர்க்கார் காட்டி வந்திருக்கும் ஆவல். ஆனால், அது நிறைவேற விடுவதில்லை என்று பிரஞ்சு அதிகாரிகள் தீர்மானித்துவிட்டதாகத் தெரிகிறது.

உண்மையில் மாஹியில் தேர்தலை ஒத்திவைப்பதற்கான ஒரு நெருக்கடியை விளைத்ததே பிரஞ்சு இந்தியாவின் எதிர்காலம் பற்றி இப்போதைக்கு சர்வஜன வாக்கு எடுக்காதிருப்பதற்கான பிரஞ்சு சூழ்ச்சியின் ஒரு பகுதியாயிருக்கக்கூடும். இப்பிரச்னை நேர்மையாக, அமைதியாகத் தீர்வதில் பிரஞ்சு அதிகாரிகளுக்குக் கருத்துண்டானால், அவர்கள் கையாளவேண்டிய முறை, இந்திய சர்க்காருடன் கலந்துகொண்டு தேர்தல் தேதிகளை நிர்ணயித்து, அவர்களுடைய பிரதிநிதிகளின் மேற்பார்வையில் யோக்கியமாகத் தேர்தலை நடத்தச் சம்மதிக்க வேண்டும். இல்லையானால், இங்குள்ள மக்களை எப்படியாவது வலுச்சண்டைக்கு இழுப்பதிலேயே பிரஞ்சு அதிகாரிகளுக்கு நாட்டம் என்பதுதான் அதன் பொருள்.

தேசமக்களின் உள்ளப் பிரதிபலிப்புக்கு உறைவிடமாக விளங்கிவரும் உன்னதப் பதவி காங்கிரஸ் மகாசபைத் தலைமை. இவ்வரியாசனம் தென்னிந்தியாவுக்குக் கிட்டி சுமார் 20-வருஷங்களுக்கு மேலாகிவிட்டன.

காலஞ்சென்ற ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாஸய்யங்காருக்குப் பின்னர் இப்போதுதான் தென்னிந்தியாவுக்கு இந்தக் கௌரவம் கிட்டியிருக்கிறது. ஜெய்ப்பூரில் நடைபெறப்போகும் இவ்வருஷ காங்கிரஸுக்கு டாக்டர் பட்டாபி ஸீதாராமய்யா பெரும்பான்மையான ஓட்டுக்கள் பெற்று தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

காங்கிரஸின் தலைவர் தேர்தலுக்கு இதற்கு முன்பெல்லாம் போட்டியின் மூலம் நடப்பதில்லை. ஆனால், இந்த முறைக்கு இரண்டு சந்தர்ப்பங்களில் பங்கம் ஏற்பட்டது. டாக்டர் பட்டாபிக்கும்—நேதாஜி சுபாஷுக்கும் இத்தலைமைப்பதவியை யொட்டி போட்டி ஏற்பட்டது. அப்போது டாக்டர் பட்டாபியை மகாத்மாஜி தமது அபேட்சகராக நியமனம் செய்தார். "பட்டாபியின் தோல்வி என்னுடைய தோல்வி" என்றும் பட்டாபிக்கு ஏற்பட்ட தோல்வியை மகாத்மா ஏற்றுக்கொண்டார். எனவே, டாக்டர் பட்டாபி அப்போட்டியிலும் தோல்வியை ஏற்க நேரவில்லை. இப்போது ஏற்பட்ட போட்டியில் வெற்றிபெற்றுவிட்டார். மகாத்மாவின் ஆசையும் நிறைவேறியிருக்கிறது.

காங்கிரஸ் ஸ்தாபனத்தின் தலைமைக்கு வேண்டிய சகல யோக்யதாம்சங்களும் நிரம்பப் பெற்றவர் டாக்டர் பட்டாபி. காரியக் கமிட்டியில் தொடர்ந்து அங்கம் வகித்து வந்திருக்கிறார்.

காங்கிரஸ்கூடும் ஜெய்பூர் காட்சிகள்









இவ்வருஷம் காங்கிரஸ் மகாசபை டாக்டர் பட்டாபி தலைமையில் ஜெய்பூரில் கூடுகிறது.

ஜெய்பூரின் அழகுக்கே சிகரம் போன்ற அற்புத மான கட்டிடம் "ஹவா மஹால்" மேலே தோன்றுகிறது.

இடது படங்கள்:—

1. பிரசித்தி பெற்ற "நராகர் கோட்டை"
2. ஜெய்பூர் மஹாராஜாவின் எழில் மிகுந்த அரண்மனை.
3. ஜெய்பூர் நகரின் பொதுத் தோற்றம்.



பெரும்பான்மையான ஓட்டுக்கள் பெற்று ராஷ்டிரபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டாக்டர் பட்டாபியை. சென்னை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர், டாக்டர் சுப்பராயன் முதலியவர்கள் ராஜாஜி ஹாலில் வரவேற்று உபசரித்து பாராட்டியபோது எடுத்த படம்.



சென்ற 2[illegible]-ந் தேதியன்று ஹைதராபாத ராணுவ கவர்னர் மேஜர் ஜெனரல் சௌத்ரியும், ஸ்ரீ ஏ. வி. பாத்ரோ, மேஜர் ஜெனரல் ருத்ரா ஆகியோரும் சென்னை வந்தபோது எடுத்த படம்.

ஸர்தார் வாழ்க!

தீய சக்திகளைத் தொலைத்து ஒழிக்கத் தூயஉள்ளம் வேண்டும்; துணிவும் வேண்டும். உள்ளத்தூய்மைக்கும், அஞ்சா நெஞ்சுக்கும் உவமை காண வேண்டுமானால் இந்தியாவில், ஸர்தார் வல்லபாய் படேலைக் காட்டிலும் சிறந்த தீரர் அரிது. வயிரமுடைய நெஞ்சுரத்தால் அவர் வாழும் முறையைக் கண்ட தியாகி. கத்திக் குத்துகளையும் கவனியாமல் சத்திய நெறிபற்றி தேசப்பணியில் தமது வாழ்வையே அர்ப்பணித்த வீரர் அவர். சுதந்திரப் போராட்டத்தில் மகாத்மாஜியின் வலக்கரமாக விளங்கியவர் வல்லபாய். போராட்டம் என்ற நினைப்பு மகாத்மாவின் மனத்தில் உதித்த ஒவ்வொரு கட்டத்திலும் அவர் நடைமுறைக்கு வலியூட்டியவர் வல்லபாய்.

எச்சில் சோற்றை இன்பமென்று எண்ணிச் சோம்பிக் கிடந்தவர்களையெல்லாம் கச்சணிந்த வீரர்களாக மாற்றி, ஆட்சி வர்க்கத்தையே பர்தோலியில் கல கலக்கச் செய்தவர் படேல். அவருடைய இரும்புள்ளத்தில் இயங்கி வந்த மகாபக்தியை மகாத்மா உணர்ந்தார்; மகாத்மா உள்ளத்தில் வாழ்ந்த நாற்பது கோடி பாரத மக்களும் அவ்வுண்மையை உணர்ந்தனர். எனவே, ஸர்தார் வல்லபாயின் இரும்புள்ளம் இந்திய யூனியனுக்கே பிரத்யேகமான கவசம் என்றும் தகும். இந்தியாமீது விரோதிகள் வீசும் விஷக் குண்டுகளெல்லாம் படேலின் கவசத்தின் முன் எம்மாத்திரம்!

ஆதிக்க வெறி முற்றி, ஏகாதிபத்தியம் தழைத்தோங்கத் தவங்கிடந்த சர்ச்சில் கும்பலுக்கு இந்தியாவின் இதய பாஷை என்னவென்பதை முகத்திலறைந்தாற்போல் புரிய வைத்தவர் ஸர்தார். சில மாதங்கள் முன் சர்ச்சிலுக்கு அவர் கொடுத்த சாட்டையை யாரும் மறக்கக்கூடியதன்று.

இத்தகைய தியாக புருஷர்கள் சத்திய மார்க்கத்தில் செலுத்திய சுதந்திரக் கப்பல் தரை தட்டாமல் கரை சேர்ந்தது. மகாத்மாஜியின் கண் முன்னாலேயே பாரதத்தாயின் அடிமைத்தளைகள் சிதறித் தெறித்தன. பெற்ற சுதந்திரத்தைப் போற்றி வளர்க்கும் பெரும் பொறுப்பு தலைவர்களிடம் சுமந்தது.



இந்நாடு சுதந்திரமடைந்த கையோடு இந்திய யூனியன் சர்க்காருக்கு ஏற்பட்ட சங்கடங்கள் இவ்வளவு அவ்வளவல்ல. வகுப்புவெறி பேயுருக்கொண்டு பல்வேறு பகுதிகளில் தலைவிரித்தாடக் கண்டோம். இந்த விஷத்தை வேரறுக்க விழைந்த மகாத்மாவே அதற்கு பலியாகி, நாடு திக்கற்று நின்றது. உணவுப் பஞ்சமும், உடைப் பஞ்சமும் உச்சத்தை அடைந்தன.

இதோடு சமஸ்தானங்களின் பிரச்னை திகைப்பை உண்டுபண்ணிற்று. இவ்வளவையும் நேர்மையான முறையில் தீர்த்துவைக்கும் வேலையில் நேரு சர்க்காருக்குப் பெரும் பலமாக விளங்கும் ஸர்தார் படேல், சுதேச சமஸ்தானங்களை இந்திய யூனியனில் ஒன்று சேர்த்ததற்கு இணை காண்பது அரிது. இது அவரது ஒப்பற்ற சாதனை. சுமார் 570 சமஸ்தானங்கள் இந்திய யூனியனில் இணைந்தன. ஆனால், ஹைதராபாத்தின் விபரீதப் போக்கை அவர் சமாளித்து, அதன் கொட்டத்தை அடக்கியது சரித்திர முக்கியம் வாய்ந்தது. இந்திய யூனியனின் அண்மையிலுள்ள அப்பகுதியில் நடந்த அட்டூழியங்கள் கொஞ்ச நஞ்சமில்லை. அசுரர்களின் ரூபத்தில் அதிக்கிரமங்களைச் செய்த ரஸாக்கர்கள் கும்பல்கையில் சிக்கிய நிஜாம், செயலற்றுப் போனார். அன்று நரகாசுரன் எங்ஙனம் வதம் செய்யப்பட்டானோ அதேமாதிரி இன்று ஹைதராபாத்தில் நர அசுரர்களான ரஸாக்கர்கள் கும்பல் வதம் செய்யப்பட்டு, மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு அடிகோலப்பட்டுளது.

சுதந்திர இந்தியாவின் சிருஷ்டிகர்த்தர்களில் முக்கியமான ஸர்தாரின் வாழ்க்கை, தவ வாழ்க்கை. அதன் பயனை மக்கள் அனுபவிக்கின்றனர். அவருடைய 74-வது ஜன்ம தினம் இந்த அக்டோபர் 31-ந் தேதி. அசுரசக்தி மடிந்து, மங்கள வாழ்வு பிறந்த தினமாகக் கொண்டாடும் தீபாவளியும் சேர்வது ஒரு விசேஷப் பொருத்தம். இப்புனித நாளில் ஸர்தார் நீடூழி வாழ வேண்டுமென்று இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் பிரார்த்திப்போம்.

ஸர்தார் வாழ்க!



"ப. ராதாகிருஷ்ணன்"

மறுநாள் பொழுது விடிந்தால் தீபாவளி. தன் மாமனாரின் மணியார்டரை எதிர்பார்த்து ஒவ்வொரு நாளும் ஏமாற்றமடைந்து வந்திருந்தான் தங்கசாமி. அவன்தான் அந்த ஊர்த் தபால்காரன். தான் வேலை தொடங்கிய நாள் முதல் தன் கையாலேயே பிறருக்கு ஆயிரக் கணக்கான மணியார்டர்கள் பட்டுவாடா செய்திருக்கிறான். தினந்தோறும் கடிதங்களும் பணமும் வருமென எதிர்பார்த்து அவன் வரவிற்காகக் காத்திருக்கும் ஜனங்களை இன்னமும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறான். ஆனால், தூரத்தில் அவனைக் கண்டதுமே தாமரையிலைத் தண்ணீர் போல் தத்தளிக்கும் அவர்கள் மனோநிலையை இப்பொழுதல்லவா அவன் நன்கு உணர முடிகிறது?

காலையில் சாப்பிட்டுவிட்டு வந்து போஸ்டாபீசில் நுழைந்தான் அவன். கட்டுகளெல்லாம் வந்து தயாராயிருந்தன. அவற்றை உடைக்கும்போதே அவனது கைகள் நடுங்காமலில்லை. உடைத்து மணியார்டர் கட்டைப் புரட்டிப் பார்த்தான். ஆனந்தத்தினால் அவன் மனம் துள்ளிக் குதித்தது. அவன் எதிர்பார்த்த மணியார்டர் அங்கே இருந்தது-ஸ்ரீமதி சண்பகம் C/o தங்கசாமி. போஸ்ட்மேன். சந்தேகமேயில்லை. அவன் மனைவியின் பெயருக்குத்தான் வந்திருக்கிறது-சுளையாக நூறு ரூபாய்.

மணியார்டர்களுக்குண்டான பணத்தைப் போஸ்ட்மாஸ்டரிடமிருந்து கணக்குப் பார்த்து வாங்கின உடனேயே ஒரு புத்தம் புதிய பச்சை நூறு ரூபாய் நோட்டை எடுத்துச் சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டான் தங்கசாமி. அது தன்னுடையதுதானென்ற பெருமிதம் அவனுக்குத் தலைகால் புரியாமல் செய்தது.

தபால் பட்டுவாடா செய்துகொண்டே தன் வீட்டை நெருங்கினான் அவன். அந்தப் பச்சை நோட்டைப் பார்த்ததும் அவள் முகம் எவ்வாறு மலரும் என்பதைச் சிந்தித்து மனோராஜ்யம் செய்தவண்ணம் உள்ளே நுழைந்தான். பாவம்! தபால்காரனானாலும் தங்கசாமியும் மனிதன்தானே? சென்ற சித்திரையில்தான் அவனுக்குக் கலியாணம் ஆகியிருந்தது. இதுதான் அவனுக்குத் தலை தீபாவளி. இதைச் சந்தோஷமாய்க் கொண்டாட வேண்டுமென்று ஆசை இராதா என்ன?

"என்னாங்க, அப்பாரு கிட்டேயிருந்து பணம் வந்திச்சா?" என்று கூவிய வண்ணம் உள்ளிருந்து ஓடி வந்தாள் சண்பகம். அவளை அப்படியே கட்டிப்பிடித்துத் தன் அருகில் அமர்த்திக் கொண்டான் அவன். வேறு சமயமாயிருந்தால் வெகு நேரம் வரை அவளுடன் விளையாடித் தமாஷ் செய்த பின்பே உண்மையைச் சொல்லியிருப்பான். இன்று அதற்கு நேரமில்லை. தபால்களும் மணியார்டர்களும் பார்சல்களும் ஒரேயடியாக வந்து குவிந்திருந்தன. மறுநாள் தீபாவளி. இவற்றைச் சீக்கிரம் பட்டுவாடா செய்துவிட்டால், கடைத் தெருவில் போய் வேண்டிய துணிமணிகள் வாங்கி வரலாம்—எனவே, வீட்டில் அதிகநேரம் தாமதிக்க அவன் விரும்பவில்லை.

தன் தளிர் போன்ற விரல்களில் பேனாவைப் பற்றி கணவன் காட்டிய இடங்களில் கையெழுத்திட்டாள் சண்பகம். கூப்பனைக் கிழித்தெடுத்துக் கொண்டு பணத்திற்காகச் சட்டைப் பையில் கைவிட்டான் தங்கசாமி. அவனுக்குப் பகீரென்றது. பை காலி!

ஒன்றன்பின் ஒன்றாக எல்லாப் பைகளையும் துழாவிப் பார்த்தான். பயனில்லை. அந்தப் பச்சை நோட்டை எங்கும் காணவில்லை. மற்ற மணியார்டர்களின் தொகையையும் கையிருப்பையும் கணக்கிட்டுப் பார்த்தான். அவையெல்லாம் சரியாகத்தான் இருந்தன. ஆனால் அந்தப் பச்சை நோட்டு...?

அன்று காலையில் அதைத் தன் இடது சட்டைப்பையில் தான் வைத்துக்கொண்டான். அது நன்றாக ஞாபகம் இருந்தது அவனுக்கு. அந்தப் பையும் ஓட்டையானதல்ல. அதில் அவன் வேறெந்தச் சாமானும் போடவோ எடுக்கவோ இல்லை.

அது கசங்கிப்போகாமல் இருக்க வேண்டுமென்பதே அவனது முக்கிய கவலையாயிருந்தது. அப்படியிருக்க அது எங்ஙனம் மறைந்திருக்கக்கூடும்? எண்ணி எண்ணி மூளை குழம்பினது தான் கண்ட பலன். தலையைக் கையால் அமுக்கிப்பிடித்துக் கொண்டு படுக்கையில் உட்கார்ந்துவிட்டான்.

சண்பகம் நல்ல உத்தமி. பணம் போனதைப்பற்றி அவள் மனம் வருந்தவில்லை. கணவனது துயரம்தான் அவளை வாட்டியது. அவனை ஒருவாறு சமாதானம் செய்து அவனது கடமையைப்பற்றி நினைவுறுத்தினாள் என்றாலும் தங்கசாமியின் மனது கேட்கவில்லை. தன் துரதிஷ்டவசத்தினால்தான் தன் மனைவியின் சந்தோஷம் பாழாயிற்று என்ற உணர்ச்சி அவன் உள்ளத்தினின்றும் மறையவில்லை. அவனுக்கு இவ்வாண்டு தீபாவளி இல்லை-அவனால் அவளுக்கும் இல்லை. பாரமான மனத்துடன் மறுபடி தபால்பையை எடுத்துத் தோளில் மாட்டிக்கொண்டு வெளியே புறப்பட்டான்.

* * * *

பட்டுவாடா முடிந்து நடைப்பிணம்போல் திரும்பிவந்து தபாலாபீசில் நுழைந்த தங்கசாமியை ஒரு முறை ஏற இறங்க நோக்கினார் போஸ்ட்மாஸ்டர் ஐயா. அவர் வெகு நல்ல மனிதர். தங்கசாமியிடம் எப்போதும் தனி வாஞ்சை அவருக்கு உண்டு. இன்று அவன் முகத்தில் படர்ந்திருந்த துயரத்தின் சாயையை அவர் என்றும் கண்டதில்லை. எனவே, விஷயமென்னவென்று அறிய விரும்பினார்.

அநேகமாகக் காலியாயிருந்த தபால் பையைக் கீழே வைத்துவிட்டு நெற்றி வியர்வையைத் துடைத்துக்கொண்டிருந்த தங்கசாமியை நோக்கி, "ஏனப்பா தங்கசாமி இன்று ஏன் முகவாட்டம்?' என்று வினவினார்.

அவரிடமாவது தன் குறையைச் சொல்லிக் கொள்ளாவிட்டால் தன் ஹிருதயம் வெடித்துவிடும்போலிருந்தது அவனுக்கு. ஒன்றையும் ஒளிக்காமல் கூறிவிட்டுக் கண்ணீர் விட்டான். போஸ்ட்மாஸ்டர் ஐயாவின் முகத்தில் தீவிரமான சிந்தனையின் குறி தென்பட்டது. அவரது கூர்மையான கண்கள் எதிர்புறமிருந்த சுவரை ஒரு முறை சந்தித்துவிட்டுத் திரும்பின. ஒரு நிமிஷம் ஆழ்ந்த யோசனையிலிருந்தபின் அவனை நோக்கித் தன் பார்வையைத் திருப்பினார். அப்பார்வையில் கடுமை தோன்றியது.

"தங்கசாமி! நீ ஒரு வடிகட்டின முட்டாள்" என்றார்





அவர். அப்போதிருந்த நிலைமையில் அவர் என்ன சொன்னாலும் சகித்துக்கொள்ளத் தயாராயிருந்தான் அவன்.

“உனக்கு எதிலும் நிதானமே கிடையாது-சாப்பிடுகிற தொன்றில் தவிர” என்று தொடர்ந்தார் போஸ்ட்மாஸ்டர் ஐயா. “ஆமாங்க—இல்லிங்க” என்று தடுமாறினான் தங்கசாமி.

“இந்தச் சனியன் பிடித்த போஸ்டல் யூனிபாரமும்” தலைப்பாகையும் உனக்கு வேண்டாம். தினம் இதை மாட்டிக்கொண்டு பிரமாதமாய் வெளியில் கிளம்பாதே—கிளம்பாதே என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன். எப்பொழுதாவது அதிகாரிகள் வரும்பொழுது போட்டுக்கொண்டாலே போதாது?” என்று இரைந்தார். ‘என்னடா இது? நம் துரதிர்ஷ்டத்தினால் ரூபாய் காணாமற் போயிற்றென்றால், அதற்கு இந்தப் ‘போஸ்டல் யூனிபாரம்’ என்ன பாவத்தைப் பண்ணிற்று?” என்று நினைத்துக்கொண்டான் தங்கசாமி. அதை மாட்டிக்கொண்டவுடனே தான் ‘ராஜா’ என்ற உணர்ச்சி ஏற்படுவது அவனுக்கல்லவா தெரியும்? போஸ்ட்மாஸ்டர் ஐயா இன்னும் நிறுத்தியாகவில்லை.

“அட! அப்படித்தான் போட்டுக் கொள்கிறாய். அதை உன் சொந்தச் சட்டையின் மேலேயே மாட்டிக்கொண்டு தொலையக் கூடாதா? வீட்டிலிருந்து போட்டுக் கொண்டு வரும் சட்டையைக் கழற்றி போஸ்டாபீஸிலேயே மாட்டி வைத்துவிட்டு அந்தப் பாழும் யூனிபாரமை எடுத்து மாட்டிக் கொள்கிறது. உன் சட்டையெல்லாம் மாட்டிவைப்பதற்கு இது தானா இடம்? போ போ முதல் இந்த யூனிபார்மைக் கழற்றி எறிந்துவிட்டு அதோ, தொங்குகிறதே உன் சட்டை; அதை மாட்டிக்கொண்டு வா” என்றார். மூஞ்சியை ‘உர்’ ரென்று வைத்துக்கொண்டுபோய் ஆணியில் போட்டிருந்த தன் சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டு வந்தான் தங்கசாமி.

‘சரி; என்ன புத்திசாலியப்பா நீ! நூறு ரூபாய் நோட்டையா காணாமற் போக்கிவிட்டாய்? ஹூம். இடது ஜேபியிலேயா வைத்தேனென்கிறாய்? என்னமாய்க் காணாமல் போயிருக்க முடியும்? சேசே! நீ நன்றாய்ப்பார்த்திருக்க மாட்டாய். எங்கே இப்போ பார்” என்றார் போஸ்ட் மாஸ்டர்.

“இல்லிங்க. நல்லாப் பாத்துட்டுத்தானுங்க சொல்றேன்” என்று கூறியவண்ணம் தன்னையறியாமல் ஜேபியில் கைவிட்டான் தங்கசாமி. அவன் கையை வெளியிலெடுக்கும் போது கையுடன் வெளிவந்தது ஒரு பச்சை நோட்டு! ஆம். அதே பச்சை நோட்டுத்தான் சந்தேகமில்லை. தங்கசாமி தன் கண்களை நம்பவில்லை.

போஸ்ட்மாஸ்டர் ஐயா முகத்தில் முறுவல் தோன்றியது. “தங்கசாமி, நான் நினைத்தது சரியாயிற்று. நீ காலையில் என்னிடம் பணம் வாங்கும்போது எந்தச் சட்டை போட்டுக் கொண்டிருந்தாய் என்பது எனக்கு ஞாபகமிருக்கிறது. பணம் வைத்திருக்கிற சட்டையை ஆணியில் மாட்டிவைத்துவிட்டு, இந்தத் தரித்திரம் பிடித்த யூனிபார்மில் போய்த் தேடினால் அது என்னமாகவடா அகப்படும்? என்றார் அவர். பல்லை இளித்தவண்ணம் போஸ்ட்மாஸ்டர் ஐயாவுக்குக் கும்பிடு போட்டுவிட்டுக் கடைத் தெருவை நோக்கி ஓடத் தொடங்கினான் தங்கசாமி.

★ ★ ★ ★

மறுநாள் தங்கசாமி தலை தீபாவளி கொண்டாடினான் என்று சொல்லவேண்டுவதில்லை. நல்ல புது ஆடைகளணிந்து வந்து தங்கசாமியும் அவன் மனைவியும் அன்று செய்த முதல் நமஸ்காரம் போஸ்ட்மாஸ்டர் ஐயாவுக்குத்தான்.



தென்னிந்தியாவின் பிரபல சைத்திரிகர்கள் வரைந்த ஓவியங்கள் அடங்கிய கண் காக்ஷி சாலையொன்றை டில்லியில் சென்ற மாதம் 15-ம் தேதியன்று ராஜாஜி திறந்துவைத்தார். ராஜகுமாரி அமிருதகௌரியுடன் அவர் அப்படங்களைப் பார்வையிடுகையில் எடுத்த படம்.



பங்களூரிலுள்ள ஹிந்துஸ்தான் ஏர்கிராப்ட் கம்பெனியில் தயாராகும் கிளைடர் விமானத்தின் தோற்றம்.

மாதர் மகா சபை

'குங்குமம்'

'வாடியம்மா வா, எடுத்தால் இந்த மாதிரி ஜன்மம் எடுக்கவேண்டும். நிர்விசாரம்!' என்று அங்குவந்த சாந்தாவைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே சொன்னாள் ருக்குவின் மாமியார்.

'போதும், இந்த 'ஜன்மத்தின்' மகிமையை நீங்கள் தான் புகழவேண்டும். என்னமோ காலத்தைப்போக்கிக்கொண்டு எல்லோரையும் போல நானும் ஒரு மனுஷி என்று பிகுவை விடாமல் 'வளைய வந்து'கொண்டிருக்கிறேன்' என்று அலுத்துக்கொண்டே பதில் சொன்னாள் சாந்தா.

'சரிதான்' நீயே இப்படிச் சொல்ல ஆரம்பித்துவிட்டால் எங்களைப்போன்றவர்களுடைய கதியெல்லாம் என்ன ஆகிறது?' என்றாள் பானு.

'நீயே என்று சொல்வதைப் பார்த்தால், எனக்கு தலையில் கொம்பு, 'கிம்பு' முளைத்திருக்கிறதா என்ன?' என்றாள் வசந்தா.

'கொம்பு முளைத்திருக்கிறதோ இல்லையோ, இப்போதைக்கு சுயேச்சையாக நிர்ப்பந்தம் ஒன்றும் இல்லாமல் உன் இஷ்டப்படி வரவும் போகவும் அகமுடையான் சுதந்திரம் கொடுத்திருக்கிறானே அது ஒன்று போதாதோ? எங்களைப் போலவா? வேலையையெல்லாம் முடித்துக்கொண்டு ஒரு இரண்டு நிமிஷ காலம் பொழுது போக்காக இருந்துவிட்டு வருமோவென்றால், பின்னோடு தேடிக்கொண்டு வருவதற்கு?' என்றாள் விமலா.

'என்னடியம்மா என்று பார்த்தேன். இதற்குத்தானா இந்த பூர்வ பீடிகையெல்லாம். இக்கரைக்கு அக்கரை பச்சை என்கிறார்களே, இதைத்தான் போலிருக்கிறது. நான் இஷ்டமானபடி வருகிறதும், என் பின்னோடு 'அவர்' என்னைத்தேடிக் கொண்டு வராமல் இருப்பதும் உங்களுக்குப் பெரிய ஆச்சரியமாக இருக்கிறது. அந்த 'சுதந்திரத்தின்' பவிஷு எனக்கல்லவோ தெரியும்!' என்றாள் வசந்தா.

'என்னடி அப்படிச் சொல்லிவிட்டாய்?' என்று ஏமாற்றம் நிறைந்த தொனியில் கேட்டாள் ருக்குவின் மாமியார்.

'ஒன்று' பக்கத்து வீட்டு பங்காரு ஸ்வாமி வேறு இடத்துக்குக் குடி போகவேண்டும் அல்லது நாங்களாவது ஜாகை மாற்றவேண்டும். இந்த இரண்டில் ஏதாவது ஒன்று நடைபெறுதவரையில் எனக்கு விமோசனமில்லை' என்று யாரும் எதிர்பாராத ஒரு 'குண்டை'த் தூக்கியெறிந்தாள் வசந்தா.

'நன்றாகத்தானிருக்கிறது வேடிக்கை. எங்கள் எதிர்வீட்டு ஏகாம்பர மாமா கடவுள் புண்ணியத்தில் ஜாகை மாற்றாமல் அங்கேயே இருக்கவேண்டும் என்று நான் பொழுது விடிந்தால் இரண்டு வேளையும் பெருமாளை வேண்டிக்கொண்டிருக்கிறேன். நீயோவென்றால் உங்கள் பக்கத்து வீட்டு பங்காரு ஸ்வாமி எப்பொழுதடியம்மா ஜாகை மாற்றப்போகிறார் என்று பகவானை வேண்டிக்கொண்டிருக்கிறாய். நன்றாகத்தானிருக்கிறது வேடிக்கை!' என்றாள் சரோஜா.

'ஏன், பங்காருஸ்வாமி என்ன செய்கிறார்? அவர் எதற்காக ஜாகை மாற்ற வேண்டும்? வீட்டிலுள்ள இதர குடித்தனக்காரர்கள்தான் தொந்தரவு கொடுக்கிறார்கள். பக்கத்து வீட்டுக்காரர்களும் ஆரம்பித்துவிட்டார்களா?' என்றாள் ருக்குவின் மாமியார்.

எங்கள் வீட்டிலுள்ள இதர குடித்தனக்காரர்களால் எங்களுக்குக் கொஞ்சம்கூடத் தொந்தரவே கிடையாது மாமி. பாவம்! வீணிற்காவது அவர்கள்மேல் பழி சொல்லக்கூடாது. எங்களுக்கு எமனாய் வந்திருப்ப

தெல்லாம் அந்த பக்கத்து வீட்டு பங்காருஸ்வாமிதான். எமன் கூட ஒரு செகண்டு, இரண்டு செகண்டு ஏமாந்தாலும் ஏமாந்துவிடுவான். இந்த பங்காருஸ்வாமி ஒரு செகண்டுகூடத் தாமதிப்பதில்லை. ரொம்ப 'பங்ச்சுவல்' என்றாள் வசந்தா.

'என்னடி புதிர் போடுகிறாய்?' என்றாள் விமலா.

"என்னடி பங்காருஸ்வாமி மீது அவ்வளவு ஆத்திரம் உனக்கு?" என்றாள் ருக்குவின் மாமியார்.

எனக்கென்னவோ அந்த மனுஷனைக் கண்டால் அப்படிப்பட்ட ஆத்திரம் வருகிறது. மாமி, துளி இங்கிதம் தெரியப் போகிறது! சதா சர்வகாலமும் வம்பளப்பேதானு! அதற்குத் துளி ஓய்ச்சலொழிவு இருக்காதோ? காலையில் எழுந்தவுடனே, மனுஷன் காப்பி சாப்பிடுகிறானோ இல்லையோ? பேபர் வந்துவிட்டதா? அடடா தெரியாமல் போய்விட்டதே என்று சொல்லிக்கொண்டே மனுஷன் இவருடைய கணவன் ஆபீஸ் ரூமில் வந்து உட்கார்ந்துவிடுவான். பேப்பரை, இவரையும் பார்க்கவிட மாட்டான்.

தானும் முழுவதையும் பார்க்க மாட்டான். முக்கியமான ஒரு விஷயத்தைப் படிப்பான். அவ்வளவுதான், அதைப்பற்றி சர்ச்சை செய்ய ஆரம்பித்துவிடுவான். ஹைதராபாத் சமஸ்தானத்தின் பணத்தை பணம் என்று கருதாமல் லெயிக் அலி மந்திரிசபை, கண்டபடி லண்டனிலும் பாகிஸ்தானிலும் உள்ள ஏஜெண்டுகளுக்கு வாரியிறைத்திருக்கும் விவரத்தை பத்திரிகையில் படித்துவிட்டு, 'என்ன அக்கிரமம் பார்த்தீர்களா? இவர்களை சும்மா விடுவார்களென்று நினைக்கிறீர்கள்? சரியான தண்டனை கொடுப்பார்கள்' என்பார். 'ஆமாம், ஏதாவது தண்டனை கொடுக்காமல் விடமாட்டார்கள்' என்பார் இவர். 'ஏதாவதாவது! அதென்ன அப்படிச் சொல்கிறீர்களே! கோவாவை விலைக்கு வாங்க பேச்சு வார்த்தை நடத்துவதற்காக ஒரு பேர் வழிக்கு 10000 பவுனும். காரணமே இல்லாமல் ஒரு பேர் வழிக்கு 5000 பவுனும். என்ன அக்கிரமம் ஸார்! இதற்குப் போய் ஏதாவது என்று சொல்கிறீர்களே! சரியானபடி தீட்டிவிடுவார்கள், பார்த்துக்கொண்டிருங்கள். சமஸ்தான இலாகா படேலிடம்தான் இருக்கிறது. கவனமிருக்கட்டும்" என்பார்.

'அதற்குமேல் என்ன சொல்வது? ஆமாம், ஆமாம் என்று தலையை ஆட்டிவைப்பாராக்கும்' என்றாள் சரோஜா.

'இல்லாவிட்டால் விடுவாரா என்ன! அவர் சொன்னதையே தான் கடைசிவரையில் சொல்லிக்கொண்டிருப்பார். சரி என்று ஒப்புக்கொண்டால், அதிலும் திருப்தியடையமாட்டார். அவர்கள் செய்திருக்கிற ஒரு அக்கிரமத்துக்கு சித்திரவதை செய்யவேண்டும். ஸார்! என்ன சொல்கிறீர்கள்?' என்பார்.

'இதுவே நாம் இப்படியெல்லாம் செய்து அவர்கள் கையில் சிக்கிக்கொண்டால் அவர்கள் எதையும் செய்வார்கள். நம்மவர்கள் கொஞ்சம் பெருந்தன்மையுடன்தான் நடந்துகொள்வார்கள்' என்பார் இவர்.

'இப்படிச் சொல்லிச் சொல்லித்தான் நம் தேசமே குட்டிச் சுவராய்ப் போய்விட்டது. அவர்கள் அங்கே செய்திருக்கிற ஒரு அநியாயம், அராஜகச் செயல்கள், நினைத்துக்கொண்டால்கூட மனசுகொதிக்கிறது ஸார்! அப்படிப்பட்டவர்களிடம் பெருந்தன்மை காட்டுகிறதாம்', என்று கண்களில் தீப்பொறி பறக்கப் பேசுவார். உதடுகள் துடிக்கும். ஸாக்ஷாத்



"..........முக்கியமான ஒரு விஷயத்தைப் படிப்பான்.........."

நரஸிம்மாவதாரமாகவே காட்சியளிப்பார். 'நமக்கேன் இந்த வீண் வம்பெல்லாம்' என்று எண்ணிக்கொண்டு, 'வாஸ்தவந்தான், சும்மா விடமாட்டார்கள்' என்று சொல்லி, மீண்டு வருகிற பாடு தெய்வமறியும்' என்றாள் வசந்தா.

'பெரிய 'கண்டத்திலிருந்து' தப்பித்துக்கொள்கிற மாதிரி தான்' என்றாள் ருக்கு.

'அதோடு விட்டால் பரவாயில்லையே. அடுத்தபடி பர்லின் பிரச்னைக்கு ஒரு தாவு தாவுவார். இன்றைய செய்திப்படி பார்த்தால் யுத்தம் இந்த வாரத்திலேயே வந்துவிடும் போலிருக்கிறதே உங்கள் அபிப்பிராயம் என்ன?' என்பார். 'யுத்தமாவது, கித்தமாவது, ஆறு மாசமாக இப்படித்தான் இருக்கிறது. அதெல்லாம் வீண் மிரட்டல் சார்!' என்பார் இவர். 'இனிமேல் அந்தமாதிரி அசிரத்தையாய் நினைத்துவிடாதீர்கள். ரொம்ப மீறிப் போய்விட்டது. யுத்தம் வந்தே தீரும்' என்பார். 'பொதுவாகப் பார்த்தால் அப்படித்தான் தோன்றும்' என்று இவர் சொல்லி முடிப்பதற்குள், 'பொதுவாகவாவது தனியாகவாவது கட்டாயம் வந்தேதீரும். என்பார்' என்றாள் வசந்தா.

'வந்து தீர்ந்துவிட்டுப் போகிறது' என்றாள் ருக்கு.

'வேறு வழி? ஒப்புக்கொள்ளாவிட்டால் அந்த யுத்தம் நம்ம வீட்டு அறையிலேயே நடக்க வேண்டியதுதான். மறு பேச்சு பேசாமல் ஒப்புக்கொள்வார். இத்துடன் காலைப் படலம் முடியும். ஆபீசுக்கு நேரமாகிவிடும். அவர் எழுந்து போய்விடுவார். சாயங்காலம் ஆபீசிலிருந்து வந்து இவர் வருகையைக் கண்குத்தி பாம்புமாதிரி பார்த்துக் கொண்டிருப்பார். இவர் வந்தவுடனே வீட்டுக்கு வந்து சேர்ந்துவிடுவார். அவ்வளவு

"......................கிடையாது போ ?...என்றேன்.................."

தான் ராஜீய விஷயங்கள்தான். ராத்திரி சாப்பிடப் போகிற வரை ஓயாது. சாப்பிட்ட பிறகு வந்து ரொம்ப நாழி பேசிக் கொண்டிருப்பார். பாவம்! இவருடைய வேலையெல்லாம் கெட்டுவிடும். அவர் வருவதற்குள் கட்டுரையை எழுதி முடித்துவிட வேண்டுமென்று அவசரமாய் பத்திரிகைக்கு கட்டுரை எழுதிக்கொண்டிருப்பார். 'மன்னவன்' பூஜை வேளையில் கரடி புகுந்தமாதிரி வந்துகுதிப்பான் பாவம்! ஏதோ எழுதுகிறார். நாம் இப்பொழுது தொந்தரவு செய்யக்கூடாதென்று ஜாடையாக நழுவமாட்டான். அரை மணியோ, ஒரு மணியோ தான் பேச வந்ததைப் பேசிவிட்டுத்தான் போவான். 'பங்காரு ஸ்வாமி என்றால் சிம்ம சொப்பனம்தான். எங்களுக்கு ஒரு வேலை ஆக விடமாட்டான்' என்றாள் வசந்தா.

'அவனுக்கு ஒன்றும் வேலை கிடையாதோ?' என்றாள் ருக்குவின் மாமியார்.

அவனுக்கு என்ன மாமி, இவரைப்போல் ஒரு பத்திரிகையை நடத்தியாக வேண்டிய

பொறுப்பார்? அவனுக்கு ரயில்வே ஆடிடர் ஆபீசில் வேலையாம். காலையில் பத்து மணிக்கு வீட்டை விட்டுக் கிளம்பினால் சாயங்காலம் ஐந்து அடிப்பதற்கெல்லாம் வீடு வந்து சேர்ந்து விடுகிறான். ஆபீசில் செய்கிற வேலை தவிர வேறு ஒரு வேலையும் கிடையாது. மாசம் இருநூறோ, இருநூற்றி ஐம்பதோ சம்பளம்,' என்றாள் வசந்தா.

'அப்படிப்பட்டவர்களிடம் படுவது ரொம்ப கஷ்டந்தான்' என்றாள் ருக்குவின் மாமியார்.

'அந்தக் கஷ்டத்தைச் சொல்லியே முடியாது. 'அவரிடம்' (கணவனிடம்) தனிமையில் பேச ஒரு நிமிஷம்கூடக் கிடைக்காது எனக்கு. எத்தனை நாழி இந்தமாதிரியான பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டு வீட்டில் 'மொட்டு மொட்டு' என்று உட்கார்ந்துகொண்டிருப்பது? பேசாமல் எழுந்து இங்கு வந்து விடுவேன்' என்றாள் வசந்தா.

'பங்காருஸ்வாமி என்னவோ இந்த 'யுகத்துக்கு' வீட்டை விட்டு நகரப் போவதில்லை. நீ எத்தனை நாழி இங்கு உட்கார்ந்திருந்தால்தான் உன்னைக் கேட்பார் யார்?' என்றாள் பானு.

'மாமி என்னவோ, எனக்கு சுதந்திரம் கிடைத்திருக்கிறது என்று சொன்னாரே, அதன் தத்துவம் இவ்வளவுதான்' என்றாள் வசந்தா.

'உங்கள் ஏகாம்பர மாமா என்ன சொல்கிறார்?' என்று சரோஜாவைப் பார்த்துக் கேட்டாள் ருக்குவின் மாமியார்.

'அவரும் தொண தொணவென்றுதான் பேசுவார். இருந்தாலும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருப்பார்.' உலகத்திலே இந்த ஜனங்களுடைய ஒரு முட்டாள்தனமான எண்ணத்தைப் பாருங்கள். தெருவிலே ஒருவன் சாத்துக்குடி பழம் விற்றுக்கொண்டு வருகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனைக் கூப்பிட்டு 'டஜன் என்ன விலை?' என்று கேட்கிறோம். 'மூன்று ரூபாய்' என்று நாக்கில் 'நரம்பு இல்லாமல்' சொல்கிறான். அது ஒரு ரூபாய்தான் மதிக்கக்கூடியது. ஆகவே 'ஒரு ரூபாய்க்குக் கொடுப்பாயா?' என்றால் 'வீங்கற (வாங்குகிற) ஆளைப்பார்! ஒரு ரூபாய்க்கா வேண்டும் ஒரு ரூபாய்க்கு!' என்று ஒரு கர்ஜனை செய்வான். 'கோபித்துக் கொள்ளாதே அப்பா. இஷ்டமிருந்தால் கொடு. இல்லா விட்டால் போ. எதற்காக கோபித்துக் கொள்கிறாய்' என்று பயந்து பதில் சொல்லி அவனை அனுப்பி விடுகிறோம். ஒரு ரூபாய்மதிப்புள்ள பொருளை அவன் மூன்று ரூபாய் சொல்லலாமாம். அதற்கு ஒன்றும் கேள்வி முறை இல்லை. அதை நாம் ஒரு ரூபாய்க்குக் கேட்டால் அவன் கோபித்துக் கொள்கிறான். இது எந்த நியாயத்தைச் சேர்ந்ததோ தெரியவில்லை. இதே மாதிரிதான். இன்று காலை ஏதோ அவசரமாகஎழுதிக்கொண்டிருந்தேன். பிறகு இரண்டு, மூன்று நான்கு பேர்கள் வந்தார்கள். தலைக்குக் கொஞ்சம் பிச்சை போட்டு அனுப்பச் சொன்னேன். பிறகு ஐந்தாவது பேர்வழியாக ஒரு நரிக் குறத்தி வந்தாள். 'கிடையாதுபோ' என்றேன். அவள் என் பேச்சைக் கேட்காமல் தெருவில் நின்று கூச்சல் போட்டுக்கொண்டிருந்தாள். நான் எழுதுவதற்குப் பெரும் தொந்தரவாக இருந்தது. நல்ல படியாகப் போகப்போகிறாயா? இல்லையா?' என்றேன். அவள் கேட்கவே இல்லை. மேன்மேலும் கூச்சல் போட்டுக்கொண்டே இருந்தாள். பிறகு ஒரு டம்ளரில் வெந்நீரைக் கொண்டு வந்து அவள்மீது ஊற்றினேன். உடனே ஓவென்று கூச்சல் போட்டாள். அடுத்த நிமிஷம் எங்கள் வீட்டு வாசலில் ஒரு பெரும் கும்பல் கூடிவிட்டது. 'இரக்கமே இல்லாத மனுஷன் ஸார்! அரிசி இல்லாவிட்டால் ஒரு காலணா போட்டு அனுப்பினால் ஆஸ்தியா போய்விடும்?' என்றார் ஒருவர். 'காலணாவே வேண்டாம் ஸார். இங்கே பிச்சை கிடையாது என்று கொஞ்சம் பொறுமையுடன் அனுப்பக்கூடாதோ? வெந்நீரை ஊற்றுவதாவது! ரொம்ப அக்கிரமம்!' என்றார் இன்னொருவர். இந்த மாதிரி தலைக்கு ஒரு அபிப்பிராயம் சொல்லித் தீர்த்துவிட்டார்கள் பிச்சைக்காரிக்குப் பரிந்து. எப்படி இருக்கிறது நியாயம்! நூறு பேர் வந்தால் நூறு பேருக்கும் போட்டு அனுப்ப நமக்கு என்ன ஸார் சக்தி? இது தெரியவில்லையே ஜனங்களுக்கு' என்று இந்தமாதிரி ஏதாவது ரஸமான விஷயங்களைச்சொல்லிக்கொண்டிருப்பார்' என்றாள் சரோஜா.

'உண்மையிலேயே வாழ்க்கைக்கு அத்தியாவசியமான விஷயங்கள்தான்' என்று ருக்குவின் மாமியார்சொல்லிக்கொண்டிருக்கையில், யாரும் எதிர்பாராத விதமாக வசந்தாவைக் கூப்பிட வசந்தாவின் அகமுடையான் அங்கே வந்து சேர்ந்தான். எல்லோரும் பிரமித்துப் போய் எழுந்துவிட்டார்கள்.

பெண்மை, அழகு, நாகரிகம்

ஸ்ரீமதி லட்சுமி அம்மாள்

4

கங்கா-ஸ்நானமும் நாக்குத் தவமும்

★

நான் 'கங்கா ஸ்நானம் ஆச்சா?' என்று தோழி கமலாவைக் கேட்ட அதே சமயத்தில், சிறுவனான ராமு தன்தோழனான சோமுவைப் பார்த்து, 'நீ வெடி போட்டாச்சா?' என்று ஆவலாய் விசாரித்தான். இரண்டு விசாரிப்பும் தீபாவளியைப் பற்றித்தான் என்பது தெரிந்த விஷயமே.

தீபாவளிப் பண்டிகையென்ருலே, தீபாவளி வெடிகளும் மத்தாப்புகளும் பட்சணங்களுந்தான் சிறுவர்களுக்கு. பெரியவர்களுக்கோ......அதிலும் பெண்களுக்கோ — தீபாவளியின் கங்கா ஸ்நானமும் பட்சணங்களும் புதிய புதிய புடவைகளும்தான். ஆகவே, கமலா கங்கா ஸ்நான விசாரணைக்குப் பதில் சொல்லும் போதே, தான் வாங்கியிருக்கும் மைசூர் ஸில்க் வகைகளைப் பற்றியும் காஞ்சீபுரம் பட்டுப்புடவையைக் குறித்தும், அகத்துக்காரர் வாங்கியிருக்கும் ஜரிகை அங்கவஸ்திரங்களைக் குறித்தும் பேச ஆரம்பித்துவிட்டாள். அவளுடைய புதல்வன் மட்டும் கதராடை வாங்கினானும்; கதர் உடுப்புகள் தைத்துக்கொண்டானும்.

'அவன் ஒருவனாவது உங்கள் வீட்டில் நரகாசுரனோடு போர் தொடுத்திருக்கிறான்!' என்றேன் நான் புன்னகையுடன். நான் சொன்னது ராமுவின் காதில் விழுந்ததும், 'யாரம்மா நரகாசுரன்? அவனைத்தான் செங்கோட்டையில் பிடித்து அடைத்துவிட்டார்களாமே!' என்று சொல்லிக் கொண்டே வந்தான். கமலா சிரித்துக்கொண்டே, 'பாரடி உன் பிள்ளையை! இப்போதே அரசியல் பேசுகிறான் குண்டர் தலைவனை ரஜ்வி கைதியானதும் தெரிந்திருக்கிறது!' என்ருள்.

ராமுவோ, 'அவன்தானே நரகாசுரன்?' என்று மறுபடியும் கேட்டான். அதற்கு நான், 'அவன் ஒருவன்தானா நரகாசுரன்? வேறு நரகாசுரர்கள் இல்லையா? கள்ளக்கடை வியாபாரி......' என்று நான் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, ராமு குறுக்கிட்டு, 'நானும் சோமுவும் வெடி போடப் போகிறோம். வெடியைக் கண்டால் ஓட்டந்தான் நரகாசுரனுக்கு!' என்று சொல்லிக் கொண்டே ஓட்டம் பிடித்தான்.

கமலா என்னை நோக்கி, 'கள்ளக்கடை முதலாளி மட்டுமா நரகாசுரன்? வகுப்புவாதப் பூசலைத் தூண்டி விடுகிறவர்கள் கிருஷ்ண பரமாத்மாவைச் சேர்ந்தவர்களா? சாதிச் சண்டை போதாதென்று நமது நாட்டிலும் இனச் சண்டையைக் கிளப்பி விடச் சிற்சிலர் முயன்று வருகிறார்களல்லவா? முயற்சி பயன் படாவிட்டாலும் முயற்சிக்குக் குறைவில்லையே? தென் ஆப்பிரிக்காவில் நிறப் பித்தமும் இனப் பித்தமும் தீரவேணுமென்று மகாத்மா காந்தி சத்தியாக்கிரக ஔஷதப் பிரயோகம் செய்து பார்த்தார். அங்கே இன்னும் பித்தம் தெளியவில்லை அந்த மருந்து இந்தியாவில் பலித்துவிட்டது: அடிமை மனப்பான்மையை ஒழித்துச் சுதந்திர கங்கையைக் கொண்டு வந்து விட்டது. எனினும், நாம் இன்னும் நமது சுதந்திரத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. பகீரத காந்தி கங்கை கொணர்ந்தும், 'கங்கா' ஸ்நானம் ஆகவில்லை!' என்ருள்.

"சரி சரி, "கங்கா ஸ்நானம் ஆச்சா?'[3] என்ற என் கேள்விக்குச் சரியான பதில் கொடுத்து விட்டாயே!' என்றேன் நான்.

'நான் சொன்னதில் ஏதாவது பிசகு இருக்கிறதா? இருந்தால் திருத்திக் கொடு'

'உண்மைதானம்மா! தீபாவளியில் கங்கா ஸ்நானம் என்ருல், சுகமாக எண்ணெய் ஸ்நானம் செய்து, சுத்தமான உள்ளத்துடன் பண்டிகை கொண்டாடுவதுதான். அப்படியே சுதந்திர இந்தியாவும் கங்கா ஸ்நானம் செய்துகொள்ள வேண்டியதுதான்—அதாவது தன் பொது வாழ்வைப் புனிதமாக்கிக்கொள்ள வேண்டும். அப்படியானால்தான் கிடைத்த சுதந்திரம் உள்ளபடியே நிலைபெறும்' என்றேன் நான்.

நான் சொல்லி முடித்தேனோ இல்லையோ, ராமுவும் சோமுவும் கைகோத்துக்கொண்டு,

காசிக்குப் போனாலும்–
அகப்பேய்!
கருமம் தொலையாதே,
கங்கை குளித்தாலும்-அகப்பேய்!
எங்கள் குறை போச்சோ!

என்று பாடிக்கொண்டே வந்தார்கள்.

அவர்கள் போனதும் கமலா, 'குறைகளையும் கழுவிச் சுத்தம் செய்துகொள்வதுதான் கங்கா ஸ்நானம்போலிருக்கிறது. இந்தத் தத்துவம் இந்த அறியாப்பிள்ளைகளின் பாட்டிலும் காணக் கிடைக்கிறதே!' என்றாள்.

'அப்படித் தானம்மா! நம்முடைய நாட்டில் தத்துவத்தைக் குழந்தைப் பாடல்களிலும் காணலாம்; தெருவில் பிச்சைக்காரன் பாட்டிலும் காணலாம். கங்கா ஸ்நானத்தை வேறு ஆற்று நீரிலும் செய்யலாம், ஊற்று நீரிலும் செய்யலாம். ஏன், இப்போது குழாய்த் தண்ணீரில்தானே நாம் கங்கா ஸ்நானம் செய்து வந்திருக்கிறோம்?' என்றேன் நான்.

அதற்குக் கமலா, 'அப்படியெல்லாம் தத்துவத்தைப் பரப்பி வைத்ததால், குழாய்த் தண்ணீர் கங்கையாகி விடவில்லையே; கங்கையும் கூவமானதுதானே மிச்சம்!' என்று பதில் சொன்னாள்.

'எனினும் உயர்ந்த தத்துவங்களையும் லட்சியங்களையும் மலை முதல் கடல்வரையிலும் பரப்பி வைக்க முயன்றது நமது தேசம் என்பதை ஒப்புக் கொள்ளலாமல்லவா? அதனால் நமது பண்பாடு விரிந்து உயர்ந்து வளர்ந்து வந்திருக்கிறது." இந்தியா ஒன்று" என்ற ஒருமையுணர்ச்சியும் வாடாமல் தழைத்து வந்திருக்கிறது. உதாரணமாக இந்தச்சென்னப்பட்டினத்தில் "மந்தாகினி" என்று ஒரு குளம் இருக்கிறதே பார்த்திருக்கிறாயல்லவா? "மந்தாகினி" ன்றால் கங்கை. இப்படி வட நாட்டுக்கும் தென்னாட்டுக்கும் ஒருமை .....' என்று நான் சொல்லிக்கொண்டிருக்கும்போதே கமலா குறுக்கிட்டு, 'மந்தாகினியா? நான் கேள்விப்பட்டதும் இல்லையே' என்றாள்.

'அதுதானம்மா முண்டக்கண்ணி! முண்டக்கண்ணி அம்மனையும் குளத்தையும் அறியாதவர் உண்டோ? இங்கே நம்முடன் வந்து தங்கியிருக்கும் தெலுங்கர்களுக்கும் தெரிந்திருக்குமே!'

கமலா சிரித்தாள். 'மதுரை தெரியுமா என்றால், குதிரை தெரியாதா, நாலு காலும் வாலுமாய்!–என்கிறாயே "மந்தாகினி" தெரியாதென்றால், "இவ்வளவுதானா? முண்டக்கண்ணி தெரியாதா?" அந்த முண்டக்கண்களைப் பார்த்தாலும் தெரியவில்லையா?—என்றெல்லாம் பேசுகிறாய் "கங்காஸ்நானத்தால் மூளையையும் சுத்தம் செய்துகொண்ட அழகோ இது?' என்றெல்லாம் சரமாரியாய்ப் பொழிந்துவிட்டாள்.

சரஞ்சரமாய் வெடிகளை ராமு கொளுத்தினால், எவ்வளவு பொறுமையாய்ப் பார்த்துக்கொண்டிருப்பேனோ, அவ்வளவு பொறுமையாய்த் தோழியின் சரவெடிகள் வெடிப்பதையும் கேட்டுக் கொண்டிருந்தேன். பிறகு சாவதானமாக 'மந்தாகினியம்மன்தான் முண்டக் கண்ணியம்மன்!' என்றேன்.

'முண்டக்கண்ணி (தாமரைக் கண்ணி, அல்லவா முண்டக் கண்ணி) அப்படித் தானே சொல்லுகிறார்கள் வடமொழி தெரிந்தவர்கள்?'

'இல்லை, இல்லவே இல்லை. மந்தாகினிதான் முண்டக்கண்ணியாகச் சிதைந்து, இப்போது முண்டகக் கண்ணியும் ஆகப் பார்க்கிறது. ஹாம்டன் வாராவதி அம்பட்டன் வாராவதியாகி பார்பர்ஸ் பிரிட்ஜும் ஆன கதைதான்!'

கமலா ஆச்சரியமாய்க் கண்களை மலர விழித்தாள். 'நீயும் முண்டக்கண்ணியோ, முண்டகக் கண்ணியோ ஆகிவிடுவாய்போலிருக்கிறதே!' என்றேன் நான்.

'அது இருக்கட்டும் தீபாவளியில் கங்காஸ்நானம்தான் முக்கிய அம்சமோ? "தீபாவளி" என்ற பெயரைப் பார்த்தால், தீபங்களை வரிசை வரிசையாய், அழகாய் வைத்துப்பண்டிகை கொண்டாடுவதுதான் விசேஷம் என்று தோன்றுகிறதே!'

'நீ சொல்வது ரொம்பவும் சரி தீப வரிசைகளை அழகுபெற அமைத்துத் தீபாவளி கொண்டாடும் வழக்கத்தை நாம் விட்டுவிட்டாலும் வட இந்தியா இன்னும் அனுஷ்டானத்தில் வைத்திருக்கிறது. நாம் இந்த வழக்கத்தைத் திருக்கார்த்திகைக்கு வைத்துக் கொண்டோம். தீப வரிசைகளும் கங்காஸ்நானம்போல் சுத்தத்திற்கு அறிகுறிதான். தீயும் தண்ணீரும் தூய்மையின் அறிகுறிகள்: தீபாவளி கங்கா ஸ்நான விழாவாக இருப்பதோடு, பெயருக்கு இசைந்தபடி தீப விழாவாகவும் இருக்க வேண்டியதுதான்.'

'பண்டிகைகளையும் நம் இஷ்டப்படியெல்லாம் மாற்றிக் கொள்ள வேணுமா? நீயும் நானும் தீபாவளியைத் தீப விழாவாக்கி விட்டாலும் குழந்தை ராமுவுக்கும் சோமுவுக்கும் அடுத்த வீட்டுச் சிறுமி காமுவுக்கும் தீபாவளி தீப மங்கள விழாவாய் இருக்குமா? வெடி மத்தாப்பு-பட்சண விழாவாகத்தானே இருக்கும்?' என்று கேட்டாள் கமலா.

'உன் கேள்வி சரியான கேள்விதான். குழந்தைகளின் ஆனந்த உலகத்தைக் கெடுத்து வயது முதிர்ந்த கோட்டான்களைப் போல் செய்துவிடுவது பிசகுதான். எனினும், குழந்தைகளுக்கும் உத்ஸாகம் பிறக்கும்படியாகத் தீபாவளியை ஒரு தீபாலங்கார விழாவாக ஏன் செய்யக்கூடாது?' என்று பதில் கேள்வி போட்டேன் நான்.

'சௌந்தரிய பண்டிகையாகவும் இருக்கட்டும்: சுக போக–வெடி பட்சண பண்டிகையாகவும் இருக்கட்டும்—இதுதான் என். தீர்ப்பு. பண்டிகைகளிலும் புரட்சி செய்ய வேணுமா?'

'பழக்கத்திற்கு அடிமையாகவே இருந்து விடவும் வேண்டாம். விடுமுறை நாள்களைக் கழிப்பதில் வேறு வேறு முறைகளை மேற்கொள்வதில்லையா? புதுமைகண்டு அஞ்சுவதும் "பழமையெல்லாம் தவறு" என்று சொல்வதுபோல் மூடத்தனம்தான்; சித்த பலவீனம்தான்!

பண்டிகைப் பழக்கமும் குடிப் பழக்கம்போல் ஆகவேணுமா?

இடையிடையே பழைய பழக்கங்களை விட்டுப் புதிய பழக்கங்களை மேற்கொண்டு சோதனை செய்து பார்ப்பது சுதந்திர வளர்ச்சிக்கும் நமது சித்த சக்தியின் வளர்ச்சிக்கும் மிகவும் அவசியமாகும்.

பொறுமையாய்க் கேட்டுக் கொண்டிருந்த கமலா, கவலை தேங்கிய முகத்துடன் என்னைப் பரிதாபமாய்ப் பார்த்தாள். 'தீபாவளியில் தீபங்கள் போதுமா, விருந்து வேண்டுமா?' என்றாள்.

அதற்கு நான், 'யார் வேண்டாம் என்றது? விருந்தும் வேண்டியதுதான், தற்கால உலகில் மருந்தும் வேண்டியதுதான்! ஆனால், "விருந்தின் சுகம் ஒரு மணி நேரம் தான்; விவாகத்தின் சுகம் ஒரு நாள்; விவேகத்தின் சுகமோ இன்றும் இருக்கும். என்றும் இருக்கும்" என்ற சாதுரியவசனம் ஒன்றும் இருக்கிறதே, அதையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்' என்றேன்.

'நீயும் நானும் நினைவில் வைத்துக்கொள்ளலாம். இதையும் வைத்துக்கொள்ளலாம். வேறு சாதுரிய வசனங்களையும் வைத்துக் கொள்ளலாம். ஆனால், குழந்தைகள்? நீயும் நானுங்கூட நினைவில் தானே வைத்துக் கொள்கிறோம்? செயலில் கொண்டுவருவது அவ்வளவு எளிதாக இல்லையே! தன்னுடைய நாக்கு ருசியை ஒருவாறு கட்டுப்படுத்தும் தாயும், குழந்தை பட்சணத்திற்காகத் தன் முகம் பார்த்ததும், அவன் வயிற்றைப் பார்க்கிறாள், எவ்வளவு பட்சணத்தைத் திணித்து வைக்கலாமென்று! இதையெல்லாம் வருஷத்துக்கொரு பண்டிகை நாளிலும் மாற்றிச் சுதந்திர இந்தியாவிலே புரட்சி செய்ய விரும்புகிறாயா?' என்று கேட்டாள் கமலா.

'இதையெல்லாம் பின்னால் விவரமாய்ப் பேசிக்கொள்ளலாம். ஆனால், பண்டிகை நாளிலும் நாக்கைக் கட்டுப்படுத்தாமல் இஷ்டப்படியெல்லாம் விட்டுவிடக் கூடாது. விரதமே கொண்டாடாமல் விருந்து மட்டும் கொண்டாடுவது சரியன்று. விருந்து நாளில் சுவையான பண்டங்களை அளவுக்கு மீறி உண்டாலும் அது விஷம்தானே, உடல் நலத்திற்குக் கேடு விளைப்பதுதானே. செருப்புத்தைக்குஞ் செம்மான், யஜமான் காலைப் பார்ப்பது போலவும், யாசகன் உன் பணப் பையை நோக்குவது போலவும், குழந்தைமேலுள்ள சபலத்தால் அதன் வயிற்றைப் பார்க்கும் தாய், குழந்தையின் உடம்பைக் கெடுத்துத் தவறான சுவைகளிலும் பழக்கிவிடுகிறாள். இப்படி இளமையில் வந்த தவறான பழக்கம் மனிதனைத் தனக்கு அடிமையாக்கி, மருந்துப் புட்டிக்கும் அடிமையாக்கி விடுகிறது'

'ஆகையால், நாம் விரதமோ, நோன்போ அனுஷ்டித்தால் போதும்; விருந்தோ, பண்டிகையோ வேண்டாம்: ஏகாதசி போதும், தீபாவளி வேண்டாம்!' என்றாள் கமலா பரிகாசக் குரலில்.

'அப்படி நான் சொல்லவே இல்லையே! 24 மணி நேரமும், வருஷம் 365 நாளும் உணவையே நினைத்துக்கொண்டிருக்கக்கூடாது நாக்கு ருசிக்கு ஒரேயடியாக அடிமையாகிவிடக்கூடாது என்று தான் சொல்லுகிறேன். இந்த நாக்குத் தவத்தை மகாத்மா காந்தி விசேஷமாக வற்புறுத்தியிருக்கிறார். இந்தத் தவத்தைத் தீபாவளியிலும் பூர்ணமாக மறந்து விடக்கூடாது என்றுதான் சொல்லுகிறேன்.'

'சரி சரி! பண்டிகையையும் தவமாக்கப் பார்க்கிறாயா?'

'தவமென்றால் அப்படியொன்றும் நீ பயப்படவேண்டியதில்லை. பஞ்சாக்கினி மத்தியில் கிடப்பது தான் தவமா? தீபாவளியின் அழகிய தீபவரிசைகளுக்கிடையே ருசியான பட்சணங்களை மிதமாய்ச் சாப்பிடுவதும், 'பசியே உண்மையானருசி" என்று கண்டுகொள்வதும் தவம்தான். இதுவும் நாக்குத் தவத்தின் ஒரு பாதி தான்'

'அப்படியானால், இன்னும் என்ன நாக்குத் தவம் செய்ய வேண்டியிருக்கிறதோ? அதையும் பேசித் தீர்த்து விடுவோமே' என்றாள் கமலா.

'இப்படியெல்லாம் அதிகம்ப் பேசி, நம்முடைய சக்தியை விரயம் செய்து தீர்த்துவிடாமல் இருப்பதே அந்தத் தவம். "பெண்களின் ஓயாத பேச்சு" என்கிறார்கள். அந்தப்பேச்சையும் மட்டுப் படுத்திக்கொள்ள வேண்டியது தான். இந்த மாளாத பேச்சிலே சீமைப்பெண்கள் சராசரி 750 ஆங்கில வார்த்தைகளை ஹிம்ஸிக்கிறார்களாம்'

'அவ்வளவுதானா?'

'சொற்கள் 750 தான், ஆனால், பஞ்ச பூதங்களைக் கொண்டு கோடிக்கணக்கான பொருள்கள் தோன்றியிருக்கின்றனவே? அந்த ஆங்கில மாதர்களிடம் அகப்பட்டுக்கொண்ட வார்த்தைகள் ஐந்தா? 750 அல்லவா? பொருளற்ற சொற் சங்கிலிகளைப் பின்னிப் பின்னி உலகத்தையெல்லாம் அளந்துவிடுகிறார்களாம்'

இது கேட்ட கமலா சிரித்துக் கொண்டே, 'இந்தியப் பெண்களாகிய நமக்கோ தமிழ் வார்த்தைகளில் 750 கிடைக்க வில்லையே! ஆங்கில மாதர்களைப் போல் அத்தனை பேச்சுப் பின்னல்கள் பின்னமுடியுமா?' என்றாள்.

'முடியும், முடியும்; உலகப் பொருள்களெல்லாம் பஞ்ச பூதங்களின் பரிணாமங்கள்தானே! சரி, சரி, இந்த நாக்குத் தவமாகிய பேச்சுத் தவத்தைக் குறித்த 'நமது' பேச்சும் முடியாத பேச்சாய் நீண்டுகொண்டே போக வேண்டாம். நான் வெளியே போகிறேன்'

கமலாவுக்கோ சிரிப்பு அதிகமாய்விட்டது. 'இன்னும் பல நண்பர்கள் வீட்டுக்கும் போய் "கங்கா ஸ்நானம் ஆச்சா?" என்று விசாரிக்கவும், தீபாவளியின் உட்பொருளுக்கு விரிவுரை செய்யவும் தானே? நல்ல பேச்சுத் தவம் அம்மா! அங்கங்கே பட்சணம் கிடைத்தாலும் கொஞ்சங் கொஞ்சம் அப்படியப்படி ருசி பார்த்துக் கொண்டே நாக்குத் தவம் குறித்து அங்கங்கே அப்படியப் படிப் பிரசங்கமும் செய்துவிடுவாய்!' என்று சொல்லிவிட்டு, மறுபடியும் சிரித்துக்கொண்டே போய்விட்டாள்.

வேண்டாத பட்டாசு

விந்தியா

பட்டாசுக்கும் மத்தாப்புக்கும் நெருப்பு மூட்டிவிட்டு, அந்த ஒலியைக் கேட்டும் ஒளியைக் கண்டும் மகிழணுமெனக் காத்திருந்தன குழந்தைகள்.

இதற்குள் தபால் மூலம் வந்த நற்செய்தி வீட்டுப் பெரியவர்களுக்கு இன்பமூட்டிவிட்டது.

குழந்தைகளின் இன்பத்தைத் தங்கள் இன்பமாகப் பெரியவர்கள் கருதாத அதிசயம்போல, இப்போது பெரியவர்கள் மகிழ்ச்சியைத் தங்கள் மகிழ்ச்சியாகக் குழந்தைகள் கொண்டுவிட்டனர்.

"அத்திம்பேர் வரப்போறார் டோய்!" என ஆரவாரித்தனர். நற்செய்தி பத்மாவின் முகத்திற்கு ஒளி தந்தது. அவளுடைய பெற்றோரின் குரலுக்கு ஒலியைக் கொடுத்தது. அவர்களுக்கும் நெஞ்சில் ஒளி உண்டு. எனினும், பத்மா ஒளிமட்டும் கொண்ட மத்தாப்புபோல இருந்தாள். அவளுடைய தாய் தந்தையர், பட்டாசுப்போல ஒலிமிகுந்த குரலும், ஒளி தெறிக்கும் தொனியும் கொண்டவராக இருந்தனர்.

வீட்டின் முன்கட்டிலே கலகலப்பு, கும்மாளம். பின் கட்டின் முன்னணிக் கதவண்டை நின்று இந்தக் குதூகலக் காட்சியை எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தது ஒரு உருவம்.

வந்திருக்கும் நற்செய்தியின் பெரும் பங்குக்கும், மகிழ்வுக்கும் உரியவளான இளம்பெண் பத்மாவின் உருவம் அல்ல அது.

அந்தச் செய்தி கொணர்ந்த கலகலப்பில் கொஞ்சமும் பங்கு கொள்ள முடியாமல், ஏற்படப் போகும் பொறுப்புக்கு மட்டுமே உரியவளான சமையற்கார மீனாக்ஷியம்மாளின் முதிய உருவம் அது.

இன்னும் உற்சாகப் பெருக்கான பேச்சுக்கள் உதிர்ந்து கொண்டிருந்தன நடுக்கூடத்தில்.

"இதோ பாருங்கோ! தலை தீபாவளிக் கதைகளெல்லாம் படிச்சிருக்கேளோல்லியோ! அக்காவுக்கும் அத்திம்பேருக்கும் தொல்லைப் படுத்தாமல் நடந்துப்பேளோன்னோ?"

சாமிநாதனின் குரல்! என்னமோ விஷயம் புரிந்தாற்போல பெரிய குழந்தைகள் கோபியும் லலிதையும 'கொல்'லென்றார்கள். அந்தப் பக்கமாகவே நின்றுகொண்டிருந்தாள் பத்மா. இப்போது அவள் மெல்ல நகர்ந்துகொண்டுவிட்டாள். பின்கட்டுப் பக்கமாக வந்து நின்றாள்.

"ஏம்மா, பத்மா! ஆம்படையான் வருகிறதாக கடிதாசு வந்திருக்கா?"

கேள்வியைச் செவியுற்றதும் திரும்பிப் பார்த்தாள் பத்மா. மீனாக்ஷியம்மாள் ஐந்தாறு அடிகளுக்கு அப்பால் உள்ள கதவின் உட்புறமாக நின்றிருந்தாள்.

"ஆமாம்" என்றாள் பத்மா.

"கூடவே அழைச்சிண்டு போயிடப் போறாளா? வேறே ஏதாவது எழுதியிருக்காளா?" என்று மறு கேள்வி வந்தது.

"போங்கோ மாமி!............... எனக்கா தெரியும்? கேள்வியைப் பாரு கேள்வியை!" எனக் கடுகடுப்புடன் பதில் சொல்லிவிட்டு, அங்கிருந்து விரைந்தாள் பத்மா.

மீனாக்ஷியம்மாளின் முகம் சுண்டிப்போயிற்று.

ஏதோ வயதுக்கேற்ற தன் மனப்போக்கினால் ஏற்பட்ட ஆவலை அடக்க முடியாமல் கேட்டுவிட்டதற்கு அவள் அப்படிச் 'சிள்'ளென விழ வேண்டுமா?

"எல்லாம் நல்ல குணம்தான்; வாய்த்துடுக்குத்தான் கொஞ்சம்!" எனச் சொல்லிக்கொண்டாள் மனத்துள்.

ஆனால், அடுத்த வினாடி வேறொரு சமாதானமும் ஏற்பட்டது.

அவளைக் கேட்டால் பின் எப்படிச் சொல்லுவாள்? அவளைக் கேட்கலாமா? கேட்டது பிசகு. வெட்க மேலீட்டால் அவள் அவ்வாறு கடுகடுப்புக் காட்டிப் பதில் அளித்ததைத் தான் தவறாக ஏற்பது அதைவிட பெரிய தவறு..... நாணம்தான் காரணம். சுண்டின முகம் தெளிவுற்றது. மீனாக்ஷியம்மாள் மெல்ல உள்ளே போய் விட்டாள். ஜபமாலையுடன் உட்கார்ந்தாள்.

"மாமீ! மாப்பிள்ளை வருகிறதாக இன்னிக்கே நல்ல வேளை கடுதாசி வந்துடுத்து! ஒரு வாரம் இருக்கு எப்படியோ நீங்கதான் பொறுப்பா, உங்கள் மாப்பிள்ளை மாதிரி நினைச்சு, சிரத்தை வச்சு கவனிச்சுக்கணும்! என்னென்ன எப்படி செய்யணுமோ, நன்னா நடத்திடுங்கோ!"

கொஞ்சநேரங் கழித்து பத்மாவின் தாய் கூறிய பணிவான இவ்

வார்த்தைகளைக் கேட்டு, பத்மாவின் கடுமொழிகளை மன்னித்துவிட்டது, மீனாக்ஷியம்மாளின் மனசு.

"அதுக்கென்னம்மா! என்னாலே முடிஞ்சதை செய்துடறேன்! உனக்கு மாப்பிள்ளைன்னு எனக்கு மட்டும் அசலா? என் பெண் மாதிரிதான் பத்மா. அவ கல்யாணத்துக்கு இருந்து பார்க்கல்லையே அப்படின்னு நான் சொல்லல்லையா? இப்பவாவது இரண்டு பேருமா மணைமேலே உட்காரறதைப் பார்க்கப் போறேனே. அதைச் சொல்லு!...எனக்கும் செய்யறதுக்குக் கொள்ளை ஆசை தான்!" என்று பதிலளித்துவிட்டு, ஜப மாலையை மீண்டும் தூக்கிப் பிடித்தாள் மீனாக்ஷியம்மாள்.

"சரி மாமி!...நீங்க ஜபம் பண்ணுங்கோ! நாழியாயிடுத்து! சாப்பிட வந்துடுவா பத்து நிமிஷத்துலே!" என்று சொல்லிவிட்டு, சமையலறையை விட்டு வெளியே வந்தாள் ஸீதாலக்ஷ்மி.

"என்னமோ மாப்பிள்ளை வரார்னு, சந்தோஷத்துக்கு நடுவிலே குழப்பமும் பயமுந்தான் ஏற்படறது! இத்தனைக்கும் சம்பந்தின்னு யாரும்கூட வரவும் போறதில்லை, நாம்செஞ்சு அனுப்புகிற சீர்செனத்திக்குக் குத்தம் சொல்லவும் மாப்பிள்ளைக்கு யாருமில்லை! ஆனாலும், என்னமோ குழப்பமாத்தான் இருக்கு!" என்று சொன்னாள் ஸீதாலட்சுமி, தன் கணவர் சாமிநாதனிடம்.

"நல்ல பயம்! எனக்கென்னவோ என்னிக்குமே 'மாப்பிள்ளை ஸ்தானத்திற்கு அப்படிப்பட்ட பொல்லாப்புக் கொடுக்கிற மனசோ, எண்ணமோ இருக்கல்லேம்மா!...அதுக்கு ஏற்றாப் போலவே மாப்பிள்ளையும் கிடைச்சுட்டார்" என்று சொன்னார் சாமிநாதன் வெகு அனாயாசமாக.

"எனக்கும் ஏத்த மாப்பிள்ளை தான்! நான் ஒரு சம்பந்தியம்மாளைப் படைச்சிருந்தால் எனக்குச் சமாளிக்கச் சக்தியோ அனுபவமோ ஏது! 'பெப்பே'ன்னு முழிச்சுண்டு, திண்டாட வேண்டியதுதான்! சொல்லித்தரவாளும் கிடையாது' செய்து பழக்கமுமில்லே. இது ஒரு தேசம் விட்டுத் தேசம்?...முதல் வீட்டுக் கல்யாணம்! இல்லையா?...நல்லவேளை, மாப்பிள்ளை பக்கத்து மனுஷா, கிட்டின மனுஷா கிடையாது!... அப்படியும் கொஞ்சம் பயமாத்தான் இருக்கு...அவருக்கு ஒரு அதிருப்தியும் இருக்கக்கூடாதேன்னு கவலையாத்தான் இருக்கு!" என்றாள் ஸீதாலக்ஷ்மி; மீண்டும் 'கவலை' முத்தாய்ப்பு வைத்தாள்.

"அது நிஜந்தான்!...மாப்பிள்ளைக்கு திருப்தியாத்தான் எல்லாம் நடத்தணும்!...பயம், பீதின்னு



இருக்க வேண்டாமே தவிர, அவருக்கு மரியாதை, திருப்தியெல்லாம் தரணும்!...'' என்றார் சாமிநாதன்.

பிறகு ஏதோ ஆலோசிப்பவர் போல, ''உம்— ஒரு பாட்டுப் படிச்சிருக்கேன்! ரொம்பஅழகான அர்த்தம் ...'' என்று கூறி நிறுத்தினார்.

''என்னவாம் அர்த்தம்?'' என்று தூண்டிக் கேட்டாள் ஸீதாலக்ஷ்மி.

''மாப்பிள்ளைக்கு பயந்துண்டு மரியாதையாய் நடத்துகிறது எதுக்குன்னு தெரியுமா? அவரும் பிள்ளைதான், பிள்ளை மாதிரியே தான். ஆனால், எப்போதோ வீட்டிலேருந்து கோவிச்சுண்டு ஓடிப்போன பிள்ளை! பல வருஷங்கள் கழிச்சு வீட்டுக்குத் திரும்பி வருகிற பிள்ளை! மறுபடியும் ஓடிப்போயிடுவானோ. கோபம் கீபம் ஏதாவது வந்தால், மனங் கோணி மறுபடியும் மறைஞ்சுடுவானோ அப்படின்னு வீட்டாருக்குப் பயம்! கொள்ளை ஆசை அபிமானம் வச்சிருந்தாலும், பயந்து, பணிவா, மரியாதையாய் நடக்கிறாளாம் இந்தப் பிள்ளையிடம்!...எப்படி அர்த்தம்?''

சாமிநாதனின் குரல் ஓங்கியிருந்தது, இந்த விநோத வியாக்கியானத்தை உற்சாகமாகச் சொல்லுகையிலே.

வெகு ஸ்வாரஸ்யமாக விளக்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த ஸீதாலக்ஷ்மி, வியப்புடன், ''எவ்வளவு நன்னாயிருக்கு அர்த்தம்! எங்கே, எந்தப் பாட்டுலே எழுதியிருக்கு இது?'' என்று கேட்டாள்.

''என் சிநேகிதர் ஒருத்தர் எழுதின கவிதை இது. ஆனால், பாவம், அவரோட அருமையான கவிதைக்கெல்லாம் இன்னும் பேரும் புகழும் வரல்லே!''

''யாரு அவர்?''

சாமிநாதன் சொன்னார் அந்தக் கவியின் பெயரை.

அதே சமயம் பின் கட்டின் முன்னணிக் கதவண்டை மீனாக்ஷியம்மாளின் உருவம் தோன்றியது.

''இதோ வந்துட்டோம், மாமி!'' என்றாள் ஸீதாலக்ஷ்மி. குழந்தைகளின் பெயர்களைச்சொல்லிக் கூவியழைத்தாள், உணவு அருந்தணுமென்று. சமையல் உள்ளில் ஸீதாலக்ஷ்மி நுழைகையில், மீனாக்ஷியம்மாள் ஸீதாலக்ஷ்மியை நெருங்க நோக்கினாள்.

''ஏம்மா, ஸீதாலக்ஷ்மி! இப்போ உங்காத்துக்காரர் ஏதோ பேர் சொன்னாரே, அவரோட ஊர் பேர் என்னன்னு சொன்னார்? பேரூரா?'' என்று கேட்டாள்.

'ஆமாம்,பேரூர் தான்!... ஏன், உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியும்: சொந்தம்தான்! எனக்கு.........''

இதற்குள் பத்மா அறையுள் நுழைந்தாள்.

''என்னம்மா, இலை போடவேயில்லை, கூப்பிட்டாச்சா சாப்பிட!'' என்று கேட்டுக் கொண்டே வந்தாள்.

''இதோ போட்டுடறேன்!'' எனப் பரபரப்புடன் இலைக்கட்டு அருகே குனிந்தாள் மீனாக்ஷியம்மாள்.

''உங்களுக்கு அவர் என்ன சொந்தம் மாமி?'' என்று விட்டுப்போன பேச்சைத் துவக்கினாள் ஸீதாலக்ஷ்மி. விவரம் அறிய ஆவல் அவளுக்கு,

''யாரு சொந்தமா?'' எனத் திடுக்கிட்டாற்போல கேட்டாள் பத்மா.

''அப்பா ஒரு கவியுடைய பேர் சொன்னார், அவர் ஏதோ சொந்தமாம் மீனாக்ஷி மாமிக்கு!'' என்றாள் ஸீதாலக்ஷ்மி. அவள் எகத்தாளமாகவோ,கிண்டலாகவோ சொல்லவில்லை அதை. ஆனால், பத்மாவுக்கு ஏனோ வேடிக்கையாக இருந்தது.

"ஆமாம், வேறெ வேலையென்ன மாமிக்கு? எல்லார் சமாச்சாரமும் வேணும்! எல்லோர் பேச்சும் வேணும்!" என்றாள் பத்மா, வெடுக்கென.

"கண்டபடியெல்லாம் பேசாதே, பத்மா! — உனக்கு மாமியார் மாமனார்னு இல்லாட்டாலும், உலகத்தோடு, அடக்கமா பழகணும்! சொல்லுலே நிதானம் வேணும்?" என்றாள் ஸீதாலக்ஷ்மி.

"ரொம்ப சரி!" என முணுமுணுத்தாள் பத்மா.

சாமிநாதன் கைகால் கழுவிக்கொண்டு சாப்பிட வந்துவிட்டார் அங்கு, அந்த இடத்திலே நிலவிய ஒரு தினுசான நிலைமையினால், அதிகம் சந்தடியின்றி சாப்பாடு நடந்தது. சாப்பாட்டுக்குப்பின் கணவனுக்கு வெற்றிலை பாக்கு எடுத்துப்போய் கொடுத்தாள் ஸீதாலக்ஷ்மி.

"அந்தப் பேரூர் கவி சொன்னேளே, அவர் ஏதோ உறவுன்னு சொல்லவந்தாள் மீனாக்ஷியம்மா. அரைகுறைப் பேச்சிலே வந்தாள் பத்மா; மாப்பிள்ளையைத்தான் உறவுன்னு மாமி சொல்லவந்துட்டான்னு நினைச்சுட்டா போலிருக்கு! 'யார்?'ன்னு திடுக்கிட்டுக் கேட்டாள். நான் விவரமா சொன்னாலும் தன்னோட தப்புன்னு ஒப்புக்க இஷ்டமில்லே! "மாமிக்கு எல்லாவம்பும் பேச்சும் வேணும்னு!" சிடுசிடுத்தாள். என்னமோ சிறுபிள்ளைத்தனம்: எல்லாம் தெரிஞ்சும் இருக்கு! தெரியாமலும் இருக்கு!" என்று சொல்லி மெல்லச் சிரித்தாள் ஸீதாலக்ஷ்மி.

"அவள் அவரைப் பத்தியே நினைச்சிண்டிருப்பாளோல்லியோ, கட்டாயம் தோணியிருக்கும், "மாப்பிள்ளையா சொந்தம்னு!" ஆனல், ஏன் திடுக்கிடுவானேன்! ஏழைகள் உறவுக்காரா இருக்க மாட்டாள்னு அவள் நினைப்பானேன்! அது என்ன இழிவா? எனக்குச் சொந்தக்காரா எத்தனை பேர் ஹோட்டல்லே வேலை செய்யறு, பரிசாரகம் செய்யறு. அவளுக்குத் தெரியாதாக்கும்! நான் என்னமோ இந்த கோதாவரி ஜில்லாவுக்கு வந்துட்டேன், அந்தஸ்தாவும் இருக்கேன்! பத்மாவுக்கு ஒருவிவரமும் தெரியாது!... சொல்லணும்!' என்று கூறினர் சாமிநாதன்.

"உம்!... அவளுக்கு இன்னிக்கு உள்ளூரச் சந்தோஷம். அதை மறைக்க சிடுஞ்சி வேஷம் போடறு!...அதுவும் தெரியறது!" என்றாள் ஸீதாலக்ஷ்மி, மென்னகை முகத்தில் ஊசலாட.

"அதுவும் தெரியும் எனக்கு! நீ போ சாப்பிட! மாமியும் காத்துண்டிருப்பா!" என்று சொன்னர் சாமிநாதன்.

கீழே விழுந்திருக்கும் வெற்றிலைக் காம்புகளைப் பொறுக்கிக் கையில் எடுத்துக்கொண்டு, அங்கிருந்து நடந்தாள் ஸீதாலக்ஷ்மி.

சமையலறையில் தலைதீபாவளிக் கோடீகளும் திட்டங்களும் பற்றி பேச்சுத் துவங்கியது.

சில வினாடிகள் யோசனை செய்பவர்போல அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்த சாமிநாதன், பத்திரிகையைக் கையில் எடுத்தார். அதிலே ஈடுபட்டார்.

தீபாவளிக்கு தீப வரிசைகளையும், தீப ஒளிகளையும் வீடுமுழுதும் வைத்துக்கொண்டாடும் வழக்கம் வட நாட்டில் இருப்பதுபோல தென்னாட்டுத் தமிழ் நாட்டில் இல்லை. ஆனல், மாப்பிள்ளையை இந்தப் பண்டிகைக்கு அழைத்து வைத்துக்கொண்டாடும் வழக்கம் தமிழருக்கே உரித்தான சம்பிரதாயம். விளக்குகளும், அதன் ஒளியும் வேண்டாம், மாப்பிள்ளை இருக்கையில் வீடு முழுதும் வீசும் ஒளியும் வீட்டாரின் குதூகல முகப்பிரகாசமுமேபோதும் என்று தான் தமிழர் ஏற்படுத்திக்கொண்டனரோ இந்த வழக்கம்?

மாப்பிள்ளை ராஜன், ராஜா போலவே வரவேற்கப்பட்டான். ராஜபாட்டையைப்போல அலங்காராதி சௌகரியங்கள் செய்யப்பட்டுத் தயாராயிருந்த மாடியறைக்கு அழைத்துச்செல்லப்பட்டான். அரசனின் வருகைக்கு முன்னும், அரசனின் வருகையின் போதும் எழும் குதூகல ஆரவாரம்போல வீட்டிலே ஆரவாரமும், குதூகலமும் ஓங்கி ஒலித்தன. அரச சமுகத்திலே எழக்கூடிய ஆவலும், ஆர்வமும், பணிவும் பாசமும் எழுந்தன அனைவருள்ளத்திலும். சாமிநாதன் ரயிலடிக்குப்போய் மாப்பிள்ளையை அழைத்துக்கொண்டு வந்தார். வாசற்படிக்கு உட்புறமாக நின்றிருந்த ஸீதாலக்ஷ்மி நாணிக்கோணித் தயங்கி வார்த்தைகளை விழுங்காமல், நேர்மையாக மாமியார் உரிமையுடன் நிமிர்ந்து நோக்கி, மாப்பிள்ளையை வரவேற்றாள். ஒதுங்கி நின்று நாணி ஒளியாமல், அடக்கமாக மட்டும் சுவருக்கு ஒட்டினாற்போல நின்றிருந்த பத்மா, ஒருமுறை கணவனை நேரடியாகப் பார்த்துச் சந்தித்ததும், மெள்ள நகர்ந்துகொண்டாள். குழந்தைகள் வண்டிச் சத்தம் செவியுற்றதும் வாசற்படியில் குழுமி அத்திம்பேரைச் சுற்றிக்கொண்டதால்.

"உஷ்!...என்னடாது, இங்கே வாங்கோ!" என அரைகுறைப் பொருமலோடு பத்மா சொன்னதையும், அவளுடைய அடக்கியிருந்த குரல் ஒலியையும் கேட்டுத்தான் ராஜன் அவளை உறுத்து நோக்கி, மலர விழிக்க நேர்ந்தது. நாணங்கொண்டாள் பத்மா.

ஆவலுடன் உள்ளிருந்தவாறே கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்த மீனாக்ஷியம்மாள், மாப்பிள்ளை வீட்டுள் நுழைந்ததும், சமையற்கட்டிற்குள் மறைந்துகொண்டாள்.

மாப்பிள்ளையை மாடிக்கு அழைத்துப் போய்விட்டார் சாமிநாதன். ஸீதாலக்ஷ்மி மீனாக்ஷியம்மாள் இருக்குமிடத்தைத் தாண்டிக்கொண்டே புழக்கடைப்பக்கம் போனாள், வெந்நீர் பார்த்து ஸ்நானத்திற்குத் தயார் செய்ய.

(தொடரும்)

கதலீபுர நாடகம்



அத்தியாயம் 5

வரவர மங்களத்தின் கல்யாணத்தைப்பற்றி நடேசய்யருக்குக்கவலை அதிகமாயிற்று. இத்தனை நாட்களாக அவர் மங்களத்துக்குப் 'பெரிய இடமாக'க் கிடைக்கும் என்று நம்பினார். (நடேசய்யரின் கருத்துப்படி பெரிய இடம் என்பது ஐம்பது வேலியாவது ஆஸ்தியுள்ள குடித்தனம். பையன் படித்திருக்க வேண்டிய அவசியமில்லை.) கடைசியில் வந்த வரன்களெல்லாம் தட்டிப்போகவே, அவர் கொஞ்சம் ஒடுங்கிப் போய்விட்டார். ஒரு நாள் அவருக்குத் திடீரென்று ஞானோதயம் ஏற்பட்டது. மங்களத்தைச் சேகரனுக்கே கொடுத்து விட்டால் என்ன?............

பேஷ்! எவ்வளவு அபூர்வமான யோசனை! இத்தனை நாள் இந்த யோசனைதோன்றாமல் போனதற்காக மிகவும் வருந்தினார்.

சேகரனுக்கு என்ன, அழகில்லையா? புத்தி சாதுர்யம் இல்லையா? எல்லாம் இருக்கிறது. ஆனால், கொஞ்சம் அதிகப் பிரசங்கித்தனம் இருக்கிறது. ஆனால் மங்களத்தைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் அதிகப் பிரசங்கித்தனமெல்லாம் ஓடியே போய்விடும்'' என்று எண்ணமிட்டார்.

தமக்குத் தோன்றிய இந்த அபூர்வமான யோசனையைத் தமது பாரியாளிடம் சொன்னார். அவள் முதலில் சற்று யோசித்தாள். சேகரனை மாப்பிள்ளை ஸ்தானத்தில் வைத்துப் பார்க்க அவளால் முடியவில்லை. ஆனால், விரைவில் கல்யாணம் பண்ணிவிட வேண்டும் என்ற கவலை அவளுக்கும் அதிகமாக இருந்தது.

தனக்குப் பதினாலு வயதிலேயே கல்யாணமாகிவிட்டது. பெண்ணுக்குப் பதினேழு வயதாகியும் ஒரு வழியும் காணோமே என்று வருந்தினாள். ஆகவே, எப்படியாவது கல்யாணமானால் சரி என்றெண்ணிக்கொண்டு, நடேசய்யருடைய யோசனைக்குச் சம்மதித்தாள். பிறகு இவ்வளவு நாளாக தனக்குத் தெரியாமலேயே சேகரனிடம் இருந்துவரும் நல்ல குணங்களைப் பற்றி யோசித்துப் பார்த்தாள். பின்னர் சேகரன் கொண்டு வந்திருந்த நகைகளின் ஞாபகம் வரவே, அவளுக்குத் தன் தீர்மானம் சரியானது தான் என்ற உறுதி ஏற்பட்டது.

நடேசய்யரையும், கல்யாணியம்மாளையும் பொறுத்தவரையில் பாதிக்கல்யாணம் ஆகிவிட்டது என்று வைத்துக்கொள்ளலாம். ஆனால், சம்பந்தப்பட்ட இரண்டாவது பார்ட்டியை (அதாவது சேகரனை)க் கேட்க வேண்டாமா? ஆகவே நடேசய்யர் சேகரனை அணுகி "சேகரா! உன்னோடு கொஞ்சம் பேசவேண்டும்!'' என்றார்.

'அதற்கென்ன பேஷாக!' என்று சொல்லிவிட்டு சேகரன் அவர் என்ன சொல்லப் போகிறார் என்று ஆவலோடு அவர் வாயைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நம்ப மங்களத்துக்கு இதுவரை ஒரு வரனாவது தகையவில்லை!

ஆமாம்; பிராப்தம் வர வேண்டாமா? எனக்குத் தெரிஞ்ச பையன்கள் சிலபேர் இருக்கா. அதை வேணா "ட்ரை'' பண்ணுவோம்!

இப்போ அந்த ஐடியாவை யெல்லாம் விட்டுட்டேன்.

'ஓகோ! படிக்கவைக்கலாம்னு உத்தேசமோ? எக்ஸெலெண்ட் ஐடியா மாமா!' என்று மனப்பூர்வமாகத்தான் நம்பியதை ஆமோதித்தான் சேகரன்.

என்னடா இது! படிக்கவைக்கவாவது! உங்க மாமி காதிலே விழுந்தால் இரும்புக்கரண்டியை ஓங்கிண்டு வந்துடுவாள்!.............நம்ப மங்களத்தின் ஜாதகம் நல்ல யோக ஜாதகம். அவளைக் கல்யாணம் பண்ணிக்கிறவன் பாக்யவந்தனாக இருப்பான் என்று ஜாதகம் சொல்லுகிறது.

அப்போ யாராவது நல்ல தகுந்த பையனாகப் பார்த்துக் கொடுங்கள். அவளுடைய ஜாதக விசேஷத்தினால் முன்னுக்கு வரட்டுமே.

நேத்திக்கு நான் அவ ஜாதகத்தை ஒரு ஜோசியர்கிட்டே காட்டினேன். என்ன ஓய்! ஊரெல்லாம் வரன் தேடுகிறீரே! இந்தப் பெண்ணுக்கு உறவுக்குள்ளேயேதான் கல்யாணமாகும் என்று அடித்துச்சொல்லிவிட்டான்......

அப்போ ரொம்ப விசேஷம்.............என்று பளிச்சென்று சொன்னான் சேகரன். ஆனால் இதைச் சொன்னவுடனேயே அவனுக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் ஏற்பட்டது. மாமாவின் முகத்தைக் கூர்ந்து கவனித்தான்.

அப்புறம் உன் ஜாதகத்தை எடுத்துப் பார்த்தேன். உங்க ரெண்டுபேர் ஜாதகத்துக்கும் எட்டுப் பொருத்தம் இருக்கு! இவ்வளவு அழகாக ஜாதகங்கள் சேருவது ரொம்ப அபூர்வம்!''

சேகரன் மௌனமாக இருந்தான்.

"உங்க அம்மாவுக்கு மங்களத்துக்கிட்டே கொள்ளை ஆசை. மங்களம் குழந்தையாயிருக்கும்போதே என் மரட்டுப்பெண் என்று தூக்கி வைத்துக்கொள்ளுவாள்...'' மங்களத்துக்கும் இந்த சம்பந்தத்திலே ரொம்ப இஷ்டம் இருக்கும்போல இருக்கு. நீயும் வெளியே போய் வேலை கீலைன்னு தேட வேண்டாம். சுகமா ஆத்தோடே இருக்கலாம்.

சேகரன் இப்போது விஷயத்தைப் பூராவும் புரிந்துகொண்டான்.

"இதுவரை உன்னிடம் கேட்காமல் வெளியே வரன் தேடியது தப்புத்தான் என்று ஒப்புக்கொள்கிறேன். நீ இப்போ சரி என்று சொல்லிவிட்டால், நான் அடுத்த முகூர்த்தத்திலேயே கல்யாணத்தை நடத்திவிடுவேன். உறவுக்குள்ளேயே கொடுக்கிறத்தினாலே மட்டப்படுத்திவிடுவேன் என்று நினைக்காதே! ஏகப்பட்ட செலவு செய்து ரொம்ப 'கிராண்டா''கச் செய்வதாக உத்தேசம். நாலு நாள் கல்யாணம் செய்யலாம்னுதான் ஆசை. ஆனால், இந்த ரேஷன் கழுத்தறுப்பு இருக்கிறதே என்று பார்க்கிறேன். பிரபல சங்கீதக் கச்சேரிகளை ஏற்பாடு செய்யப் போகிறேன். இல்லாட்டா நாலு பேர் பரிகாசம் பண்ணமாட்டானோ'' "என்னடா நடேசய்யர் பெரிய கஞ்சனாயிருப்பான்போலிருக்கே என்று'' நடேசய்யர் தன்பாட்டுக்குப் பேசிக்கொண்டே போனார்.

"சரி! நீ என்ன சொல்றே?....பத்திரிகை போடக் கொடுக்கட்டுமா?''

...."ஆ!'' என்றான் சேகரன் கனவிலிருந்து விழித்துக்கொண்டவன்போல. பிறகு தன் நிலைமையை உணர்ந்துகொண்டு, "மாமா! நான் சொல்றதைக் கொஞ்சம் கவனியுங்கள், நானும் அவளும் அண்ணனும் தங்கையும்போலப் பழகிவிட்டோம், அவளைக் கல்யாணம் செய்துகொள்வது என்பதை என்னால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை'' என்றான்.

"என்னடா, நாவலிலே எழுதுகிறான்களே, அதைப்போலப் பேசறே? எனக்கும் ஒரே பெண். உறவு விட்டுப் போகாது. நீயும் வீட்டோடு இருக்கலாம்....''

"இல்லை மாமா! என்னை மன்னித்துவிடுங்கள். மங்களத்துக்கே இந்த ஐடியா பிடிக்காது.''

"மங்களம் ஒன்றும் மாட்டேன் என்று சொல்லமாட்டாள். நான் சொல்ற விஷயங்களையெல்லாம் யோசிச்சுப் பாரு!''

"யோசிக்கிறத்துக்கே ஒண்ணுமில்லை மாமா! எனக்குத் தங்கையே கிடையாது. மங்காவைத்தான் என் ஒரே தங்கைன்னு நினைச்சுண்டிருக்கேன். நானே நல்ல வரனாகத்தேடித் தருகிறேன் மாமா!''

"ஓகோ! அவ்வளவு திமிர் வந்துவிட்டதா? அவளுக்குக் கல்யாணம் பண்ணி வைக்க மனுஷ்யாள் இல்லாமே போயிடலே! இரண்டு வருஷம் சோறு போட்டு வளர்த்ததற்குப் பிரதி உபகாரமா இது? சை! திமிர் பிடித்த ராஸ்கல்!.... இப்போ கடைசித் தடவையாகக் கேட்கிறேன். என்ன சொல்றே?''

"மன்னியுங்கள் மாமா! இதைமட்டும் என்னிடம் கேட்காதீர்கள்!''

"இதோ பார்! இன்று முடிய உனக்கு யோசனை பண்ண அவகாசம் கொடுக்கிறேன். சிறுபிள்ளைத்தனமா பேசறே நீ! நாளைக்கும் நீ முடியாது என்று சொல்வதானால், நீ என் வீட்டிலிருக்க வேண்டாம், பிறகு உன்னை முகாலோபனம் செய்ய எனக்கு இஷ்டமில்லை.''

மாமா ஆத்திரத்துடன் எழுந்து போய்விட்டார்.

சேகரன் என்ன செய்வதென்று புரியாமல் விழித்தான். மங்களத்தை மணப்பது என்பது அவன் கனவிலும் நினைக்கக்கூடாத விஷயம். வீட்டை விட்டு வெளியே போனால் ஜீவனோ

பாயத்துக்கு வழிகிடையாது. ஏதாவது வேலை தேடிக்கொண்டால்தான் சாப்பாடு. "வீட்டை விட்டு வெளியே போகிறேன். "மாமா! எனக்குக் கொஞ்சம் பணம் கொடுங்கள்!" என்று மாமாவிடம் கேட்பது உசிதமாகாது. குறுக்குவழி எதையாவதுதான் கடைபிடிக்கவேண்டும். கிருஷ்ணபகவான் கோகுலத்தில் பிரயோகித்த வழியைத் தவிர வேறுவழி ஒன்றும் புலப்படவில்லை. அதைப் பிரயோகம் செய்யவேண்டிய இடமும் மாமா வீடுதான் என்றெண்ணிக் கொண்டான். உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைக்கக்கூடாது என்ற பழமொழி சேகரனுக்கு நன்றாய்த் தெரிந்ததுதான். இருந்தாலும் அந்த சந்தர்ப்பத்தில் பகுத்தறிவுள்ள ஒரு மனிதன் செய்யக்கூடியது அதுதான் என்று அவனுக்குப் பட்டது. மாமா வீட்டிலிருந்து அவர் சொத்து ஒன்றையும் எடுத்துக்கொண்டு ஓடுவதாக அவனுக்கு உத்தேசமில்லை. தான் மாமாவிடம் கொடுத்திருந்த நகைகளில் ஏதாவது ஒன்றைக் கிளப்பிக்கொண்டு போகவேண்டும் என்பதுதான் அவனுடைய ஏற்பாடு. மாமாவை நேரிலே போய் அந்த நகையைக் கேட்க சங்கோஜமாயிருந்ததால்தான் அவன் இப்படிச் செய்யத் துணிந்தான்.

அன்றிரவு மாமா அவனுடன் ஒன்றும் பேசவில்லை. மங்களம் கூட அவனுடன் வழக்கம் போல் கலகலப்பாகப் பேசவில்லை. மாமியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. சாப்பாடு ஆன பிறகு எல்லோரும் வழக்கத்துக்கு விரோதமாக முன்னாடியே படுக்கப் போய்விட்டார்கள். சேகரனுக்குக் கொஞ்சங்கூடத் தூக்கம் வரவில்லை. திருட்டுத் தொழிலில் 'அப்ரெண்டிஸ்' ஒருவன் தன் முதல் திருட்டுக்குப் போவதற்கு முன்னால் எந்த வேதனைகளுக்குள்ளாகவேண்டுமோ அதையெல்லாம் சேகரனும் அனுபவித்தான்.

எங்கிருந்தோ ஏரோப்ளேன் போகும் சப்தம் கேட்க ஆரம்பித்தது. சில சமயங்களில் கரி பஸ்ஸின் சப்தமும அதோடு கலந்து கேட்டது. இந்த சப்தங்களைக் கேட்டவுடன் சேகரனுக்கு மாமா தூங்க ஆரம்பித்துவிட்டார் என்ற எண்ணம் உறுதியடைந்தது. மெதுவாக எழுந்து கொண்டான். அவனுடையமார்புஅடித்துக்கொள்ளும் சப்தம் கோவில் மணியடிக்கும் சப்தம்போல அவனுக்குக் கேட்டது. படபடப்பெல்லாம் அடங்கியபின் மாமா பீரோ சாவியை எங்கே வைத்திருப்பார் என்று யோசித்தான். நடேசய்யர் கொத்துச் சாவியை டிராயரில் வைத்துப் பூட்டிவிட்டு டிராயர் சாவியை பூணூலில் கட்டிக்கொண்டிருந்தார். சேகரன் தன் ஷேவிங் ஸெட்டிலிருந்து ஒரு பிளேடை எடுத்துக்கொண்டான். மெல்ல அடிமேலடிவைத்து நடேசய்யரின் படுக்கைக்குச் சென்று மாமாவின் பூணூலை நறுக்கியெடுத்து அதிலிருந்த சாவியை மட்டும் எடுத்துக்கொண்டான். டிராயரைத் திறந்து கொத்துச் சாவியை எடுத்தான். நடேசய்யரின் பொக்கிஷக் கிருஹத்தில் பிரவேசித்து கண்ணாடி பீரோவைத் திறந்தான். திறந்தான் என்று சுலபமாகச் சொல்லிவிட்டோமேயொழிய அதில் எத்தனையோ கஷ்டங்கள் இருந்தன. அவனுடைய அவசரத்தில் ஒரு சாவியாவது பீரோவுக்குச் சரியாக இல்லை. அதிலிருந்த பதினைந்து சாவிகளையும் ஒவ்வொன்றாகப் போட்டுக் கடைசியில் பீரோவைத் திறந்தான். ஒரு நெருப்புக்குச்சியைக் கிழித்துக்கொண்டு நகைப்பெட்டியைத் திறந்தான். பெட்டியைத் திறந்தவுடனே வெளியிலிருந்து

"அத்தான்! நான் பாடட்டுமா?" என்ற குரல் தெளிவாகக் கேட்டது. மாமாவின் வீட்டு நகைப் பெட்டியைச் சோதனை போடும்போது ஒருவன் சங்கீதக் கச்சேரி கேட்க அதிகமாக விரும்ப மாட்டான். அதிலும் மங்களம் அந்த நிசிவேளையில் பாடுவது என்பது பொதுஜன அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடும் என்பது சேகரனுடைய கொள்கை. ஆனால், சேகரன் இவ்வளவு தூரம் பயந்திருக்கவேண்டிய அவசியமில்லை. மங்களம் கனவுலகத்தில் தான் அத்தானுடன் பேசிக்கொண்டிருந்தாள் என்பது அடுத்தாற்போல் கேட்ட அரைகுறைப் பேச்சுக்களிலிருந்து புரிந்தது. இப்போது சேகரனுக்கு மற்றொரு பீதி ஏற்பட்டது. மாமாவின் குறட்டைச் சப்தம் நின்றிருந்தது. இனி தாமதிக்கக் கூடாது என்று தீர்மானித்தான் அவன். நகைப்பெட்டியில் மேலாக அவனுடைய தாயாரின் இரட்டை வடம் சங்கிலி ஒன்று இருந்தது. அதை அவசரம் அவசரமாக எடுத்துக்கொண்டு மெதுவாக வெளியே நடந்தான். நக்ஷத்திரங்கள் சூழ்ந்த ஆகாசத்தைப் பார்த்த பிறகுதான் அவனுடைய படபடப்பு அடங்கியது.

மறுநாள் காலையில் சென்னையின் ஒரு பெயர் தெரியாத மூலையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வாடகைக்கு ஒரு ரூம் எடுத்துக்கொண்டான். கையிலிருந்த நகையை விற்றுப் பணமாக்கிக் கொண்டான். அதை வாங்கிக்கொண்ட தட்டானுக்கு முதலில் வலுத்த சந்தேகம் ஏற்பட்டது. ஆனால், சேகரனுடைய தோற்றம் ஒரு கௌரவமுள்ள மனிதன் என்று அவனை நம்பும்படிசெய்ததாலும், வெகு மலிவாக அந்த நகை கிடைத்ததாலும் மறு பேச்சின்றி வாங்கிக்கொண்டு போனான். இன்னும் சில நாட்களுக்குள் சேகரன் சென்னையை விட்டுவிட்டுப் போகவேண்டியதுதான் என்று தீர்மானித்துக்கொண்டான். ஒரு நாள் கூடத் தவறாமல் பத்திரிகைகளின் 'தேவை'க் காலங்களைப் பார்த்து வந்தான். அவனுடைய முயற்சி வீண்போகவில்லை. ஒருநாள் பத்திரிகையில் வந்திருந்த விளம்பரம் ஒன்று அவனுடைய கவனத்தைக் கவர்ந்தது.

தேவை

"ரிடையர்டு போலீஸ் ஸார்ஜெண்டின் பையனுக்கு ஆங்கிலம் சொல்லிக்கொடுக்க ஓர் இளம் ஆசிரியர் தேவை' உணவும், தங்குமிடமும் கொடுக்கப் படுகிறது. சம்பளம் யோக்ய தாம்சங்களுக்குத் தகுந்தாற்போல். அபேக்ஷகர்

குறைந்தபட்சம் ஒரு B. A. ஆக இருக்க வேண்டும். கீழ்க்கண்ட விலாசத்துக்கு விண்ணப்பம் செய்க:—

"ராவ்பகதூர் பயங்கர நரசிம்மம்,
ரிடையர்டு போலீஸ் ஸார்ஜெண்ட்,
கதலீபுரம் போஸ்ட்."

அன்று சாயங்காலமே சேகரன் எழும்பூருக்குச் சென்று கதலீபுரம் எந்தச் சீமையில் இருக்கிறதென்று எஸ். ஐ. ஆர். கைடில் தேடிப் பார்த்தான். அன்றிரவே கதலீபுரத்துக்குக் கிளம்பினான்.

* * * *

கடந்த ஐம்பது வருஷங்களில் நாற்பது வருஷங்களாக நடேசய்யர் உடம்பில் பூணூல் இல்லாமல் இருந்ததே கிடையாது. அவருக்குப்பத்து வயதில் பூணூல்போட்டது. விடியற்காலையில் கண் விழித்துக்கொண்டவுடன் தன்மார்பில் ஏதோபாரம் குறைந்திருப்பதாக அவருக்குத்தோன்றியது. குறைந்திருந்த பாரம் எது என்று கண்டுபிடித்தவுடன் அவர் திடுக்கிட்டார். அந்த பாரம் கத்தரிக்கப்பட்டுக் கூடத்தில் கிடப்பதையும், டிராயரும் கண்ணாடி பீரோவும் திறந்திருப்பதையும் பார்த்தார். சேகரனோடு தான் முதல் நாள் எவ்வளவுதான் சண்டை போட்டிருந்தாலும் உடனே அவனைக் கூப்பிட்டுப் போலீஸில் புகார் கொடுக்கவேண்டும் என்று நினைத்தார். "சேகரா! சேகரா!" என்று கத்தினார். பதிலைக் காணோம். "தூங்குமூஞ்சி! இன்னுமா தூக்கம்?" என்று திட்டிக்கொண்டே சேகரின் படுக்கையிடம் வந்தார். படுக்கையில் ஆளைக்காணோம்! இவ்வளவு சீக்கிரத்தில் சேகரன் எழுந்துகொண்டிருக்கமாட்டானே என்று ஆச்சர்யப்பட்டார். சேகரனுடைய படுக்கையில் ஒரு துண்டுக்கடிதம் கிடந்தது. (இது சேகரன் முன்னேற்பாடாகவே எழுதி வைத்திருந்ததுதான்) அதன்வாசகம் பின் வருமாறு;—

" மாமாவுக்கு,

சாஷ்டாங்க நமஸ்காரம். நான் தங்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது நான் தங்களிடம் சொல்லிக்கொள்ளாமல் நகையையும் எடுத்துக்கொண்டு ஓடிப்போவது தகுந்த பிரதி உபகாரம் இல்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன். இருந்தாலும் என் நிலைமையில் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. சௌ-மங்களத்துக்குக் கல்யாணம் என்றால் நான் எங்கிருந்தாலும் வந்து சேருகிறேன்.

தங்கள் வணக்கமுள்ள மருமான்
சேகரன்"

"அட பாவி!" என்று ஸ்தம்பித்து நின்றார் நடேசய்யர். அவருடைய சகதர்மிணிக்கு இருந்த ஆத்திரத்தில் ஒரு வசவுகூட ஞாபகத்துக்கு வரவில்லை. ஆகையால், வெறுமனே விரலைச் சொடுக்குவதோடு நின்றுகொண்டாள். "உங்களுக்கு நன்னா வேணும்! திருட்டுப் பசங்களையெல்லாம் வீட்டிலே வெச்சுண்டு சோறு போட்டேளோன்னோ!" என்று மனமார கணவனிடம் தன் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொண்டாள்.

போலீஸிலே புகார் கொடுக்கலாம் என்று முதலில் எண்ணியதைக்கூட நடேசய்யர் வாபஸ் பெற்றுக்கொண்டார். சாதாரணமாக அவருடைய கடைவாசல் வழியாகப் போலீஸ்காரன் போனாலே அவருக்குக் குலை நடுங்கும். எவனாவது வந்து கண்ட்ரோல் விலைக்கும் அவர் விற்றுவரும் விலைக்கும் இருந்த அகாதமான வித்தியாஸத்தைப் பார்த்தாலும் சரி; அல்லது இல்லை இல்லையென்று சொல்லிவிட்டு வீட்டில் மறைவாக ஒளித்துவைத்திருக்கும் விலை கண்ட்ரோல் செய்யப்பட்ட சாமான்களைக்கண்டுபிடித்துவிட்டாலும் சரி, நடேசய்யர் ஆறு மாதம் காராக்கிருஹ யாத்திரை செய்துவிட்டு சர்க்காருக்கு மூவாயிரம் ரூபாய் தட்சிணைகொடுக்கும் படியும் ஆகிவிடும் என்று அவர் பயந்தார். ஆகையால் எப்படியானாலும் சரி, போலீசுக்குப் போகாமலேயே விவகாரத்தை முடித்துவிடுவது என்று தீர்மானித்தார்.

(தொடரும்)

25

காளத்திக் காட்சி

★

காளத்தி மலை சைவ சமயத்தின் பிறப்பிடங்களில் ஒன்று. ஒன்றன்மேல் ஒன்றாயும் தொடர்பாயும் உள்ள இம்மலைக் கூட்டத்தைச் சிவநெறிக்கு ஓர் அறிகுறியாகவும் கொள்ளலாம். பிரசித்தமான காளத்தியப்பர் கோவிலை அடுத்திருக்கிறது ஒரு மலைமேடு. இந்தப் பிரசித்தமான கோவில் பழைய கோவிலன்று. மலைமேட்டில் ஒரு சிறு கோவிலும் அந்தக் கோவிலில் ஒரு சிவலிங்கமும் காணப்படுகின்றன. அச்சிறு கோயில் ஒரு பெரிய ஆலமரத்தினடியில் அமைந்திருக்கிறது. அக்கோவிலில் உள்ள சிவலிங்கப் பெருமான், என்ற அந்த அருட்குறியைத்தான் 'குடுமித் தேவர்' (குன்றின் உச்சியிலுள்ள தெய்வம்) என்று அந்தப் பழைய காலத்து வேடர் பெருமானை கண்ணப்பர் ஒப்பற்ற மெய்யன்பினால் குழைந்து குழைந்து உருகி உருகி வழிபட்டாரென்று பெரிய புராணம் சொல்லுகிறது.

அந்த வேடர் பெருமானது உருவத்தையும் ஒரு சிறு தனிக் கோவிலில் அவருடைய இஷ்ட தெய்வத்திற்குப் பக்கத்திலே பிரதிஷ்டை செய்து வைத்திருக்கிறார்கள். இந்த இரண்டு சிறு கோயில்களும் இவை அமைந்திநக்கும் குன்றின் உச்சியின் கீழேயுள்ள பிரசித்தமான காளத்தியப்பர் கோயிலைக் காட்டிலும் எங்களுக்குப் பக்தியுணர்ச்சியைத் தோற்றுவித்தன. ஜனங்களின் கூட்டத்திலிருந்தும், அவர்களுடைய திச்செயல்—தி நினைவுகளின் கூட்டங்களிலிருந்தும் விலகித் தனித்து உயர்ந்து காணப்பட்ட அக்குன்றின் உச்சியில் கண்ணப்பர் சிவலிங்கம் என்ற தெய்வ அடையாளம் கண்டு, வழிபட வழி தெரியாமலே அன்பால் வழிபட்டுக் கடவுளைக் கண்டு கொண்டார் என்று சொல்லும் பெரிய புராணத்தின் பெரிய ரகசியம் ஒருவாறு எனக்குப் புலனாயிற்று. அதே குன்றின் உச்சியில் இரண்டு மனம் ஒத்த நண்பர்களுடன் அக்காட்சியைக் கண்டு வியந்து கதையையும் நினைப்பூட்டிக் கொண்ட காலத்திலே.

என்னைப்போல் பெரிய புராண ஆசிரியரும் இக்காட்சியைக் கண்டிருக்கிறார், என்னைக் காட்டிலும் எவ்வளவு பக்தி–அதிசயத்துடன் காளத்திக் காட்சி கண்டிருப்பார். தாம் வருணித்திருக்கும் பொன்முகலியாற்றையும் கண்டிருக்கிறார். குன்றின் அடிவாரத்தில் பெரிய கோயிலுக்குப் பக்கத்திலே, பளிங்கு போலத் தெளிந்து குளிர்ந்த அந்த நீரோட்டம், காளத்தி வேடர் 'குடுமித் தேவ'ரான காளத்தியப்பருக்கு அபிஷேகம் செய்வதற்கென்றே படைக்கப்பட்டதுபோல் சேக்கிழாரின் பக்திக்கண்களில் தோன்றியிருக்கவேண்டும்.

அந்த வேடர் தலைவர் காட்டுப் பூக்களைத் தம் தலையில் வைத்துக் கொண்டு போய்க் குடுமித் தேவர் மீது சொரிந்தாரல்லவா? அதற்காகவே— அப்படி இன்னும் ஒரு கண்ணப்பர் வந்து நம்மைப் பயன்படுத்திக் கொள்ளமாட்டாரா என்று பூங்கொடி செடிகளெல்லாம் ஆசைமுகம் காட்டுவது போல்— அன்றும் மணம் வீசி மலர்ந்திருந்தன. பன்னிறப் பூக்கள் சேக்கிழார் சுவாமியின் அன்புக் கண்களிலே.

கண்ணப்பர் கண்ட அடர்ந்த காடுகள் சேக்கிழார் காலத்திலும் புதரும், காடும் சோலையுமாகவே இருந்திருக்கவேண்டும். இன்றும் இப்பிரதேசத்திலே சிவமணம் இயற்கை மணத்தோடு கலந்துதான் கமழ்கின்றது. சேக்கிழார் காட்டையும் மேட்டையும், பள்ளத்தாக்கையும் பச்சை மரங்களையும் பூங்கொடி செடிகளையும் பட்சி ஜாலங்களையும், காட்டுப்பன்றி முதலிய மிருகங்களையும், வேடர் கூட்டங்களையும், குடிசைகள் புல்லுப் புரைகள் தினை காய்த்துக் கொண்டிருக்கும் பாறைகள் முதலியவற்றையும் கண்ணாரக் கண்டிருக்கிறார். அவையெல்லாம் சேர்ந்து தாம் கேட்டிருந்த கண்ணப்பர் கதையை நடித்துக் காட்டவே இயற்கையம்மை ஜோடித்து வைத்திருக்கும் ஒரு நாடகசாலைபோலக் காணப்பட்டன.

சேக்கிழார் பெரிய புராணத்திலே கண்ணப்ப நாயனார்

கதையைப் பெரும் பக்தியோடு மிகவும் உருக்கமாய்ப் பாடி வைத்திருக்கிறாரே, அந்த இரகசியம் இப்போது வாசகர்களாகிய உங்களுக்கும் ஒருவாறு புலனாகியிருக்குமென்று நம்புகிறேன். அந்தப் பொன்முகலியும் சூழ்நிலையும் கண்டு, குன்றின் உச்சியில் ஏறிக் கண்ணப்பரையும் அவரது இஷ்ட மூர்த்தியையும் அந்தத் தனியிடத்திலே கண்டதும் சென்னை வாசிகளான எங்களுக்கும் ஓட்டமும் பரபரப்புமாயிருந்த உள்ளம் குளிர்ந்து, ஆறுதல் பெற்றது. சேக்கிழாரின் உள்ளத்திலோ விண்ணுலகத்தில் கடவுளுடன் இருப்பதுபோன்ற உணர்ச்சி தோன்றியிருக்க வேண்டும். எங்களுக்கு உலக நினைவு வெகு வேகமாக வந்து பிடர் பிடித்துக் கீழே தள்ளுவதுபோல் கீழே கொண்டு வந்து சேர்த்து விட்டது. சேக்கிழாரோ தமது ஞான வானத்திலிருந்து இவ்வளவு அவசரமாய் இறங்கி வந்திருப்பாரா? பையப்பைய நினைவு வர, கண்ணப்பரையும் அவர் கடவுளையும் அங்கேயே பாடி வாழ்த்தவும் சங்கற்பமாவது செய்திருக்க வேண்டும்.

குன்றிலிருந்து இறங்கி வரும்போதும் 'அவசரப் படேல்' என்ற நியமத்தை மேற்கொண்டால், அங்கங்கே நின்று நின்று பார்த்து வந்தால், கண் விருந்தான அழகுக் காட்சிகளைக் கண்டுகண்டு அந்த இன்பங்களையும் உள்ளத்தில் சேமித்துக் கொள்ளலாம். கீழேயுள்ள ஆற்றங்கரையும் பெரிய காளத்தி கோயிலும் ஊரும் மேலேயிருந்து காணும்போது சிறுத்துக் காண்கின்றன. இல்லை, சிறுத்து விளங்குகின்றன. அளவில்தான் அந்தச் சிறுமை: அந்தக் காட்சியும் ஓர் அழகுப் பெருமைதான்! பெரிய கோயிலுக்கு அருகே பொன்முகலியாற்றின் தோற்றம்; காலைக் கதிரொளியில் குன்றின் இறக்கத்திலே ஒரு வசதியான இடத்திலிருந்து நோக்கும்போது, ஒரு சிகரமான வெள்ளிக் கம்பிபோல் மின்னுகிறது. ஊருக்கு வெளியே பச்சைக் கம்பளம் விரித்தாற்போல் மினுமினுக்கும் வயல்களையும் காணலாம். இந்த வயல்களைத் தவிர மற்றக் காட்சிகளை சேக்கிழாரும் பார்த்திருக்கக் கூடும்.

இத்தகைய காட்சியின்பங்களைக் காளத்தியில் நித்தியவாசம் செய்கிறவர்கள் அனுபவிக்கிறார்களோ, என்னவோ?—நெருங்கிய பழக்கத்தால் அழகும் இன்பமும் சுவை குன்றிப் போவதும் சகஜம்தான். ஆனால், அந்தக் காட்சியின்பங்களை என்னைப்போன்ற யாத்திரிகர்களும் உள்ளத்தினுள்ளே சேமித்து வைத்துக் கொண்டு இன்றும் புதுமையாக நினைவுகூர்ந்து மகிழ்ந்து அனுபவிக்க முடிகிறது.—சென்னைமாநகரின் டிராம்—மோட்டார் கூச்சல்களுக்கிடையிலும் நமது நிலையே இப்படியென்றால் சேக்கிழாரின் பரம பக்தி நிலையை என்னென்பது?

காளத்தியின் பல்வேறு இயற்கைத் தோற்றங்களையும் ஆற அமரப் பார்த்து அனுபவித்திருப்பார் சேக்கிழார். அவரைத்தான் ரயிலும் மோட்டார்காரும் அவசரப்படுத்தவில்லையே. இயற்கைத் தோற்றங்களோடு பெரிய கோவிலில் கருங்கற் சுவர்களிலுள்ள நுண்ணிய வேலைப்பாடுகளும் நமது வியப்பிற்கும் மகிழ்ச்சிக்கும் உரியன பழைய தமிழ்க் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. தெலுங்குக் கல்வெட்டுகளும் இருக்கின்றன; ஆனால், இவை பிற்காலச் சிலாசாஸனங்களே. இக் கல்வெட்டுகளைச் சேக்கிழார் சுவாமி பார்த்திருக்கமாட்டார். கண்ணப்பரின் காளத்தியைத் தெலுங்குப் பிரதேசமென்று பாத்தியதை கொண்டாடவும் கூடும் என்பதைச் சேக்கிழார் பெருமானின் தீர்க்க திருஷ்டிதான் பார்த்திருக்குமா?' காளத்தியப்பருக்கே வெளிச்சம்!

சேக்கிழாரின் கண்ணப்பர் கதை சிதைந்து தெலுங்கிலும் புகுந்திருக்கிறது. விஜய நகர வேந்தரான கிருஷ்ண தேவராயர் காலமாகிய கி பி. பதினாறும் நூற்றாண்டில் விளங்கிய ஓர் ஆந்திர கவி இயற்றிய நூலொன்றால் தெலுங்கர்களையும் கண்ணப்பர் கதை வசீகரித்துவிட்டது என்று தெரிகிறது. கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் தமிழில் இயற்றப்பட்ட சீகாளத்திப் புராணத்திலே ஆந்திரதேச யாத்திரை செய்து மீண்ட கண்ணப்பரைக் காண்கிறோம் பெரியபுராணத்தில் விரிவாய்க் கூறப்பட்டிருக்கும் கண்ணப்ப நாயனார் கதையே ஆந்திர மொழி வாயிலாகச் சில மாறுதல்கள் அடைந்து, அந்நாட்டுச் சைவர்களுக்கும் ஆறுதல் அளித்து உயர்ந்த லட்சியம் காட்டியதென்று துணிந்து கூறலாம். கண்ணப்பர் கதைமீது தமிழகம் ஏக போக உரிமை கொண்டாடியதில்லை. ஆனால், பக்திக் கதைகளையும் லட்சியங்களையும் வஞ்சம் இன்றி எல்லோருடனும் பகிர்ந்து அனுபவிக்கும் தமிழகமும் காளஹஸ்தியை இழந்துவிட இயலுமா?

—

"என்ன பண்டிதரய்யா! வீடு ஏதாச்சும் கிடைச்சுதா ?"
"இம்மண்ணுலகில் எனக்கோர் வீடு கிடைக்கும் முன் விண்ணுலகில் வீடு நிச்சயம் கிடைத்துவிடும் என்று எண்ணுகிறேன்"



சிவராமன் வாசல் கதவைத் திறந்ததும் 841 லக்ஷமிட்ட சிகப்புத் தலைப்பாகை காக்ஷியளித்தது.

"யார்? என்ன விசேஷம்?" என்ருர் சிவராமன் திடுக்கிட்டுப்போய்.

சங்கரியும் பின்னே வந்து நின்ருள்.

"இந்த வீட்டு எசமான் ஊரிலேயிருந்து வந்துவிட்டாங்களா என்று ஸப் இன்ஸ்பெக்டர் ஐயா பார்த்துக்கிட்டு வரச்சொன்னுங்க."

"ஐயா இன்னும் வரவில்லை. வர இரண்டு நாட்கள் ஆனாலும் ஆகலாம். ஏன்? என்ன விசேஷம்?"

"இல்லிங்க, எசமான் மகன் ஸ்டேட்மெண்டு கொடுத்துவிட்டாருங்க. அதைத்தான் சொல்லிவிட்டு வரச் சொன்னுங்க."

"ஏது ஸ்டேட்மெண்டு? யார், ராமனுதனு கொடுத்திருக்கிருன்?"

"ஆமாங்க. உங்களுக்குத் தெரியாதுபோலிருக்கு! நீங்க யாருங்க?"

"நான் அந்தப் பையனின் மாமன். என்ன கேஸ் அவன் பேரில்? ராமனுதன் போலீஸ் வசத்திலா இருக்கிருன்?"

"போர்ஜரி கேஸுங்க. இரண்டு நாள் முன்னேயே அரஸ்டு பண்ணி ஜாமீன்பேரிலே விட்டுதுங்க. நேத்திக்கு பாங்கிலேயிருந்து கேஸ் பற்றிக் கேழ்வி வந்ததன்பேரில் பையனைத் தேடி இன்னிக்கு ஸ்டேஷனில் ஆஜர்படுத்தினேனுங்க."

"யார் ஜாமீன் கொடுத்தது?"

"யாரோ அழகிரிசாமியாம். அதையெல்லாம் என்னைக் கேழ்க்காதீங்க."

"யாரடா அழகிரிசாமி" என்ருள் சங்கரி பின்னுலேயிருந்து.

"அப்புறம் சொல்லுகிறேன் அக்கா?" என்று அவளுக்குப்பதில் சொல்லிவிட்டு சிவராமன் 841 ஐ மேலும் வினவினுர்.

"என்ன ஸ்டேட்மெண்டு?"

"நீங்க வந்தீங்கன்னு, இன்ஸ்பெக்டர் ஐயா கிட்டே அதெல்லாம் கேட்டுக்கொள்ளலாம்."

சங்கரி: "சிவராமா! நீ போய் அவனை அழைத்து வா. உன் அத்திம்பேர் அபப்பாதே இந்தப் போர்ஜரியைக் கண்டுபிடிக்காமல் விடப்போவதில்லை என்று சொன்னுர். அதுதான் விஷயமாயிருக்கும். நீ நேரில் போனுல் எல்லாவற்றையும் விசாரித்துக்கொண்டு இந்தக் கழிவடையையும் சாப்பாட்டிற்கு அழைத்து வந்துவிடலாம்' என்று சிறிய குரலில் பின்னேயிருந்து தூண்டுதல் செய்து முடிக்கும் முன்னமேயே, சிவராமன் 841 உடன் போலீஸ் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டுவிட்டார்.

போலீஸ் ஸ்டேஷனில் ராமனுதன் ஒரு வட்டமேஜையின் ஒரு புறத்தில நாற்காலியில் வீற்றிருந்தான். அவன் எதிரில் இன்ஸ்பெக்டர் உட்கார்ந்திருந்தார். மேஜையின் மேல காகிதம், மசிக்கூடு, பேனு இவைகள் தென்பட்டன. சிவராமனுக்கு இன்ஸ்பெக்டர் நல்வரவு கூறித் தன் பக்கத்தில் அவரை உட்காரச் செய்தார். ராமனுதன் சிவராமனைப் பார்த்து ஒரு உவர்ப்பான சிரிப்பு சிரித்துக்கொண்டான். பின்பு அவன் கண்கள் இன்ஸ்பெக்டர் மேலும் மேஜையின்மேலிருந்த காகிதத்தின் பேரிலும் விழுந்தன.

"என்னடா ராமனுதா?" என்று கேட்டுக்கொண்டே உட்கார்ந்தார் சிவராமன்.

"வாருங்கோ மாமா. அப்பா ஊரிலில்லாததால், உங்களைத் தான் அழைத்து வருவான் 841 என்று எனக்குத் தெரியும்" என்ருன் ராமனுதன் திடத்துடனும் அலக்ஷயத்துடனும்.

சிவராமன், ராமனுதன் இனிக் குழந்தை அல்ல. ஆளாகிவிட்டான் என்று உணர்ந்தார். அவர் ஸப் இன்ஸ்பெக்டருடன் சம்பாஷிக்கலானுர்.

ராமனுதனின் ஸ்டேட்மெண்டு அவர் பார்வைக்குக் கொடுக்கப்பட்டது. ராமனுதன் முதல் நாள் சீதாராமன் மாற்றிய செக் தன்னுல் ஒரு அவசர நிமித்தம் போர்ஜரி செய்யப்பட்டதென்றும், அந்த செக் தொகை தன்னிடம் வந்து செலவாகிவிட்டதென்றும், இரண்டாவது நாள் செக் ருஜுவானது தானென்றும், அதில் தொகை அளவு மட்டும் எழுத்தால் எழுதப்படாததால், தன்னுல் எழுதப்பட்டதென்றும் கண்டிருந்தது.

சிவராமன் ராமனுதனைக் கண் விரித்து நோக்கினுர். ராமனுதன்

உறுதியுடன் அவரைத் திரும்பி நோக்கினான். ராமனாதனிடம் முன்போல் பேச சிவராமனுக்கே பயமாயிருந்தது. சிவராமன் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "இந்த ஸ்டேட்மெண்டை என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டார்.

"ஸ்ரீமான் வெங்கட சுப்பையர் பாங்குக்குத் தகவல் கொடுத்திருந்ததன் பேரில் இந்த விசாரணை நடத்தப்பட்டது. மேல் நடவடிக்கை ஐயர் அவர்களின் அபிப்பிராயப்படி நடத்தவேண்டியதுதான்."

"சரி, கிழித்தெறியுங்கள் இந்த ஸ்டேட்மெண்டை. விஷயம் புரிந்துவிட்டது. இனி இதனால் புண்ணியமில்லை."

"எதற்கும் ஐயர் வரட்டும்"

"சரி வரட்டும். ராமனாதனை நான் அழைத்துச் செல்லலாமல்லவா?"

"அழைத்துச் செல்லலாம்."

* * * * *

சிவராமனும் ராமனாதனும் ஒரு டாக்ஸியில் ஏறிக்கொண்டார்கள்.

"ஏண்டா ராமனாதா. உனக்குப் போர்ஜரி பண்ணிப் பணம் பெறும்படி அவ்வளவு முடை என்ன வந்தது?"

"எல்லாம் அந்தக் கிராதகன் அழகிரியால் வந்ததுதான்"

சிவராமன் விவரம் கேட்க ராமநாதன் ஒன்றையும் ஒளியாமல் அன்று ஸினிமாப்பார்க்கப்போய்த்தான் அகஸ்மாத்தாக அழகிரியிடம் எலிப்பிறையில் மாட்டிக் கொண்டதுபோல் மாட்டிக்கொண்டு வைரப்பித்தான்களைப் பறி கொடுத்த பரிதாபக் கதையை எடுத்துக் கூறினான். மறு நாள் அந்த அடகை மீடகவும் தன் ரகஸியத்தைக் காக்கவும் தான் போர்ஜரி செய்ய நேரிட்டதையும், ஸீதாராமனைத்தான் அறியாக் கருவியாய் உபயோகப்படுத்திக் கொண்டதையும் ராமநாதன் சிவராமனுக்குச் சொன்னான்.

"ஸீதாராமனுக்கு உன் மர்மங்கள் தெரியுமோ?" என்று கேட்டார் சிவராமன்.

"அன்று சாயந்திரம் காலேஜில் எல்லா விருத்தாந்தங்களையும் அவனிடம் சொல்லிவிட்டேன் அதனால்தான் அவன் அப்படியே ஊருக்குப் புறப்பட்டுவிட்டான்."

"அவன் வீட்டிற்கு வந்து உடனே உன் குட்டை வெளிப்படுத்தியிருக்க வேண்டும்."

"அப்பேர்ப்பட்ட சிநேகிதன் அவனல்ல தான் ஓடிப் போவதால் என் குற்றத்தை தன்மேற் சுமத்திக்கொண்டான். திருடனை என்னைக் காண்பித்துக் கொடுக்காமல் என் இஷ்டம்போல் நான் கபடமாய் நடந்துகொள்ள இருள் கவசத்தை எனக்கு அளித்தான்."

"நீ, கதையில் வரும் குரங்கு குளக்கரையில் தூங்கும் எஜமானின் கட்டுச் சாதத்தைத் தின்றுவிட்டு ஆட்டின் வாயில் தயிர்ப் பசையைத் தடவி வைத்து அந்தக் குற்றத்திற்குத் தண்டனையை ஆட்டிற்கு வாங்கிக் கொடுத்தது போல நண்பனுக்கு நட்பை செலுத்தினாய் போலும்!"

"என் வேலை இனி ஸீதாராமனை மீட்பதுதான். அவன் முக விலாஸத்தை அழுக்கில்லாமல்செய்த்து தெளிய வைப்பதே என் கடமை. அவன் என் விஷயத்தில் தியாகம் செய்த பெருந்தன்மைக்கு கைம்மாறு அவனுக்குச் செய்வதே முக்யமான என் வாழ்க்கைப் பயன்."

"சரி, உனக்கு இப்போது அழகிரி மாமனாராக மகிழ்ச்சியுடனிருப்பதாய்தெரிகிறதே உன்னைப் போலீஸிலிருந்துகூட ஜாமீன் கொடுத்து மீட்டுக்கொண்டு போனாரே! எப்படி எதிரி உறவானது?"

"அழகிரி என்னிடம் பகை கொண்டது பத்மாவை நான் நேசிக்கிறேன் என்ற சந்தேகத்தால்தான். அவளுக்குச் சக்ரபாணியை அவன் தயார் செய்து வைத்திருக்கும்போது நான் சந்தேகாஸ்பதமான வேளையில் அவளுடன் உரையாடிக்கொண்டிருந்ததை அவன் சகிக்கவில்லை. இந்த உறவு வெளியே தெரிந்துவிட்டால் சக்ரபாணி பத்மாவை நிராகரித்து விடுவானோ என்ற பீதி அவனுக்கு சக்ரபாணி பணக்காரனாகையால் அவனைப் பிடித்துப்போட அழகிரி தீர்மானமாகப் பிளான் போட்டிருந்தான். இதெல்லாம் எனக்குப் பின்னால்தான் தெரியவந்தது. நான் பத்மாவிடமும் சாதாரண நட்பிற்கு மேற்பட்ட கட்டத்தை எட்டிப் பார்க்க நினைக்கவேயில்லை. ஆனால், உஷாவை நான் பார்த்தபோது என் நிலைமை வேறு தினுசாகிவிட்டது. நூறு பத்மாவைக் கொடுத்தாலும் என் உஷாவை நான் விட இப்போது சம்மதிக்க மாட்டேன்"

"செட் இதெல்லாம் என்ன தறிதலைத்தனம்"

"மேலும் அவள் என் மாமா பெண் என்று தெரிந்தபோது..."

"செட் காலிப்பயலே! இதெல்லாம் என்ன ஒழுங்கு? நம்ப குடும்பத்திற்கு யோக்யமாக ஒரு விவாகம் பண்ணிக்கொண்டு விட வேண்டியது முதல் அவசியம். பிற்பாடு வீட்டில் டிப்பன் ருசிக்குத் தகுந்தாற்போல் கிடைக்காவிட்டால் கிளப்பில் நுழைவது நியாயமாகும்"

"அந்த நியாயம் உங்கள் காலத்தில். இப்போது புது நாகரீகத்தில் வீடானால் வீடு கிளப்பானால் கிளப்பு என்ற ஒரே உறுதிதான் மதிக்கப்படுகிறது"

"ஆனால் இப்போது என்ன செய்வதாய் உத்தேசம்"

'உங்கள் மாப்பிள்ளையாகவே தீர்மானித்திருக்கிறேன்"

"செல்லத்தைக் கல்யாணம் செய்து கொள்கிறாயா? உன் தாயாரும் இன்றுதான் மனப்பூர்வமாய் அந்த விவாஹத்தை அனுமதித்திருக்கிறாள்"

"உஷா உங்கள் பெண் அல்லவா?"

"செல்லத்திற்குப் பிறகுதானே உஷா?"

"வயதிலா"

"சீ காலிப்பயலே"

"நீங்கள் மாமா, அழகிரியிடம் பேசியதையெல்லாம் நான் கேட்டுக்கொண்டுதானிருந்தேன்.

இரண்டு குழந்தைகளும் உங்களுக்குச் சமம்தானென்றும் உஷாவுக்கு நீங்கள் சொத்து ஏற்படுத்தி வைக்கப் போகிறீர்களென்றும் தெரிந்துகொண்டேன்.

"சொத்தா?— ஆமாம், என் குழந்தைக்கு நான் கொடுக்க இந்தப் பயல் என்ன என்னைக் கேழ்க்கிறது அந்தக் கருமியிடம் முதலில் வாங்கவேண்டியதை வாங்கிவிடவேண்டுமென்று எனக்கு உத்தேசம். இல்லாவிட்டால் அவன் நிர்தாக்ஷண்யமாய் நாமத்தைச் சாத்திவிடுவான். பெற்ற பெண்ணை அவன் எவ்வளவு பாடுபடுத்தி வைத்திருக்கிருன்! எனக்கும் அவனுக்கும் வெகு நாளாகவே ஆகாது. அந்தக் காலத்திலெல்லாம் என்னைக் கண்டால இந்தப் பயலுக்கு ஸிம்மஸ்வப்பனம். பணம் ஒன்றே குறி அவனுக்கு. பேராசை பிடித்த பேய். எந்த அக்கிரமத்திற்கும் பின்வாங்கமாட்டான். கிராதகன். நெஞ்சில் ஈவு இரக்கம், பச்சாதாபம் இல்லாத பாபி. பேச்சு மட்டும் சக்கரையாய்ப் பேசுவான். கபடமாய்ப் பேசி ஆளைக் கொடை கவிழ்த்துவிடுவான். நீ வேண்டுமானால் பார். அவன் சக்ரபாணியை உறிஞ்சிக்கொண்டு உதறி விடுவான்."

"மாமா, அதை மட்டும் நான் நம்ப முடியாது பத்மா, அழகிரியைக் காலைவாறி விட்டுவிட்டு ஒழுங்காய் கௌரவமாய் சக்ரபாணியுடன் வாழ்க்கை நடத்துவாள் என்பது நிச்சயம். அவளின் ஆழ்ந்த உயர் குணங்களை அழகிரி அறிய சக்தியற்றவன்"

"அந்தப் பயல் உன்னை பலாத்காரம் செய்து ரூபாய் ஆயிரம் வாங்கியதை நான் திருப்பிவாங்காமல் விடப்போவதில்லை. அதைச் சேர்த்து அவன் உஷாவுக்கு ஆருயிரம் கொடுக்கவேண்டும். நாளைக்கு அவனைக் கண்ணில் விரல் கொடுத்து ஆட்டிவிடுகிறேன், பார்"

"அவனுக்கு, எனக்கும் உங்களுக்கும் உள்ள உறவு தெரியாதே"

"எப்படித் தெரியும்",

கார் வீடு சேர்ந்தது.

"அம்மாவிடம் எல்லாவர்றையும் சொல்லப் போகிறீர்களோ?"

முன்னொரு காலத்தில்

"அந்தா நிக்கருளே, அவதான் ஸினிமா ஸ்டார் பேபி வனஜா...!"

"சொல்லாமல் என்ன பண்ணுகிறது. உனக்கு மண்டகப்படி இருக்கிறது வா உள்ளே"

"மாமா, நீங்கள் என் பக்ஷம் பேச வேண்டும் எப்படியும். உங்கள் பெண்தானே — செல்லம் என்னை விரும்பவேமாட்டான். நீங்கள் வேண்டுமானால் கேட்டுப் பாருங்கள்"

"செல்லமில்லாவிட்டால் ஒரு செங்கு எவளையாவது கட்டிப் போடுகிறோம். அதற்காகத் தேவடியாக் குட்டியை."

"மாமா மாமா- என்ன இப்படி ஆரம்பித்துவிட்டீர்களே. இந்தக் காலத்திலே எதுதான் நடக்கவில்லை? நீங்கள் இப்படிப் பேசுவீர்களென்று தெரிந்தால் நான் ஆத்துக்கே வந்திருக்கமாட்டேன்.

மாமா, சிவராமன் ராமநாதனின் வார்த்தைகளையே காதில் வாங்காதவர்போல் "அக்கா! பிள்ளையை அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன். மஞ்சநீர் கரைத்துக் காண்டுவா சொத்துப் பாட்டுவதற்கு" என்ருர்.

"ஆமாம் குறைச்சலில்லை எல்லாம் இருக்கட்டும் உள்ளே அழைத்துவா சோறும் ஆறிப் போறது"

(தொடரும்)

குற்றம் யாருடையது?

கே. வைத்தியநாதன்

மோகன் ரோஸ், என்னவோ ஒரு சிறு சப்தம் கேட்டு விழித்துக்கொண்டாள். அன்று அவள் மனம் அடித்துக்கொண்டது. காலைச் சூரியனின் இளம் வெயில் கண்ணாடிக் கதவுகளை ஊடுருவிச் சென்று அவள் அறை முழுதும் ஒளி மயமாக்கிவிட்டது. உடம்பை இப்படியும் அப்படியுமாகப் புரட்டிக்கொண்டு பாம்பு போல பலமுறை வளைத்துக்கொண்டாள். பிறகு சட்டென்று எழுந்து உட்கார்ந்தாள்.

விழித்துக்கொண்டது முதல் ஏன் அவள் உள்ளம் அப்படி அடித்துக்கொள்ளுகிறது? ஆமாம். அன்றுதான் அவள் கணவன் மோகன், கோர்ட்டில் அவள்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவான். விரைவில் நோட்டீஸ் ஒன்று கோர்ட்டு மூலமாக அவளுக்கு வரும். கணவனிடம் உடனே போய்ச் சேரவேண்டும் என்று அந்த நோட்டீஸ் கட்டளையிடும். அவள் போக மறுத்தால், கேட்பானேன்?—விவாக ரத்து வழக்கு ஆரம்பமாகும்!

அவளால் இனி அவன் வீட்டிற்குப் போகமுடியாது, "நான் அங்கே இனி அடி வைப்பதேது?" என்று அவள் திரும்பத் திரும்பத் தனக்குள் கூறிக்கொண்டாள். அவளை அறியாமலே அவள் வாய் முணுமுணுத்துக்கொண்டிருந்தது. மோகன் ஒருவேளை இன்னும் அவளை விரும்பிக்கொண்டிருக்கலாம். ஆனால், அவள் அன்று "இனி நான் திரும்பமாட்டேன்" என்று கூறிய அந்தக் கடைசி வார்த்தையினின்றும் நழுவமாட்டாள்.

கடைசியாக அன்று இரவு தன் சாமான்களுடன் அவன் வீட்டினின்றும் புறப்பட்டு வந்தது அவளுக்கு நன்றாக நினைவிருந்தது. மோகனுக்குப் பல கஷ்டங்கள் இருந்தன. அதனால் அவன் மிகுந்த சிரமத்துடனேயே தன் அலுவல்களைச் செய்து வந்தான். ஆகவே அவளிடம் முன்கோபமும், எரிச்சலும் வர வர அதிகமாகிக்கொண்டு வந்தன.

ரோஸ் அவன் வீட்டில் புகுந்த நாள் முதல் ஒவ்வொரு நாளும் அவர்களுககுள் போராட்டந்தான். எதிலும் அவர்கள் மனம் ஒன்றுபடுவதில்லை. ஒவ்வொரு சிறு விஷயத்திலும் அவர்களுக்குள் அபிப்பிராய பேதம் முந்தக்கொண்டு வந்தது. காரணம், அவர்களுடைய குண வேறுபாடேயாகும்.

மோகன் குணம் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறக்கூடியது. அடிக்கடி ஏற்படும் வேலைத் தொந்தரவால் கொடிய வேங்கைபோல் மாறிவிடுவான். மூர்க்கமும், பிடிவாதமும் பீறிட்டுக்கொண்டு வரும். ஆனால் அவள் இளகிய உள்ளம் உடையவள். கடுஞ்சொல் பொறுதவள். அத்துடன் பிறரது உணர்ச்சிகளையும் மனப்போக்கையும் உளவிட்டுணரும் திறனுடையவள். மோகனுக்கு அவள் போக்கு புரியவில்லை. அவள் ஏன் அவன் எண்ணங்களுக்கு ஒத்து வருவதில்லை என்பதை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. ரோஸின் மேன்மையான இருதயம் அவனது வெறிபிடித்த சொற்களால் தாக்குண்டு புண்ணாகியது. எனினும் அவன் மூர்க்க குணத்தை மாற்ற அவள் பலமுறை முயன்றாள். அவன் உள்ளப்போக்கைத் திருப்பித் தன் வழிக்குக் கொணர எவ்வளவோ பாடுபட்டாள். ஆனால்...............

அவன் ஏளனமாகச் சிரித்தான். "இந்தப் பெண்களே இப்படித்தான்!" என்று இழித்துக் கூறினான். அந்த இழிச்சொல்லிலும்—வெறுப்பும், கடுமையும் தொனித்தன.

* * * * *

அன்று இரவு மோகன் களைத்துப்போய் வீட்டிற்குத் திரும்பினான். வெளியில் அவன் அலைந்த அலைச்சலும், பட்ட சிரமமும் அன்று அசாத்தியமானது. அதனால் அவன் உள்ளத்தில் ஆத்திரம் குமுறிக்கொண்டிருந்தது. அடியுண்ட வேங்கைபோல வீடு திரும்பினான். இந்த நிலையை அறியாது ரோஸ் அவனை வம்புக்கு இழுத்தாள்.

"இப்படி ஓய்வு ஒழிவு இன்றி வெளியில் அலைந்து திரிகிறீர்களே! ஒரு கணமாவது இந்த அபலையைப்பற்றி நீங்கள் நினைப்பதுண்டா?........."

"ஒரு கணம் என்று என்னத்துக்கு? பொழுது விடிந்து பொழுதுபோனால் உன் இழவு நினைவைத் தவிர வேறு ஏது எனக்கு!" என்று எரிந்து விழுந்தான்; அவ்வளவுதான்.

இருவரிடமும் காரசாரமான சொற்கள் எழுந்தன. வாக்குவாதம் முற்றியது. அவளது கனிந்த சொல் ஒவ்வொன்றையும் அவனது கடுஞ்சொல் தாக்கிச் சிதைத்தது. அவன் தீச்சொற்கள் அனைத்தும் அம்புபோற் பாய்ந்து அவள் நெஞ்சைப்பிளந்தன. இறுதியில் அவளும் கோபங்கொண்டாள்.

"இதோ நான் போகிறேன். இனி நான் இங்கே திரும்பி வர மாட்டேன்" என்று சொல்லித் தன் சாமான்களுடன் புறப்பட்டாள். அவள் உள்ளம் கல்லாகிவிட்டது. பாறைபோல இறுகிப்போன இருதயத்துடன் நடந்தாள்.

அவன் அவளிடம் மேலும் ஏதோ பேச முயன்றான். ஆனால் அவள் செவியில் எதுவும் ஏறவில்லை. தடுக்க முடியாத ஒரு பிடிவாதத்துடன் வெளியேறிவிட்டாள்.

ஒரு சின்னஞ் சிறு வீட்டில் குடிபுகுந்தாள். மறுநாளே அவளுக்கு ஒரு உத்தியோகமும் கிடைத்தது. இனி யார் தயவும் அவளுக்கு வேண்டியதில்லை. கவலையற்ற அந்தச் சுதந்திர வாழ்விலும் இடையிடையே ஒரு நினைவு—அவனைப்பற்றிய சிந்தனை—எழாமலில்லை. அவனிடம் இனித் திரும்புவதில்லை என்ற திட சங்கற்பம் அவள் நெஞ்சில் ஆழப்பதிந்திருந்தது.

அவன் பலமுறை கடிதம் எழுதினான் அவளை உடனே திரும்பி விடும்படி. அவள் வராவிட்டால் அவள் மீது விவாகரத்து வழக்கு தொடரப் போவதாகவும் எழுதினான். அதைக்கண்ட அவள் சிறிதும் கலங்கவில்லை. விவாகரத்தினால் தனக்கே அதிக நன்மைகள் உண்டாகும் என்று அவள் எண்ணிக்கொண்டாள். ஒரு விஷயம் மட்டும் அவளுக்குச் சிறிது கவலையைக் கொடுத்தது. ஒருவேளை கோர்ட்டுக்குச் சென்று பலர் எதிரே அவள் நிற்க நேருமோ என்று அஞ்சினாள்.

* * *

அவள் எதிர்பார்த்த நோட்டீசும் வந்தது. பிரித்துப் பார்த்தாள் 'அவள் உடனே மோகனிடம் போய்ச்சேரவேண்டும்' என்ற கட்டளை காணப்பட்டது. அவள் சிரித்தாள். என்ன முட்டாள்தனமாக உத்தரவு என்றுதான் அவள் நகைத்தாள். "நானா! இந்த ரோஸா அதற்கு மசிபவள்! நடப்பது நடக்கட்டும்!" என்று தனக்குத்தானே பேசிக்கொண்டாள்.

பிறகு சாப்பிடப் போனாள். உணவு வேம்பைப்போலக் கசந்தது. ஆனால் களைப்பும், பசியும் மேலிட்டிருந்தன. நெஞ்சில் ஒரு பெருஞ்சுமை அழுத்துவதுபோலிருந்தது. அப்பால் எழுந்து சென்று மேஜை மீது கிடந்த ஒரு கதைப் புத்தகத்தை எடுத்துப் படிக்கலானாள். அதிலும் கவனம் செல்லவில்லை. அதை அப்படியே போட்டுவிட்டு நோட்டீஸை எடுத்துப் பார்த்தாள். பிறகு கீழே எறிந்தாள். பின்னர் எழுந்து படுக்கையை விரித்துப் படுத்தாள். அப்போதும் அவள் வேண்டாத—சிறிதும் பிடிக்காத—அந்த மோகன் உருவமே அவள் முன் வந்து நின்றது. "சே! என்ன மதியீனம்! இன்னுமா எனக்கு இந்தக் கோழைப்புத்தி!" என்று தன்னைத்தானே கடிந்துகொண்டாள்.

அப்பால் எழுந்து ஜன்னலருகே வந்தமர்ந்தாள். சற்று தூரத்தேயிருந்த ஒரு காப்பி ஹோட்டலிலிருந்து ரேடியோ பாட்டு ஒன்று இனிமையாகக் கேட்டது. "என் ஆசை மனோகரா!...." என்ற அந்த இசைச்சொற்கள் அவள் திட சித்தத்தை ஒரு நொடியில் குலைத்து விடும்போலிருந்தன. ஆ! அதே கனிவோடு அவள் அந்த மோகனைக் காதலித்தாளே!...சீ! என்ன பேதமை இது! இன்னுமா இந்த இரக்க சிந்தை! விவாகரத்தாகட்டும்! ஒருவழியாக இந்தப் பந்தத்தை ஒழித்துவிட்டுக் கவலையில்லாமல் காலம் கழிக்கலாம் அல்லவா!

"தனியாய்—தன்னந்தனியாய்.. ...அப்படியானால் அவள் எதிர்காலம் வெறிச்சென்றல்லவா யிருக்கும்!—ஆம், அவள் விரும்பும் அவ

காசம் — ஓய்வு இருக்கிறது! அதைத்தான் அவள் விரும்பினாள்! அது இப்போது கிடைக்கப்போகிறது! ஓரளவு கிடைத்தும் விட்டது! ஆனால், அந்த நேரத்தில் அவள் என்ன செய்வது? அந்த நேரத்தை எப்படிக் கழிப்பது? அப்போதும் ஏதேனும் வேலைசெய்வதா? அல்லது அவளை முன்பின் அறியாத ஒரு கூட்டத்துள் அவள் புகுந்துதிரிவதா? வேண்டுமென்றே சிலசமயம் நீண்டுகொண்டிருக்கும் இரவு வேளைகளை எப்படித் தனிமையில் கழிப்பது?

இவ்வாறு சிந்தித்தபடியே அவள் எண்ணம் மோகன் மீது சென்றது.

“ஆம். அவனை அவள் எத்தனை ஆர்வத்தோடு நேசித்தாள்! அவன் பேச்சிலும், நடையிலும் எப்படி அவள் உள்ளத்தைப் பறிகொடுத்திருந்தாள்! ஆம். அந்த நெகிழ்ச்சி! அந்த மோகன உணர்ச்சி! அந்த அபூர்வ காந்த சக்தி அவள் உள்ளத்தில் எழ அவனிடத்தில் என்ன விருந்தது? தன்னுடன் பழகிய மற்ற வாலிபர்களிடத்தில் இல்லாத என்ன புதுமையை அவனிடத்தில் கண்டிருந்தாள்?......

“ஐயோ! இதென்ன சிந்தனை. மறுபடியும் மறுபடியும் அந்த மோகன் ஏன் வருகிறான்? அவனை இன்னும் மறக்காதிருக்கும் இந்தப் பேதை நெஞ்சை என்ன செய்வது? அவன் கழுத்துடை முடிச்சும், அவனது சுருண்ட கிராப்புத் தலையும், அவனது குறும்புத்தனமான சிரிப்பும்... ஐயோ! யாருக்கு வேண்டும் இவைகள்?

குடித்தனம் தொடங்கிய ஒரு மாதத்திற்குள்ளாக அவன் அவளைப்படுத்தி வைத்தபாடு—அப்பா! என்ன கடூரமான பார்வை! எத்தனை கொடுமையான பேச்சு! எவ்வளவு விகாரமான கோரச் சிரிப்பு! இவ்வளவையும் அவள் இந்த ஒரு வருஷமாக எப்படித்தான் சகித்துக்கொண்டிருந்தாளோ?......

அவள் கையிலிருந்த அந்த நோட்டீஸ் மெல்ல நழுவிக் கீழே விழுந்தது. கண்ணீர் பெருகி வழிந்து கன்னங்களைக் கறைப்படுத்தியது அப்படியே படுக்கையில் குப்புறச் சாய்ந்தாள். விக்கி விக்கி ஒரு குழந்தைபோல அழுதாள்.

அன்று மாலை அவள் எழுந்து காப்பி போட்டாள். அப்போதும் அவள் விழிகளில் சோகம் படர்ந்திருந்தது. அந்த மாதிரி மாலை நேரங்களில் காப்பி தயாரிக்கும் போதெல்லாம் அவள் கணவன் தன் பாகத்தைக் குடித்துவிட்டு அவள் பங்குக்கும் அடிபோடுவான். ஓரோர் சமயம் அவள் பருகிக்கொண்டிருக்கும்போதே வெடுக்கென்று பிடுங்கிக் குடித்துவிட்டுச் சிரிப்பான். இதெல்லாம் மணமான புதுசில் நடந்த சம்பவங்கள் என்றாலும் அவள் நினைவுக்கு நேற்று நடந்ததுபோலத் தோன்றியது. குழந்தை போல விளையாடிய அந்த மோகனை அவள் எப்படி மறப்பது?

இரவு வந்தது. எங்கும் இருள் கவிந்தது. வீதி விளக்குகள் கூட எங்கோ ஏற்பட்ட ஒரு கோளாறினால் கண்ணை மூடிவிட்டன. அவள் அறை விளக்கும் உயிரற்றுப் போய் விட்டதால், மண்ணெண்ணெய் விளக்கொன்றை ஏற்றி வைத்தாள். அதன் மங்கலான வெளிச்சத்தில் அறை முழுதும் இருண்ட நிழல் அங்கங்கே படரச் செய்துவிட்டது.

இருண்டு கிடக்கும் வீதியையும் சுவர்களில் சூழ்ந்துள்ள நிழலையும் பார்க்கப்பார்க்க அவள் உள்ளம் அச்சத்தால் நடுக்குற்றது. தனியே இருக்கும் அவளுக்கு யாரேனும் தீங்கு நினைத்தால்........இந்தப் பேயிருட்டில் எத்தகைய அபாயமும் அவளுக்கு இலகுவில் நேரலாமல்லவா? ஆனால், அந்த மோகனுடன் இருந்தபோது இந்தப்பயமில்லையல்லவா அவளுக்கு! பேய் வந்தால் கூட அவனுடனிருந்தபோது அவளுக்குப் பயமில்லையே! ஆம் அவன் அவளைக் காத்துவந்தான். உற்ற துணையாக விருந்தான். அவனில்லாத இந்தத் தனி வாழ்க்கையில் அச்சமற்று இருக்க முடியுமா? இந்த ஏகாந்த வாழ்க்கையில்தான் அவள் என்ன இன்பத்தைக் காணப்போகிறாள்?

மோகனுடன் வாழ்ந்த அந்த வாழ்க்கையில் இன்பம் இல்லாமலா போய்விட்டது! உண்மையில் அந்த வாழ்க்கையில் குறை ஒன்றுமில்லாமல்தான் இருந்தது! மோகன் அவளைக் கோபித்துக் கொண்டதற்கெல்லாம் காரணமில்லாமலிருக்கமுடியுமா? அவள் மீதுந்தான் தவறுகள்சில காணப்

பட்டிருக்கும்! அவன் இஷ்டப்படியெல்லாம் அவள் நடந்துகொண்டிருந்தால் அவள்மீது ஏன் கோபிக்கப்போகிறான்? அவள் மீது குற்றம் ஒன்றுகூட இல்லையென்றாலும், வெளியில் போய் வந்த அலுப்பாலும் சலிப்பாலும் அவளைக் கடிந்துகொண்டதால் என்ன நஷ்டம்? மனைவி என்ற உரிமையால் தானே அவளைக் கோபித்துக்கொள்ளுகிறான்!

அன்றுதான் — அந்தப் பொல்லாத நாளன்று—என்ன பிரமாதம் வந்துவிட்டது? அதற்கு முன் எத்தனையோ தடவை அவனுக்கு அவ்வளவு கோபம்வந்ததில்லையா? அவ்வளவு கடூரமான சொற்கள் சொன்னதில்லையா? பின் ஏன் அவளுக்கு அப்படி வெறுப்பு உண்டாயிற்று? அப்படித் திடீரென்று அவளுக்கு அந்த வாழ்க்கை கசந்துபோனது ஏன்?......

"ஆம் என்னுடைய அசட்டுத்தனந்தான்! அன்று என் பொல்லாத காலம், நான் அவரை வெறுத்து வெளியேற நேர்ந்தது! அவர் தன் காரியங்களையே கவனிக்கிறார் என்று நான் அவர்மீது குற்றஞ்சாட்டினேன். அவர் என்னைக் கடிந்துகொண்டார். என் மீது பல குற்றங்களும் சுமத்தினார். ஆனால், கவனித்துப் பார்த்தால் குற்றம் என்னிடமே மிகுதியாக இருக்கிறது. நானே பெரிய குற்றவாளியாவேன். ஆம். இதுதான் அன்று உண்டான மனக்கசப்பிற்குக் காரணம். நான் எனக்கு நியாயமாக உள்ள உரிமைக்குமேல் அவரிடம் எதிர்பார்த்தேன். அதனால் அவர் உரிமைக்கும் பங்கம் நேருவதை நான் பொருட்படுத்தவில்லை. அப்படி வந்த விபத்துதான் இது."

ஆ! இப்போது உள்ளங்கை நெல்லிக்கனிபோல அவளுக்கு எல்லாம் விளங்கிவிட்டது. அவன் விருப்பத்தை மடக்கி அவள் விருப்பத்திற்கு அவனைத் திருப்ப முயன்றாள். அது முடியவில்லை. இதற்கு அவளல்லவா பொறுப்பாளி! அவளல்லவா குற்றவாளி! குடும்பம் என்றால் எல்லாந்தான் இருக்கும் என்று எத்தனையோ பேர்சொல்லக்கேட்டிருக்கிறாளே! அவளையே பெரிதாகவெண்ணி அவள் நலத்தையும், விருப்பத்தையுமே அவன் கவனிக்கவேண்டும் என்று எதிர்பார்த்தது எவ்வளவு பெரிய தப்பு!............

* * * * *

பொழுது விடிந்தது. மோகன் வீட்டு வாயிலில் வண்டியொன்று வந்து நின்றது. அதிலிருந்தும் இறங்கிய ரோஸ் தயங்கித் தயங்கி உள்ளே சென்றாள். தூசியும், தும்பும், குப்பையும் புழுதியும் நிறைந்து கிடக்கும் கூடத்தையும், முற்றத்தையும் பார்த்தபடி நின்றிருந்த மோகன் "ஆ! என் கண்ணே! வந்துவிட்டாயா?" என்று தன் இரு கரங்களையும் நீட்டினான். அவற்றினிடையே புகுந்த ரோஸ் அவன் மார்பிற் சாய்ந்தபடி கண்ணீர் பெருக்கினாள்.

"குற்றம் என்னுடையது. ஏன் அழுகிறாய் நீ?" என்றான் மோகன் அவள் கண்ணீரைத் துடைத்தபடி.

"இல்லை. குற்றம் என்னுடையதுதான்!" என்றாள் ரோஸ் தேம்பிக்கொண்டே.



ஆசிரியர்:— (எழுந்தாளரிடம்) உங்க தொடர் கதைக்கு 'அனுமார்வால்' எங்கிற தலைப்பை மாத்தி விடுங்கள். ஏன்னா, பெயரைப் பார்த்ததும் கதை முடிவேயில்லாமல் வளவளன்னு வளந்துகொண்டே போகுமோன்னு வாசகர்கள் பயப்படுவா. அதனாலேதான்!

சத்வைத்யசாலை நஞ்சன்கூடு

"நஞ்சன்கூடு பல்பொடி"

பாகடெரியின் சிறந்த மருந்துகள்

I.D.L.

குழந்தைகளுக்கு:
12 காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை

குடும்ப அவசியங்கள்:
99 ஜ்வரேக் எல்லா ஜ்வரங்களுக்கும்
77 காலரெக்ஸ் அஜீர்ண பேதிக்கும், விடி பேதிக்கும் (காலரா)
23 பெமினோ (பெயின பாம) தலைவலி, வாயுபிடிப்பு .....

தினஉதவிகள்:
61 நஞ்சன்கூடு பல்பொடி நீ. டெ. பல்உபாதைகளையும் கண்டிக்க
78 கூலெக்ஸ் உஷ்ண சமன தைலம்
55 ஜிஞ்சிப் அஜீர்ண, பித்த சமனி
{ மற்ற மருந்து ஜாபிதாவிற்கு எழுதவும்

ஸோல் ஏஜெண்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் வீதி, மதறாஸ்

காலரா, அஜீர்ண பேதிக்கு, I. D. L. நெ. 77. காலரெக்ஸ் சிறந்த மருந்து ரூ. 1-8-0 தபாலில் அனுப்ப ரூ. 2-6-0 அனுப்பவும்.

டிப்போக்கள்: மதுரை, கோயமுத்தூர், கும்பகோணம், பம்பாய்.

இயற்கையின் அற்புதம்!

தென்னையில் இரண்டு, மூன்று கிளைகள் உண்டாவது அற்புதம், ஆனால், கிளைகளிலிருந்து கிளைகள் பிரிவது அதைவிட அற்புதம். அத்தகைய அற்புதமான இயற்கையின் சிருஷ்டி, சென்னை கீழ்ப்பாக்கம், சுப்பிரமண்ய ஐயா தெருவிலுள்ள இம்மரத்தில் காண்கிறோம்.

தேகப்பயிற்சி செய்பவோருக்கு மிக அவசியமான சக்தியை அம்ருதா அளிக்கிறது. இந்த ரதத சுத்தி திராவகம் இளைஞர்கள், முதியவர்கள், குழந்தைகள் அனைவருக்கும இன்றியமையாதது. வாய்க்கு மிக இனிப்பானது, குணத்தில் சிறந்தது. அரிய மூலிகைகள், பழச் சத்துக்களைக்கொண்டு உயர்ந்த வைத்திய முறைபபடி தயாரிக்கப்பட்டு வரும் இந்த ஜீவ சக்தி திராவகம் யாவருக்கும் இணையற்ற நண்பன்.

கேஸரி குடீரம் லிமிடெட் மதராஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும்

தமிழ்நாட்டுக்கும் ஏஜண்டுகள்:—

ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்.

பர்ஹாம்பூர் - செகந்திராபாத் - பெஜவாடா - மதுரை.

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி

லேட் கான்சாகப எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல ப்ரொபரைடடா,
ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

★

FREE GIFT.

OF YOUR 1949 HOROSCOPE. IMPORTANT PLANETARY INFLUENCES BRING NEW OPPORTUNITIES FOR UNPRECEDENTED IMPROVEMENTS IN YOUR SOCIAL, PROFESSIONAL & FINANCIAL AFFAIRS DURING 1949. LEARN AT ONCE THE GREAT GOOD LUCK THAT AWAITS YOU.

SEND NO MONEY

SEND ONLY YOUR HOROSCOPE COPY OR DATE OF BIRTH AND YOU WILL BE THRILLED WHEN YOU RECEIVE THE INTENSELY INTERESTING FORECAST OF YOUR FUTURE ABSOLUTELY FREE. WRITE AT ONCE TO—

Prof. SEKHAR. B.A. (Wash) M.I.B.M. (U.S.A.)
The Great Mesmerist & Zamindar
ELLORE. (West Godavari Dt.)

N. B. All correspondence & Readings in English only

★

மிஸ் அமெரிக்கா-1948!

1948-ம் வருஷத்திய அழகுராணி மிஸ் அமெரிக்காவால் பொறுக்கப்பட்டுள்ள மிஸ் மின்னஸோடா. அட்டாலாண்டிக் நகரில் சென்ற செப்டம்பர் 11-ந்தேதி நடந்த அழகுப்போட்டியில் இவர் வெற்றி பெற்ருர். இவருக்கு வயது 18.

நமது

தீபாவளி வாழ்த்துக்களும் பரிசு திட்டமும்

எங்கள் சொந்த கைத்தறியில் தயார்செய்த உயர்ரக பட்டுசேலை 1-11-48 முதல் 11-11-48 வரை 24 ரூபாய்க்கு மதிப்புள்ள 6 கஜம் நீளம் 12 ரூபாய்க்கு தீபாவளி பரிசாக மித்திரன் வாசகர்களுக்கு மட்டும் வழங்க நிச்சயித்து, இந்த பரிசு திட்டம் வெளியிட்டிருக்கிறோம். தாங்கள் விலாசமுடன் இதைக் கத்தரித்து அனுப்பினால் 12 ரூபாய்க்கு சாரி 1 அனுப்பப்படும். நபர் ஒன்றுக்கு ஒரு சாரிக்கு மேல் வழங்கப்படாது. 11வுக்கு பின் வருபவைகள் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படாது. வியாபார விவரத்திற்கு எழுதவும்.

பெயர்.......................................

ஊர்.......................................

தேதி.......................................

ஜோதி பேபிரிக்ஸ்.

கோட்டாறு-திருவிதாங்கூர்



501 ஸோப்பால்

வெளுக்கப்பட்டது.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

“சுதேசமித்திரன்”

வாரப்பதிப்பு

★

சந்தா விவரம்

(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்.)

	இந்தியா, சிலோன்,	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணு 4

3-மாதத்திற்குக் குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்,

“சுதேசமித்திரன்” ஆபீஸ்,

மவுண்ட்ரோட், மதராஸ்.

பிரசுரமான கிருதிகள்

★

“சுதேசமித்திரன்” வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ் கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப் படுத்தப்பட்டவை:—

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன. ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும். தபால் செலவு ப்ரத்தியேகம்.

மானேஜர்.

“சுதேசமித்திரன்” புத்தகசாலை,

மவுண்ட் ரோடு, சென்னை.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.
285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

எல்லோரும் எங்கள் பீ. எஸ். வஸ்துக்களை உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும் ஆரோக்கியமானது

P.S.

பெருங்காயம் – பாதம் எண்ணெய் – அம்லா ஹேர் ஆயில் – வாசனை தேங்காய் எண்ணை - கஸ்தூரி குங்குமப்பூ - கோரோஜனம் – ஊருகாய் (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபிகுல்கந்து–பஞ்சாப்தேன் - முத்து பன்னீர்–ஓமவாடர் - முறப்பா, நெல்லிக்காய் – இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்கள் :—

மதருஸ் புட்பிராடக்ட்ஸ்,
45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. மதருஸ்.

முக்கிய அறிவிப்பு

மந்தார விடு இலை, தையல் இலை

சகாயமான விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும்.

S.மாணிக்கம்செட்டி கோ.,
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு
மதராஸ் 1.

ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

கூடிய சீக்கிரம் எதிர்பாருங்கள்
மாணிக்கபஸ்பம் சிவபுரிபுகையிலை
மீனம்பாளையம் ரோஸ் புகையிலை
வாசனை பட்டை புகையிலை
வெளிவந்து விட்டது!
வாசனை பாக்குத்தூள்
காலணுவுக்கு இரண்டு.
சென்னைக்கு
சில்லரை விற்பனையாளர் தேவை.
வெளியூர்களுக்கு ஏஜண்டு தேவை.

தயாரிப்பவர்:

மாணிக்க விலாஸ்
11 பீட், மதராஸ் 1.

S.A.H.
TRADE MARK

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக் கூடியது. பத்தியமில்லை 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0.

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் சிலவு அணு 14 முன் பணம அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இறும்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM

189 வக்கீல் புதுதெரு - P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர். 179 SEA ST., COLOMBO.



மறுக்க முடியாத உண்மை!

நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது

அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ். | 9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

போன் நெ. 3432.

கர்ப்பச் சேதத்துக்குப் பிறகும், பிரஸவத்துக்குப் பிறகும், நீடித்த ஜுரங்களுக்குப்பிறகும் தலைமயிர் அதிகமாகக் கொட்டுவதுண்டு. சாதாரண ஜுரங்களுக்குப் பிறகும் மயிர் உதிர்வதுண்டு. அதிர்ச்சி ஸஹிதமான ஜுரமானாலும் மயிர் அபரிமிதமாகக் கொட்டும். சில சமயம் கூந்தல் விடாமல் உதிர்ந்து கொண்டேயிருக்கும். எந்தக் காரணத்தால் மயிர் உதிர்ந்த போதிலும் கேசவர்த்தினியைக்கொண்டு மயிர் உதிர்வதை நிறுத்துங்கள்.

உதிர்ந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக்கூந்தலைப் பெறுங்கள். கேசவர்த்தினியின் உதவியால் அற்ப கேசத்தை அபரிமித கேசமாக்குங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது; விருத்தி செய்வது; அழகுபடுத்துவது விலை அணு 14. தபால் செலவு தனி. எல்லா கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயன சாலை,
"ஆச்ரமம்", க்ராஸ்கட் ரோட், பவர் ஹவுஸிற்கு அடுத்தது கோயமுத்தூர்.

சக்தி ஆரூடம்!

★

சென்னை தியாகராய நகர் பிரபல டாக்டர் K. ராகவன் L. I. M. எழுதுகிறார்:— 'தங்கள் சாஸ்திர ஞான கியாதி இணையில்லாதது. ஜாதக பலன்கள் கூறும் திறமை வியக்கத்தக்கது."

1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I.)

வாரியர்

பிருங்காமலகாதி

தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம் : 1936.)



1 பவுனில் 4 ஜதை கவரிங் வளையல்கள் கிடைக்கும்

காஸிம் பிரதர்ஸ், 192, சைனா பஜார், சென்னை.

★ தீபாவளி பண்டிகை ★

தீபாவளி பண்டிகைக்கு வேண்டிய நவீன மோஸ்தர் பட்டு ஜவுளி தினுசுகள் எல்லாம் எங்களிடம் சரஸமான விலைகளில் கிடைக்கும்.

R. S. E.

ராதா ஸில்க் எம்போரியம்

(போன் : 84188)

ஸன்னதி தெரு, மயிலாப்பூர், மதராஸ்.

ருக்மணி ஸில்க் எம்போரியம்
48—49, பெரிய தெரு,
கும்பகோணம்.

பம்பாயில் ஸ்பெஷல் பிராஞ்சு:—
ராதா ஸில்க் எம்போரியம்
2, விஸ்ராணிபவன், டிலாங்ரோட், G. I. P. பம்பாய்.

புரொப்ரைட்டர்ஸ் : *R. K.* ராதாகிருஷ்ண செட்டியார் & பிரதர்.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor : C. R. Srinivasan B A.

Regd. No. 2514,

தலையிட்டோர்

சூழ்ச்சி

பலிக்கவில்லை



தேவஸ்தானம்
கமிட்டி

திருப்பதி
26-9-48.

பகவான் ஸ்ரீ வாருவின் ரத்ன கிரீடத்தில் திகழும் அபூர்வமான வேலைப்பாட்டை கவனிக்கும்போது அதைத்தயாரித்த ஸூரஜ்மல் கம்பெனியாரின் உன்னதமான வேலைத் திறமையில் தங்களுக்குள்ள பெருமதிப்பை தெரிவித்துக்கொள்வதில் திருமலை திருப்பதி தேவஸ்தானக்கமிட்டியார் மிக்க மகிழ்ச்சியடைகின்றனர். கலையின் சிகரம் பூரணப் பொலிவுடன் விளங்கலாமென்பதற்கு இக்கிரீடமே தகுந்த சான்று.

B. வீராசாமி நாயுடு,
கமிஷனர்.

முடிவில்

உண்மை

ஊர்ஜிதம்

ஸூரஜ்மல்ஸ்

திருப்பதி ரத்ன கிரீடம் தயாரித்தவர்.

313, எஸ்பிளனேட் : : மதராஸ்.

சுதேசமித்திரன்

இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்



WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

★ தீபாவளி பண்டிகை ★

தீபாவளி பண்டிகைக்கு வேண்டிய நவீன மோஸ்தர் பட்டு ஜவுளி தினுசுகள் எல்லாம் எங்களிடம் சரஸமான விலைகளில் கிடைக்கும்.

R. S. E.

ராதா ஸில்க் எம்போரியம்

(போன் : 84188)

ஸன்னதி தெரு, மயிலாப்பூர், மதராஸ்.

ருக்மணி ஸில்க் எம்போரியம்
48—49, பெரிய தெரு,
கும்பகோணம்.

பம்பாயில் ஸ்பெஷல் பிராஞ்சு:—
ராதா ஸில்க் எம்போரியம்
2, விஸ்ராணிபவன், டிலாங்ரோட், G. I. P. பம்பாய்.

புரொப்ரைட்டர்ஸ் : R. K. ராதாகிருஷ்ண செட்டியார் & பிரதர்.

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக் கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் சிலவு அணா 14 முன் பணம அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனாம்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM

189 வக்கீல் புதுதெரு - P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர். 179 SEA ST., COLOMBO.

சக்தி ஆரூடம்!

★

சென்னை தியாகராய நகர் பிரபல டாக்டர் K. ராகவன் L. I. M. எழுதுகிறார்:— "தங்கள் சாஸ்திர ஞான கியாதி இணையில்லாதது. ஜாதக பலன்கள் கூறும் திறமை வியக்கத்தக்கது."

1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I.)

மறுக்க முடியாத உண்மை!

நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது

அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.

போன் நெ. 3432.

9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

பரிசு! பரிசு!!

போலி பாக்குத் தூள்களை வாங்கி ஏமாறுகிறீர்கள், பரிமள பாக்குத் தூள்களுக்கெல்லாம் அரசனான ஆர். கிருஷ்ணா பரிமள பாக்குத் தூளையே உபயோகியுங்கள்,

144—50 பொட்டலம் கொண்ட கேஸ் 1க்கு ரூ. 85. 50—0-0-3 பொட்டலம் 0-10-0. N. B. 25 காலி உறை அனுப்பினால் 50—0-0-3 பொட்டலம் இனாம்.

S. M. கிருஷ்ணா அண்டு கோ.,

2-137, ஆதியப்ப நாய்க்கன் தெருவு, மதராஸ் 1.

மாதம் ரூ. 150 சம்பாதிக்க வேண்டுமானால் ரியல் அசோகா அண்டு கோவில் வியாபார தொடர்ச்சி வைத்துக் கொள்ளுங்கள்.

எல்லா வகை சென்டுகளும், ஏர் ஆயில்களும், வாஸ்லைன், தலைவலி பாம், நீலகிரி தைலம், சிரங்கு மருந்து, பாக்கு தூள், மூக்கு பொடி புகையிலை, பர்பியூமும், அரை சேர் பர்பியூம் பாக்கு தூள் டின்களும் தயாரிக்கப்படுகிறது. விற்பனையாளர் தேவை. ரூ. 25 M. O. அனுப்பி சாம்பிள் செட் பெறுக.

N. B. ஒரு கேஸ் பாக்குதூள் தயாரிப்பதற்கான ரியல் அசோகா பர்பியூம் அரை சேர் பர்பியூம். கொப்பரை சீவல் கால் சேருடன் ரூ. 10. முந்துங்கள்.

ரியல் அசோகா அண்டு கோ.,

40, கிடங்கு தெரு, மதராஸ் 1.

வாரியர்

பிருங்காமலகாதி

தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம்: 1936.)

நடிகர்கள் தேவை

சினிமா உலகிற்குப் புதிய நடிகர்கள் தேவை. நடிகர்களிடம் டிபாசிட் பணம் வாங்கி ஏய்ப்பமிடும் போலிக் கம்பெனியல்ல. விவரங்களுக்கு இரண்டு முக்காலணு ஸ்டாம்புகள் அனுப்பவும்.

“ இன்ப நிலையம் ”

சங்கர்நகர், புதூர், மதுரை.



1 பவுனில் 4 ஜதை கவரிங் வளையல்கள் கிடைக்கும்

காஸிம் பிரதர்ஸ், 192, சைனு பஜார், சென்னை.

45-வருஷமாக புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்

த ங் க ப ஸ் ப ம்

ஒரே வேளையில் உங்களை பிரமிக்கச் செய்யும். இது ஒரு வரப் பிரசாதமான மருந்து. தேகபலமும் வாழ்வில் சந்துஷ்டியும் அளித்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து, நரம்புகளை வலுவாக்கி, வயோதிகனும் வாலிபனுடைய வலிமை பெற செய்கிறது. அனுபானம் பெரிய காமகேசரி லேகியத்துடன் 50 வேளை ரூ. 25.

வைத்தியபதி *R. M.* நாராயணசாமி பிள்ளை,

தன்வந்திரி வைத்தியசாலை, பழனி (S. I.)

பாத்ருடுவின் “பால சஞ்சீவினி”

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—	திருச்சி கிளை:—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி	15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

டெலிபோன்: 2246. தந்தி : கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தர மான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடி களின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனர்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா

ஸோல புரொப்ரைடடர்,

ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்

37, மண்ணடி, மதராஸ்.



எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

***M. R.* பார்த்தசாரதி ஐயங்கார்,**

28, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு,

திருவல்லிக்கேணி, மதராஸ்.

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷி பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோநிதி" தியாகராயநகர், மதராஸ் 17.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?

இதோ லக்ஷிமி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமிர்தம்.

40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ்: வால்டேர், ஆர். எஸ்.

லக்ஷிமி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.

ஜெயா எலக்டிரிக் கம்பெனி,

சின்னக்கடை வீதி, சேலம் டவுன்.

★

எலக்டிரிக்: பம்பு செட்டுகள், மோட்டார்கள், ஸ்டார்ட்டர்கள், ஸ்விட்ச் கியர்கள், பல்பு தினுசுகள்; ஒயர் காயில்கள், மீட்டர்கள், ரேடியோக்கள்.

இன்னும் மில்களுக்கும், விவசாயத்திற்கும், வீடுகளுக்கும் தேவையான எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்களும், சில்லரையாகவும், மொத்தமாகவும் விலை சரசமாய்க் கிடைக்கும்.

கதா மோகன ரஞ்சிதம்

3-பாகங்கள் விலை ரூ. 2-8-0

தபால் செலவு பிரத்யேகம்.

மானேஜர்: "சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை

★

FREE GIFT.

OF YOUR 1949 HOROSCOPE. IMPORTANT PLANETARY INFLUENCES BRING NEW OPPORTUNITIES FOR UNPRECEDENTED IMPROVEMENTS IN YOUR SOCIAL, PROFESSIONAL & FINANCIAL AFFAIRS DURING 1949. LEARN AT ONCE THE GREAT GOOD LUCK THAT AWAITS YOU.

SEND NO MONEY

SEND ONLY YOUR HOROSCOPE COPY OR DATE OF BIRTH AND YOU WILL BE THRILLED WHEN YOU RECEIVE THE INTENSELY INTERESTING FORECAST OF YOUR FUTURE ABSOLUTELY FREE. WRITE AT ONCE TO—

Prof. SEKHAR, B.A. (Wash) M.I.B.M. (U.S.A.)
The Great Mesmerist & Zamindar
ELLORE. (West Godavari Dt.)

N. B. All correspondence & Readings in English only

★



501 ஸோப்பால்

வெளுக்கப்பட்டது.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

முதல் பாகம் கைவசமில்லை.
இரண்டாம் பாகம் „ ரூ. 2.
மூன்றாம் பாகம் „ ரூ. 2.
(தபால் செலவு அணா 10)
V. P. அனுப்புவது கிடையாது.
சுதேசமித்திரன் புத்தகசாலை சென்னை.

வாழிய செந்தமிழ்!
சுதேசமித்திரன்
வாழ்க நற்றமிழர்!
வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ ஐப்பசி௴ 22உ ★ 1948-௵ நவம்பர்௴ 7உ No. 41

ஜமீன்தாரி ஒழிப்புத் திட்டம்

சென்னை அஸெம்பிளியில் ஜமீந்தாரி ஒழிப்பு மசோதா இறுதியாக நிறைவேறிவிட்டது. மகத்தான ஒரு சேவை செய்துவிட்டதாகச் சொல்லி ரெவின்யூ மந்திரி தம்மைத் தாமே முதுகில் தட்டிக்கொடுத்துக்கொள்ளுகிறார். உண்மையில் நேர்மையோ, தேசத்தின் தற்போதைய நிலையைப் பற்றிய உணர்வோ கொண்ட யாரும் இந்த மந்திரியின் குதூகலத்தில் பங்கு எடுத்துக்கொள்ள முடியாததுமட்டுமில்லை; அவர் பெருமை பேசுவதைப் பார்த்து பரிதபிக்கத்தான் வேண்டும்.

ஜமீந்தாரிகள் மறைய வேண்டுமென்ற கொள்கையைப் பொறுத்தவரை ஆட்சேபிப்பவர் யாருமில்லை. ஆனால், அதை அமுலுக்குக் கொண்டுவர இம்மசோதா குறிக்கும் வழிதான் நேரானதா? அதோடு, அது அமுலுக்கு வருவதற்கான சமயம் இதுதானா? இவையே முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

இம்மசோதாவின் அமைப்பு ஆரம்ப முதல் ஒரே கோளாறு மயமானது. அது முதன் முதலாகப் பிரசுரமானதிலிருந்து இன்றுவரை அதுபற்றி நடந்துவந்துள்ள வாக்குவாதம் கொஞ்ச நஞ்சமன்று. இவ்வளவுக்கும் மூல காரணம், இவ்வளவு முக்கியமான ஒரு நடவடிக்கைக்குரிய முன் யோசனை அல்லது முன்னேற்பாட்டுடன் இம்மசோதாவை அமைக்க வேண்டுமென்பதில் ரெவின்யூ மந்திரி சிறிதும் அக்கரை காட்டாததுதான். அள்ளித்தெளித்த ஒரு அவசரக் கோலமாக இம்மசோதாவை வரைந்து எப்படியாவது அதைத் துரிதமாகச் சட்ட புத்தகத்தில் புகுத்திவிடவேண்டுமென்று அவர் துடி துடித்து வந்திருக்கிறார். உண்மையில் இவ்வளவு முக்கியமானதொரு விஷயத்தில் இதற்கு முன் எப்போதாவது, எங்காவது இவ்வளவு பொறுப்பற்ற முறையில் ஒரு சட்டம் இயற்றப்பட்டதுண்டா என்பது சந்தேகம்.

இத்தகைய ஒரு மசோதாவை உருவாக்கு முன், இதைப் பொறுத்த அடிப்படையான அம்சங்களில் போதிய கவனம் செலுத்துவது ரெவின்யூ மந்திரியின் சாதாரண கடமையல்லவா? உதாரணமாக, இதனால் பாதிக்கப்படக்கூடிய ஜமீன்-இனாம் நிலங்கள் எவ்வளவு? அவற்றைத் தங்கள் வசப்படுத்துவதாயின், நஷ்டஈடாக எவ்வளவு பணம் கொடுக்க வேண்டியிருக்கும்? அதைக் கொடுக்க சர்க்காருக்குச் சக்தியுண்டா? இத்தகைய விஷயங்களைத் திட்டமாக நிர்ணயித்துக்கொண்டபிறகே அவர்கள் இதுபற்றிச் சட்டஞ்செய்ய முற்பட வேண்டுமென்பது சாதாரண பகுத்தறிவுக்கும் புலனாகக் கூடியது. எனினும், இந்த அடிப்படையான அம்சங்களைப்பற்றிய சரியான புள்ளி விவரங்கள்கூட ரெவின்யூ மந்திரியிடம் கிடையாது. அவரே இதை அஸெம்பிளியில் பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கிறார். இந்த நிலையில் அவர் அமைத்த மசோதா கோணல் மயமாகக் காட்சியளிப்பதில் என்ன ஆச்சரியம்!

ஏற்கெனவே நாம் குறிப்பிட்டதுபோல், இம்மசோதாவைப்பற்றி ஆரம்பமுதலே கடுந் தகராறு. காங்கிரஸ் மேலதிகாரிகள் இவ்

விஷயத்தில் பலமுறை தலையிட நேர்ந்ததும் அனைவருக்கும் தெரியும். இத்தலையீடு காரணமாக அம்மசோதாவின் அவலட்சணங்களில் இரண்டொன்று சிறிது மறைந்தது உண்மைதான். அதாவது, இனங்களில் சிலவற்றை மசோதாவினின்று ஒதுக்கவும், நஷ்ட ஈட்டின் அளவைச் சிறிது அதிகரிக்கவும் ரெவின்யூ மந்திரி ஒப்புக்கொண்டார். ஆனால், பல அடிப்படையான அம்சங்களில் அதிலுள்ள குறைபாடுகளை நீக்க அவர் சம்மதிக்கவில்லை. அவரது குருட்டுப் பிடிவாதத்தால் நீடிக்கும் அத்தகைய குறைபாடுகளுடனேயே தற்போது இம்மசோதா நிறைவேறியிருக்கிறது.

இம் மசோதாவின் அடிப்படையான அம்சங்களில் நஷ்ட ஈட்டைப் பொறுத்தது ஒன்று. எந்த நியாயத்தைக் கொண்டு இதில் குறித்துள்ள நஷ்ட ஈடு விகிதம் நிர்ணயிக்கப்பட்டதென்று தெரியவில்லை. உண்மையில் தங்களுக்கு எது சௌகரியமோ, அதுவே தான் நியாயமென்ற மனோபாவத்துடனேயே ரெவின்யூ மந்திரி இவ் விகிதத்தை நிர்ணயித்திருக்கிறார். நியாயம் எப்படியானாலும், இதற்குமேல் நஷ்ட ஈடு கொடுக்கச் சர்க்காருக்குச் சக்தியில்லையென்ற தோரணையில் பகிரங்கமாகப் பேசவும் அவர் கூசவில்லை. மொத்தத்தில் 12½ கோடி ரூபாய் நஷ்ட ஈடாகக் கொடுக்கவேண்டியிருக்குமென்று அவர் கூறுகிறார். ஜமீன்-இனாம் நிலங்களைப்பற்றிய சரியான புள்ளி விவரங்கள் இல்லாத நிலையில், நஷ்டஈட்டுத் தொகையை அவர் எவ்வாறு இவ்வளவு திட்டமாகக் குறிப்பிடுகிறாரென்று தெரியவில்லை. எப்படியும் அதற்குமேல் நஷ்டஈடு கொடுக்கமுடியாது என்பதே அவர் கருத்தாயின், நஷ்ட ஈட்டை நிர்ணயிக்க இம் மசோதாவில் வகுத்திருப்பது போன்ற சிக்கலான முறைகள் எல்லாம் எதற்காக? மேற்குறித்த தொகையை அந்தந்த எஸ்டேட்டின் வருமானத்துக்குத் தக்கபடி ஜமீந்தார்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிடுவது மிக எளிதான, நேரடியான முறையல்லவா? நியாயமான நஷ்டஈடு கொடுக்காமல், ஆனால், கொடுப்பதுபோல் பாசாங்கு செய்வதுதான் சர்க்கார் கருத்தோ என்று யாரும் சந்தேகம் கொள்வது இயற்கை.

இம்மசோதாவின்படி கொடுக்கவேண்டிய நஷ்ட ஈட்டையும், எப்போது எந்த முறையில் தொடுப்பதென்றும் இதுவரை சர்க்கார் தீர்மானித்தபாடில்லை. இப்போது முடிந்தால் கொடுப்போம்; இல்லையானால், இச்சட்ட அமுலை ஒத்திவைப்போம் என்று பிரதமர் அன்று கூறினர். இத்தகைய சட்டத்தை நிறைவேற்றி வைத்துக்கொண்டு, இதை அமுலுக்குக் கொண்டுவராதிருப்பதால் ஏற்படக்கூடிய குழப்பம் கொஞ்சமன்று. குறித்தபடி நஷ்ட ஈடு கொடுப்பதுபற்றிச் சந்தேக நிலையிலுள்ள சர்க்கார் இவ்வளவு அவசரமாக இத்தகைய ஒரு சட்டத்தை ஏன் நிறைவேற்றி வைத்துக்கொள்ளவேண்டும்? இதைப் பொறுத்த சரியான புள்ளி விவரங்களைச் சேகரித்து, எல்லா அம்சங்களையும் பரிசீலித்து, நஷ்ட ஈடு கொடுக்கவும் ஒரு திட்டமான ஏற்பாட்டை வகுத்துக் கொண்டு, பிறகு சட்டம் செய்தால் அதற்கிடையில் குடி முழுகிப்போய்விடாது.

மேலும், தேசத்தில் தற்போது பணவீக்கம் அதிகரித்துள்ள நிலையில் இந்த மசோதாவை ஒத்திவைப்பதே உசிதமென்று இந்திய சர்க்கார் கூறியுள்ள யோசனை அலட்சியம் செய்யக்கூடியதல்ல. இத்தகைய சீர்திருத்தங்களில் அவர்களுக்குள்ள அக்கரை சென்னை சர்க்காரின் சிரத்தையைவிட எவ்விதத்திலும் குறைந்ததன்று. எனினும், இந்தச் சீர்திருத்தங்களை உடனடியாக அமுலுக்கு கொண்டு வருவது நாட்டின் பொருளாதார இன்னல்களைப் பெருக்குமென்பது பட்டவர்த்தனமான உண்மை. எனவேதான் இந்திய சர்க்கார் மேற்கண்டவாறு யோசனை கூறியிருக்கின்றனர். எனினும், அதற்கு இணங்கும் எண்ணம் சென்னை சர்க்காருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், அவர்கள் எப்படிப் போனாலென்ன என்று இந்திய சர்க்கார் அலட்சியமாயிருந்துவிட முடியாது.

டர்ஹாமில் பாம்பு பக்தர்கள்

★

டர்ஹாம் நகரில் பாம்பு பக்தர்கள் பலர் இருக்கிறார்கள்; பாம்புகளை வாங்குவது நகருக்கு வெளியே தடை செய்யப்படவில்லை; நகரில் சர்ப்பங்களை வைத்துக் கொண்டு கூட்டம் நடத்தக் காணப்பட்டதால் போலீசார் கூட்டத்தைக் கலைத்து, பாம்புகளைப் பறிமுதல் செய்தனர்.

ரேடியோ கருவி வேலை செய்வதை சென்னை மந்திரி பார்வையிடுகிறார்

★

தியாகராயநகரில் உள்ள ரேடியோ கருவி பயிற்சி ஸ்தலத்துக்குச் சில நாட்களுக்கு முன்பு சென்னை நிதி மந்திரி ஸ்ரீ கோபால் ரெட்டி விஜயம் செய்து, மேற்படி கருவி வேலை செய்வதைப் பார்வையிட்டார்.



ஊழ்வினை

ஒரு பிறவியில் கிட்டும் நற்பயன் மறு பிறவியிலும் கிட்டவேண்டுமானால் அதற்கு ஊழ்வினைதான் காரணம். இவ்வாறு பிறவிதோறும் தொடர்ந்துவரும் அன்பு நல் ஊழினால் தலைவியையும் தலைவனையும் ஒன்றுசேர்ப்பதற்கு உதவியாயிருக்கிறது அதனை புலப்படுத்தும் அன்பின் செய்தி ஒன்றுண்டு.

விரோதிகளாகத்தோன்றிய இருவரிடம் பழைய அன்பு ஒனறி விடுகிறது. ஒரு தலைவனும், அவன் துமனைவியும் பாலைவனத்தின் வழியாக நடந்து செல்லுகின்றனர். இந்தஇரண்டு பேரும் பிள்ளைப் பிராயத்தில் சண்டை செய்யக் கண்டவர்கள் பலருண்டு. பாலைவனத்தின் வெம்மை, கொடுமை இரண்டையும் மறந்து அவ்விருவரும் இப்போது ஒன்றாகக் கைகோர்த்துக்கொண்டு இணைந்து செல்வதைக் கண்டு, ஊழ்வினையை நினைத்து ஆச்சர்யப்படுகிறார்கள் பார்ப்பவர்கள். அப்படி ஆச்சர்யத்தில் மூழ்கியவர்கள் "இதென்ன விந்தை! பிள்ளைப்பிராயத்தின் போது இவன் இவளுடைய தலைப் பின்னலைப் பிடித்து இழுத்து ஓடுவானே! செவிலிகள் தடுத்தாலும் சண்டையிடுவதை விடமாட்டேனே! இப்போதோவென்றால், இவர்கள் இரட்டைமாலை சேர்ந்தாப்போல மணம்புரிந்து வாழ வழி ஏற்பட்டுவிட்டதே! இத்தகைய புது நிலையை ஏற்படுத்தித் தந்த ஊழ்வினை மிகச் சிறந்தது தான்!'' என்று வாழ்த்துகிறார்களாம்.

இச்செய்தியைப் படம் பிடித்துக் காட்டும் செய்யுள் இதோ!

கண்டோர் கூற்று

இவனிவளைம்பால் பற்றவு மிவளிவன்
புன்றலை யோரி வாங்குநற் பரியவும்
காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிரா
தேதல் சிறு செரு வுறுப மன்றே
நல்லை மன்றம்ம பாலே மெல்லியற்
றுணை மலர் பிணைய லன்ன விவர்
மண மகிழியற்கை காட்டியோயே?

—குறுந்தொகை.



சென்னை மாகாண பல் வைத்தியர்கள் மகாநாடு சென்ற வாரம் சென்னையில் நடந்தது. இதில் கலந்துகொண்ட பிரதிநிதிகளின் படம்.

இராமானுச நூற்றந்தாதி

காயகசிகாமணி-அரியக்குடி
ராமானுஜய்யங்கார்
ஸ்வரப்படுத்தியது

காரேய் கருணை இராமா
　　நுச! இக் கடலிடததில்
ஆரேயறிபவர் நின்னருளின்
　　தன்மை? அல்லலுக்கு
நேரே உறைவிடம் நான்; வந்து
　　நீயென்னை உய்த்தபின் உன்
சீரே உயிர்க்குயிராய் அடியேற்கு
　　இன்று தித்திக்குமே (25)

திக்குற்ற கீர்த்தி இராமாநுசனை,
　　என் செய்வினையால்
மெய்க்குற்றம் நீக்கி விளங்கிய
　　மேகத்தை, மேவும் நல்லோர்
எக்குற்றவாளர் எது பிறப்(பு) ஏ(து) இயல்—
　　வாக நின்றோர்
அக்குற்றம் அப்பிறப்(பு) அவ்வியல்வே
　　நம்மை ஆட்கொள்ளுமே (26)

[காரேய் கருணை- மேகம் ஒத்த கருணை, உய்த்தபின்- உய்வித்தபின்; பிழைக்கச் செய்தபின், சீர்- சிறந்த குணங்கள்.]

கருத்து

மேகம்போன்ற கருணைநிறைந்த ராமானுஜரே! இக்கடல் சூழ்ந்த பூமியில் உம்முடைய கருணையின் தன்மையை யார்தான் அறிவார்? நானோ அல்லலுக்கு நேரே உறைவிடமாய் இருப்பவன் அப்படியிருந்தும், தேவரீர் வந்து உய்வித்தருளினீர். உய்வித்ததும் உம் முடைய கல்யாண குணங்களே என் ஆத்மாவுக்குத் தாரகமாயின. அடியேன் அவற்றையே இன்று ரஸித்தவண்ணமாய் இருக்கிறேன்.

[திக்கு உற்ற-திக்குகள் தோறும் வியாபித்திருக்கும். மேவும்-அடையும். இயல்வு-இயல்பு.

பொழிப்புரை

நாலு திக்கிலும் பரவிய புகழாளரான ராமானுஜர், நான் செய்திருக்கும் குற்றங்களைப் போக்கி, மேகம்போல் என் மீது கருணை பொழிந்திருக்கிறார். இவரை அடைந்திருக்கும் நல்லவர்கள் எந்தப் பிறப்பினராயினும் இயல்பினராயினும் எந்தக் குற்றவாளராயினும் கூட, அந்தக் குற்றமும் அந்தப் பிறப்பும் அந்த இயல்பும் நம்மை ஆட்கொள்ளும் என்பது என் நம்பிக்கை.

ராகம் : காம்போஜி   தாளம் : சாபு.

(பாட்டு 25—ம் 26—ம்)

பல்லவி

. நித பா , மக | மபா பா , பா பா தப பம | மா மப தா நித தப | த தா ரிஸ் ஸ் ஸ் நித தா நித ப ||

கா. ரேய் க . | ரு . ணை ரா மா . . . . | . னு ச றே . . | ந ட . . வி . ட . த்தில் . . ||

,,, தப ம — மகமப பாமக | மா , பா , மா தா நித பமகா | மா மா நா நிதபா | தா , தரிஸ் ஸ் ஸ் நித நிதபா ||

. . . . — ஆ . ரேப் அறி . | ப வர் நின் . . . . . ண ந | ளின் தன் மை அப் . . . | ல . . . லு . . . க்கு . . ||

; நித பமமா கபத | ஸ் ஸ் ஸ்ா ரிஸ் ஸ்ப் தா | ஸ்ா பத ஸ்ாரிக் ரிக் ரிஸ்ா , | ஸ்தரிஸ்நித தா நிப பத ||

நே . ரே . . . உறை | விடம் மான் . . . . வந் | நு நீ . என் . . . னே . | உப் த்த . . பின் . . உன் ||

; பத ஸ்ரிக்ாம்க்ரி ஸ் ஸ்ா | ஸ்தரி ஸ்நித தா நிப ஸப பாமம | பத ஸ்ா ரி ஸ் ஸ்நித நிதபா | பநித பமகா பா . த தரிஸ்ஸ் ||

சீ . ரேப் . . . . உயிர்க் | து பி . . ராய் . . அ . டி . | யேற் . . . டின் . . . று . . | தி. த்தி . . க்கு . மே . . . ||

, ப — தரி நித தா | தா , நிதப தநி தநி பத | , பத பா , த ஸ்ா | ஸ்தரி ஸ்நித தா நிப பா ||

. . — தி . க்கு . ற்ற | கீர் த்தி . . ரா . . . மா . | னு ச னே . என் | செய் . . . வி . னே . . யாம் ||

: கம பா , ப | பா , பா , பநி தப மகமா | காம பா , தா நித தப | தா தா ரிஸ் ஸ்த தநி தநி தா ||

மெய் . க்குற்றம் | நீக் கி வி . ளங் . கி . ய | மே . க த்தை மே . . | வும் . . . . . நல் . . . லோர் ||

; ப பா தம மகா | பா , தா , பத ஸ் ஸ் | ஸ்ப பத ஸ்ரி க்ரி ஸ்ா | ஸ்த்ரி ஸ்நித தா நிப பத ||

எக் கு . . ற்ற . . | வா ளா எது பி ற | ப்பு . ஏ . தி . . யல் | வா . . க . . நின் . . ரோர் . ||

; பத ஸ்ரிக்ாம்க் ரிஸ் ஸ்ா | ஸ்தரிஸ்நித தா நிப மா | பாத ஸ்ாரி ஸ்நி தா நிதபா | பநிதபமகா பா த தரிஸ்ஸ் ||

அ . க்கு . . . . ற்றம் அப் | பி . . ற . . ப்பு . . அவ் | வி . யல் . வே . . நம் . . | மை . . யா . ட் கொள் . ளு . மே . ||

, பு — (காரேய் கருணை)



கலியாண அவசரம்!

விதூஷகன்

பார்க்கில் உட்கார்ந்து கொண்டு காற்று வாங்கிக்கொண்டிருந்தேன். இருட்டுகிற சமயம். நாழியாகிவிட்டதே என்று வீட்டுக்குப் புறப்பட ஆயத்தமானேன. அப்போதுதான் பார்க்கில் நுழைந்த பெரியவர் ஒருவர், நான் இருந்த பெஞ்சியை நோக்கி வந்து கொண்டிருந்தார். என் அருகில் வந்து அவர். வலது கையை விரித்து நெற்றிக்கு நேரே பிடித்துக்கொண்டு,"யார்ராது? நம்ப ராமுடுவாடா?" என்றார்; பெரியவருக்குச் சாளேசுரம் என்று தெரியவந்தது. நான் சுருக்கமாக, "இல்லை ஸார்!" என்று நெளிந்தேன்! பெரியவர் பளிச்சென்று, 'எக்ஸ்யூஸ்மீ! நான் ராமுடுவோ என்று நினைத்தேன்! நீங்கள்யார்?" என்றார்.

"நானா? மெலட்டூர் ராமச்சந்திரய்யர் பேரன். அதெல்லாம் உங்களுக்குச் சொன்னால் புரியாது என்று நினைக்கிறேன்! நான் ஸ்டேஷனில் டிக்கட் கலெக்டராக இருக்கிறேன்."

"பலே! பேஷாய்ப போச்சு! சம்பளம், அலவன்ஸ் எல்லாம் நூறு ரூபாய் வருமே!"

"ஊம்! ஏதோ வருகிறது! என்ன வந்துதான் என்ன? பட்டினத்தில் நூறு ரூபாய் எந்த மூலை?"

"வாஸ்தவமடா அப்பா? இந்தக் காலத்தில் பணத்துக்கு எங்கே மதிப்பு இருக்கிறது? என் கடைசிக்குட்டிக்கு இந்த வருஷம் கலியாணம் செய்தாகவேணும்! இரண்டாயிரம், மூவாயிரம் செலவு செய்யத் தயாராயிருக்கிறேன்! பணத்துக்கு எங்கே மதிப்பு இருக்கிறது! வரனே ஆதியிவிருந்து கிடைக்கமாட்டேனென்கிறது! நானும் தான் அலைகிறேன்! ஏண்டாப்பா! உன்னுடைய ஜாதகத்தைக் கொடேன்! சரியாக இருந்தால்......"

"அது சரி! ஆனால் எனக்கு...'

"என்ன ஆனால்? நீ சொல்லப் போவது எனக்குத் தெரியும்! ஜாதகம் உன் கையில் இல்லையாக்கும்! அவ்வளவுதானே! உன் தகப்பனார் விலாசம் கொடு! நானே எழுதி வரவழைத்துக் கொள்ளுகிறேன்!"

"அதெல்லாம் சரி! ஆனால் நான் சொல்ல வந்தது அது இல்லை......அதாவது......"

"ஹூம் பின்னே என்ன? இப்போதைக்கு கலியாணம் செய்து கொள்ளுவதாக உத்தேசம் இல்லையோ? எனக்குத்தான் தெரியுமே! இந்தக் காலத்துப் பிள்ளைகளே இப்படித்தான் ரொம்ப பிகுப்பண்ணிக் கொள்ளுகிறதுகள்!"

"நீங்கள் நினைத்தது சரி! எனக்குக் கலியாணம் செய்து கொள்ளுவதாக உத்தேசம் இல்லை; ஆனால், அதற்குக் காரணம்......"

"எனக்குத் தெரியம்! பட்டணத்தில் இந்த சம்பளத்தைக் கொண்டு குடித்தனம் வேறு செய்ய முடியுமா என்ற யோசனை!"

"ஐயோ! அது இல்லென்னு? அதற்கு வேறு காரணம்..."

"வேறு காரணமா? என்ன? உன் தகப்பனார் இப்போது வேண்டாம் என்று சொல்லுகிறார்போல இருக்கு! இவர்களுக்கு என்ன தெரிகிறது? காலா காலத்தில் பிள்ளைகளுக்குக்கலியாணம் செய்வதில் என்ன குடி முழுகிவிடப் போகிறது?"

"அது அவருக்குத் தெரிந்தது தான்! அதன்படியேதான் அவரும்..."

"ஓஹோ! அப்படிச்சொல்லு! பின்னே, யார் தடையாக இருக்கிறார்கள்? உன் தாயாரா? சரிதான்! சரிதான்! பிள்ளைக்கு நல்ல இடமாகக் கிடைக்க வேண்டுமே என்ற கவலையினால் அப்படிச் சொல்லுவாள். நான் போய் உன் தாயார் தகப்பனாரைப் பார்த்தால் சரியாகிவிடும்!"

"என் தாயார் ஏன் தடை செய்கிறாள்! இதென்ன இப்படிப் பேசிக்கொண்டே போகிறீர்கள்! என் தாயார் தடை செய்திருந்தால் எனக்கு..."

"அதுதானே கேட்டேன்! உங்கள் தாயார் ஏன் தடை செய்யப் போகிறாள். அவள் செய்திருந்தாலும் உனக்கு... உம்...உங்களுக்குத் தைரியம் இல்லையா என்ன? பெண்டு

இந்த இரு குழந்தைகளும் பிறவிச் செவிடர்கள். சிகாகோவில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒருவித ஒலிபெருக்கி படு செவிடுகளுக்கும் காது கேட்கும்படியாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதன் உதவியால் காது கேட்ட இந்த இரு குழந்தைகளும் எவ்வளவு ஆனந்தப்படுகின்றன பாருங்கள். இத்தகைய ஒரு ஒலிப்பெருக்கி நிலயம் சில கிறுஸ்தவப் பாதிரிமார்களின் உதவியால் அமைக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி வசதியை உலகத்தின் பல பாகங்களிலும் ஏற்படுத்த முயற்சி நடந்து வருகிறது.

கள் எதையோ சொல்லுவார்கள்! அதற்கெல்லாம் நாம் சமாதானமாகப் போய்விடவேண்டும் ஆகையினுல் உங்கள் கலியாணத்தைப்பற்றி யாதொரு விதமான ஆக்ஷேபணேயும் கிடையாது என்று ஆகிறது! அப்படியானுல் உங்கள் ஜாதகத்தை வரவழைத்து...........

"ஜாதகத்தை வரவழைத்து என்ன செய்கிறது? நான்தான் எனக்குக் கலியாணம்........."

வேண்டாம் என்ரு சொல்லுகிறீர்கள்! நீங்கள் பெண்ணே வந்து பாருங்கள் சொல்கிறேன். அப்புறம் 'சரி' என்று தலையை ஆட்டுவீர்கள்! ஏதோ அந்தஸ்துக்குக் குறைவில்லாமல் என்னுல் ஆனதைச் செய்கிறேன்! என்னமோ உங்களேப் பார்த்ததும் எனக்கு மாப்பிள்ளேயாக்கிக் கொள்ள வேண்டும் என்று தோன்றி விட்டது....ஹி....ஹி....நீங்கள் இது விஷயத்தில்.........

"கண்டிப்பாய்ச் சொல்லிவிடுகிறேன்! ஆனுல், நீங்கள் இடையே பேசக்கூடாது! நான் சொல்லுவதை முழுவதும் கேட்டுக்கொள்ள வேண்டும்!"

எனக்குத் தெரியாதா? யாருடைய சம்மதமாவது உங்களுக்கு வேண்டியிருக்கும்! அதற்கென்ன. நீங்கள் கேட்டால் வேண்டாம் என்ரு சொல்லப்போகிருர்கள்? யாரைக் கேட்கப்போகிறீர்கள்!"

"யாருடைய சம்மதம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒருவருடைய சம்மதம் மிக அவசியம்!"

'யார் அது? உங்கள் தகப்பனுரா?"

"அவருடைய சம்மதத்தை ஏற்கனவே ஒரு கலியாணத்திற்கு வாங்கியாயிற்று! இப்போது என் மனேவி ராஜத்தின் 'பர்மிஷன்' தான் வேண்டும் மறுபடியும் கலியாணம் செய்துகொள்ள!"

"அட பகவானே! உங்களுக்கு கலியாணம் ஆகிவிட்டதா? அதை அப்போதே சொல்லியிருக்கக்கூடாதோ! இவ்வளவு தூரம் பேசியிருக்கவேண்டாமே!"

"வாஸ்தவம்! நான் ஆரம்பத்திலிருந்து அதைச்சொல்ல வந்தபோதெல்லாம் இடைமறித்து என்னேப் பேச வொட்டாமற் செய்துவிட்டீர்களே! உமக்குக் கலியாண அவசரம்! நான் என்ன செய்வது?"

வலேயில் சிக்கிய மானேப் பறிகொடுத்த வேடனின் பரிதாப நிலேயை நினேவூட்டியது பெரியவரின் முகம்.

பாசம்

தில்லைவாசி

இரவு கடை கட்டுகிற நேரம். நடராஜ முதலியார் தன்னுடைய மளிகைக் கடையில் உட்கார்ந்திருந்தார். கடைப் பையன் ஒரு மூலையில் தூங்கி விழுந்துகொண்டிருந்தான். அந்த நேரத்தில் சாமான் வாங்குவதற்கு ஜனங்கள் யாரும் வரவில்லை. பையனோ கடையைக் கட்டுவதற்கு முதலாளியின் உத்தரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

அப்பொழுதுதான் ஒருவர் நடராஜ முதலியார் கடையை எப்படியோ விசாரித்துக்கொண்டு வந்து சேர்ந்தார். வந்தவர், 'இங்கு நடராஜ முதலியார் இருக்கிறாரா!' என்றுகேட்டார். முதலியாருக்கோ ஒரே ஆச்சரியமாயிருந்தது. அந்த ஆசாமியை அவர் அதற்குமுன் பார்த்திருந்ததில்லை. அவருக்குத் "தன்னைத்தேடிக்கொண்டு வரக் காரணம் என்னவாயிருக்கும்?" என்ற ஆவலும்கூட எழுந்தது. வந்தவரை உட்காரவைத்தார். கொட்டாவி விட்டுக்கொண்டிருந்த பையனை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, புதிய ஆசாமியிடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தார்.

"நீங்கள் யார்? எனக்குத் தெரியவில்லையே! என்ன காரணமாக வந்திருக்கிறீர்கள்?" என்று முதலியாரும் அவரைப்பார்த்துக் கேட்டார். அவர் எப்பொழுதும் கண்டிப்பான பேர்வழி. "வெட்டு ஒன்று, துண்டு இரண்டு" என்று சொல்லும்படி எல்லோருடனும் பழகும் சுபாவமுடையவர்.

"நான் சிங்கப்பூரிலிருந்துவிட்டு வருகிறவன்" என்று வந்தவர் சொன்னார். நடராஜ முதலியாருக்கு ஆவல் அதிகமாகிவிட்டது. "இன்னும் அவர் ஏதாவது சொல்லமாட்டாரா?" என்று கேட்க ஆசை உண்டாகியது.

எனக்கு இங்கிருந்து ஐந்து மைல் தூரத்திலுள்ள கிராமந்தான். நான் போனபிறகு இங்கே எவ்வளவோ வீட்டுக் காரியங்கள் சீர்குலைந்து போய்விட்டன என்று கேள்விப்பட்டேன்.

இந்தியாவுக்குக் கிளம்பினமுதல் கப்பலிலேயே வந்துவிட்டேன். உங்கள் பையன் கண்ணப்பனை நான் அங்கே அடிக்கடி சந்திப்பதுண்டு. வரும்போதுகூட அவரைப் பார்த்துப் பேசிவிட்டு வந்தேன். அவர் சொல்லித்தான் உங்களைப் பற்றித் தெரிந்துகொண்டேன் என்று அந்த சிங்கப்பூர் ஆசாமி பேசிக்கொண்டே போனார். "கண்ணப்பன்" என்றதுமே முதலியார் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

"அவன் விலாசம் உங்களுக்குத் தெரியுமா?" என்று முதலியார் மிகவும் பரபரப்புடன் கேட்டார். அந்தப் புதிய ஆசாமியும் விலாசத்தை எழுதிக்கொடுத்து, கொஞ்ச நாழிகை பேசியிருந்துவிட்டுப் போனார். முதலியாரும் கடையைக் கட்டிவிட்டு, பணப்பையை எடுத்துக்கொண்டு வீட்டை நோக்கி விரைந்து சென்றார்.

கண்ணப்பனைப்பற்றிய சந்தோஷ சமாச்சாரத்தை வீட்டு ஜனங்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று ஒரே ஆவலாயிருந்ததனால் கொஞ்ச தொலைவிலிருந்த வீடும், காத தூரத்தில் இருப்பது போல் அவருக்குத் தோன்றியது. அவ்வளவு பரபரப்பு அவருக்கு.

எத்தனையோ வருஷங்களுக்குப் பிறகு அன்றுதானே கண்ணப்பனைப்பற்றிக் கேள்விப்பட்டார். அவனைப்பற்றிக் கேள்விப்பட்டதே, அவனை நேரில் பார்த்தது போல் முதலியாருக்கும் அத்தனை திருப்தி உண்டாகியது. "கண்ணப்பனும் இன்னும் உயிருடன் இருக்கிறான்' என்று வாய் அடிக்கடி முணுமுணுத்துக்கொண்டது. மனதிலோ அவனைப்பற்றி ஆயிரம் எண்ணங்கள் தோன்றி மறைந்தன.

* * * * *

நடராஜ முதலியாருக்கு கண்ணப்பன் என்றால் உயிர். தனக்கு ஆண் குழந்தையில்லாத குறையை அவன் பூர்த்திசெய்துவிடுவான் என்பது அவரது நம்பிக்கை. கண்ணப்பன் அவருடைய தங்கை மகன் இருந்தாலும் முதலியார் வேற்றுமை பாராட்டவில்லை. அவனைச் சின்னஞ்சிறு குழந்தையிலிருந்தே பிரியமாய் வளர்த்து வந்திருந்தார்.

பையனோ பிறந்து இரண்டு மூன்று வருஷத்திற்குள்ளாகவே தன் பெற்றோர்களை விழுங்கிவிட்டான். முதலில் தாய், அதன் பிறகு தகப்பனாராக அவர்களும் திரும்பி வராத ஊருக்குப் பிரயாணம் போய்விட்டார்கள்.

பையனும் அநாதையானான். தாய் தந்தையில்லையே என்ற குறையால் முதலியாருக்கு அந்தப் பையனிடமிருந்த அன்பும் ஆசையும் இன்னும் பன்மடங்கு பெருகியது. அவனுக்கு எவ்விதக் குறைவுமில்லாமலேயே வளர்த்து வந்தார். தன்னுடைய அந்தஸ்திற்கு எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சீரும் சிறப்புமாக அவனை வளர்த்தார்.

கண்ணப்பனும் வளர்ந்து பள்ளிக்கூடம் போனான். பள்ளிப் படிப்பு முடிந்ததும். முதலியார் அவனைக் காலேஜில் கொண்டு போய் சேர்த்தார். சொந்த ஊரிலேயே இத்தனை நாட்களாக இருந்து படித்துக்கொண்டிருந்த பையன், இப்பொழுது மேல்படிப்

பிற்காக வெளியூருக்குப் போக வேண்டித்தானிருந்தது. முதலியாருக்கு அவனைப் பிரிந்திருப்பதில் கஷ்டமாகவிருந்தது எப்படியோ பல்லைக் கடித்துக்கொண்டு அந்த நாட்களைக் கழிப்பார்.

“எப்பொழுது சனி, ஞாயிறு வரும். அவனும் விடுமுறை நாட்களில் வீட்டுக்குத் திரும்பி வருவான்” என்று ஏங்கிக் கிடப்பார். அவன் திரும்பிவருகிற சமயம் பார்த்து, அவனுக்கு எதெதில் பிரியம் அதிகமோ, அதெல்லாம் வீட்டில் தயாராகச் சமையல் செய்து வைத்திருப்பார்கள். அவனும் வருவான். விடுமுறை நாட்களில் வீட்டில் தங்கியிருப்பான். வீடும் கலகலப்பாக இருக்கும். மீண்டும் காலேஜுக்குப் போவான். ‘இரை தேடுவதற்கு வெளியில் பறந்து போவதும், கூண்டுக்குத் திரும்பி வருவதுமாக இருக்கும் பறவை ”போல் அவனும் போவதும் வருவதுமாக இருப்பான். அவன் ஒருவனாலேயே முதலியார் வீடும் “நிறைந்து” போயிருந்தது என்றுகூடச் சொல்லலாம்.

கண்ணப்பனுடைய படிப்பும் முடிந்தது. அவனும் ஒரு “பீ.ஏ” பட்டதாரியானான்.

முதலியாருக்கு ஆண் குழந்தைகளே இல்லாவிட்டாலும், பெண்களுக்குக் குறைவில்லை. பத்து வயதிலிருந்து, நாலுவயது வரைக்கும் அவருக்கு நான்கு பெண்கள் வீடு நிறைய இருந்தார்கள். இன்னும் நாலைந்து வருஷங்கள் சென்றால், தன்னுடைய முதல் பெண்ணையே அவனுக்குக் கொடுத்து, அவனை வீட்டோடேயே இருத்திக் கொள்ளவேண்டுமென்ற நினைப்பு அவருக்கு.

யாரும் நன்றாகப் படித்து அறிவாளியாக வேண்டுமென்று முதலியார் நினைப்பவர். உத்தியோகம் பெறவேண்டும் என்கிற கொள்கைக்காகப் படிப்பதில் கொஞ்சங்கூட நம்பிக்கையில்லாதவர். அத்தகைய நினைப்புடையவர், கண்ணப்பன் படிப்பு முடிந்ததும், அவனை வியாபாரத் துறையில் ஈடுபடுத்தவேண்டுமென்று எண்ணியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

கண்ணப்பனோ சர்க்கார் உத்தியோகம் பண்ணவேண்டுமென்று எண்ணினான். ஒரு மாஜிஸ்டிரேட்டாகவோ, தாசில்தாராகவோ உத்தியோகம் பண்ணவேண்டுமென்று இத்தனை நாளாக கனவு கண்டு வந்திருக்கிறான். அந்த ஒரு லட்சியத்தையே மனதிலிருத்தி, கவனமாகப் படித்துப் பட்டம் பெற்று வந்திருக்கிறான்.

கண்ணப்பனுக்கு வீட்டிலோ கடையிலோ முடங்கிக் கிடந்து, காரியம் பார்க்கக் கொஞ்சங்கூட ஆசை எழவில்லை. சுதந்திரமாக வியாபாரத் துறையில் இறங்குவதற்கு அவன் மனம் உடன்படவில்லை. யந்திரம்போல் ஆபீஸில் உழைத்து, உத்தியோகம் பார்க்கத்தான் ஆசைப்பட்டான்.

இது விஷயமாகக் கண்ணப்பனுக்கும், முதலியாருக்கும் நீண்ட விவாதம்கூட நடக்கும். முதலியாரும் அவனுக்கு எத்தனையோ விதங்களில் நயமாகவும், கண்டித்தும் புத்தி சொல்லியிருந்தார். முதலியார் கோபக்காரர் என்பதை அவனும் அறிந்திருந்தான். அவர் கோபமாகப் பேசும்போது அவரிஷ்டத்திற்குச் சம்மதம் கொடுத்துவிட்டதாகக் காண்பித்துக்கொள்ளுவான்.

முதலியார் மட்டும் இஷ்டப்பட்டிருந்தால், அவன் படிப்புக்குத் தக்கபடி ஒரு நல்ல உத்தியோகம் வாங்கிக் கொடுத்திருக்க முடியும். அவனும் ஒரு பெரிய உத்தியோகஸ்தனாக முன்னுக்கு வந்திருப்பான். முதலியாருக்கு அத்தகைய அந்தஸ்தும் மதிப்பும் ஊரிலிருந்தது. அவரும் பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களிடம் நண்பராகவும், தம்பி, அண்ணன் முறையாகவும், மிகவும் அன்னியோன்னியமாகப் பழகியிருந்தார்.

கடைக்குப் போவதும், வீட்டுக்கு வருவதுமாகவிருந்த கண்ணப்பனுக்கு தான் ஒரு உத்தியோகம் பார்க்க வேண்டுமென்று எண்ணியிருந்த லட்சியம்சிதைந்ததும், கல்யாணம் பண்ணிக் கொண்டுவிட வேண்டுமென்று ஆசை ஏற்பட்டதில் வியப்பில்லை.

தன்னுடைய பெண் இருக்கும் போது, முதலியார் வேறு பெண்ணா தேடுவார்? அவருடைய மகளோ சின்னஞ் சிறு பெண். இன்னும் மூன்று நான்கு வருஷங்கள் போனால் பருவ மங்கையாகி விடுவாள். அதுவரைக்கும் கண்ணப்பன் காத்திருக்கட்டுமே என்றுதான் எண்ணினார்.

கண்ணப்பனைப் பார்த்து “வீட்டிலேயே பெண்ணை வைத்துக்கொண்டு எவனாவது வெளியில் பெண் தேடப் போவானா? பார்க்கிறவர்கள் சிரிக்க மாட்டார்களா? உனக்காகவே பிறந்து வளர்ந்து கொண்டிருக்கும் சகுந்தலாதான் உனக்கு மனைவியாகப் போகிறாள். கொஞ்ச நாளைக்கு அவசரப் படாதே” என்று முதலியாரும் அடிக்கடி சொல்லுவார். அவர் கோபக்காரராகக் காணப்பட்டாலும், இளகிய மனசுடையவர். அன்பு நிறைந்த இருதயமுடையவர்தான்.

கண்ணப்பனும் “சரி, உங்களிஷ்டம்” என்று சொல்வதுபோல் தலையை ஆட்டிவிட்டு, அவருடைய வார்த்தைக்கு எவ்விதமான மறுப்போ, எதிர் பேச்சோ சொல்லாமல் சும்மாயிருந்து விடுவான். கடையிலோ, வீட்டிலோ காரியத்தை வெகு அக்கறையுடன் பார்த்துக்கொள்வதுபோல் இருந்து வந்தான்.

* * * * *

முதலியார் வியாபார விஷயமாக வெளியூர் போயிருந்தார். அவர் எப்பொழுதும் வெளியில் சென்றால், ஒரு வாரத்திற்குக் குறைந்து வீட்டிற்குத் திரும்ப மாட்டார். அப்பொழுதெல்லாம் கடைப் பொறுப்பைக் கண்ணப்பனிடமே விட்டுப் போவார். கடைச் சாவி முதல் இரும்புப் பெட்டி சாவி வரையில் அவனிடமே கொடுத்துச் செல்வார். அவனை எந்தக் காரியத்திலும் அவர் நம்புகிறவர்.

வெளியில் சென்றிருந்த முதலியார், திரும்பி வருவதற்கு இன்னும் இரண்டு நாட்கள்தானிருந்தன. அதற்குள் கண்ணப்பன் அவசரப்பட்டு விட்டான். அவன் மனக்குரங்கு அவனை ஆட்டி வைத்து விட்டது.

கடையிலிருந்து வந்த கண்ணப்பன் அன்றிரவு சாப்பிட்டான்; கடைச் சாவியை சுவரில் இருந்த ஆணியில் மாட்டினான். பிறகு எங்கேயோ வெளியே போனான். கடையிலிருந்து வந்ததும், இராச் சாப்பாட்டிற்குப் பிறகு கொஞ்

சம் வெளியில் சென்றுவிட்டு வருவது அவன் வழக்கம்.

முதலியார் மனைவி லக்ஷ்மியம்மாள் கதவைத்திறந்து வைத்துக்கொண்டு, அவனுக்காகக் காத்திருந்தாள். கெடிகாரம் மட்டும் தவருமல் கணக்குப்படி மணி அடித்துக்கொண்டேயிருந்தது. வெளியில் போனவனே வருவதாய்த் தெரியவில்லை.

அவனுடைய வருகைக்காகக் காத்திருந்து, காத்திருந்து அவளுக்குக் கண்கூடப் பூத்துப் போய்விட்டது. முதலியாரை விட இரட்டிப்பு பிரியம் அவன்மேல் அவளும் வைத்திருந்தாள். அலுப்புத் தட்டிப்போய், அவளும் கவலையோடு கதவைச் சாத்திவிட்டுப் போய் படுத்துக்கொண்டாள். பொழுது விடிந்தாகிலும் அவன் வருவான் என்ற நம்பிக்கை அவளுக்கு.

பொழுது விடிந்து கடைக்குப் போகும் நேரங்கூட வந்தது.

அவன் வரவேயில்லை, கடை திறப்பதற்கோ வேறு யாருமில்லை, மத்தியானம் வருவான் என்று எதிர்பார்த்தாள். அவன் வரவேயில்லை. அன்று கடை திறக்காமலே கிடந்தது.

முதலியாரும் வந்துவிட்டார். அந்த இரண்டு நாட்களுக்குப் பிறகுகூட அவன் வரவேயில்லை. அவன் வரவிற்காகக் காத்திருந்ததுதான் மிச்சமாயிற்று.

கடைக்குப் போன முதலியாருக்கு விஷயம் விளங்கி விட்டது. இரும்புப் பெட்டியில் ரொக்கமாக ஐந்நூறு ரூபாய் குறைந்திருந்தது. கண்ணப்பன் தான் ரூபாயைக் கபளீகரம் பண்ணிவிட்டு எங்கேயோ மறைந்துவிட்டான் என்பதை அறிந்துகொள்ள அவருக்கு அதிக நாழிகையாகவில்லை.

"அட பாவி மகனே! மோசம் செய்துவிட்டாயே" என்று அவர் வாய் தானுகவே முணு முணுத்துக்கொண்டது. அவருக்கு அவனிடமிருந்த அன்பு கரைந்துவிட்டது. மறைந்துபோன அவனைப் பற்றி நினைக்க நினைக்க அவர் மனம் கல்லகிவிடும். ஒவ்வொரு சமயம் இதை ஆரம்பிக்கும். அப்பொழுது அவன் வருகைக்காகக் காத்திருந்து ஏங்குவார்.

"போனல் அவனேடதானே போவான்" என்று நினைப்பார் ஒரு சமயம். "எங்காவது கெட்டலைந்துவிட்டு தன்னுலேயே வந்துவிடுவான்" என்று ஒவ்வொரு சமயம் எண்ணுவார். "அவன் கொடுத்துவைத்தது அவ்வளவுதான்" என்று அவனை மறக்க முயன்ருர். அவனை மறப்பதற்கு அவரால் முடியவேயில்லை. பாவம்! அவ்வளவு தூரம் அவன்மேல் உயிராயிருந்தார். அவனும் ஒரு நொடியில் அவர் மனதை ஒடித்துப் போட்டுவிட்டு ஓடிப்போய் விட்டானே! அவன் எங்கே அறியப்போகிருன் அவர் கவலையை?

வீட்டில் அவனைப்பற்றிப்பேச்சு வரும்பொழுதெல்லாம் முதலியார் கோபப்பட்டுத்தான் பேசுவார். அவர் உள்ளமோ அவன் திரும்பி வரமாட்டானு என்று விநாடிக்கு விநாடி ஏங்கிற்று.

கால சக்கரம்தான் எவ்வளவு வேகமாகச்சுழன்றது! நாட்கள் மாதங்களாகி வருஷங்களாக ஓடிக்கொண்டிருந்தன. அவன் வீட்டை விட்டுப்போய் பனிரண்டு வருஷங்கள்கூட ஆகியிருந்தன.

இந்தக் காலத்தில் முதலியாரும் அவனைப்பற்றி பலவிதமாகக் கேள்விப்பட்டார். சென்னையில் பார்த்ததாகவும், கொழும்புத் துறைமுகத்தில் பார்த்ததாகவும், சிங்கப்பூரில் பார்த்ததாகவும், இன்னும் வேறு எங்கெங்கேயோ அவனைப் பார்த்ததாகவும் பலர் அவரிடம் வந்து சொல்லி விட்டுப் போவார்கள். அப்பொழுதெல்லாம் அவருடைய ஆவல்தான் அதிகரிக்கும். வளர்த்த பாசம் அவரை விடவில்லை. அவன் எத்தனையோ மைல்களுக்கப்பால் இருந்தாலும், பாசம் அவரை அவனுடன் பிணைத்துக்கொண்டிருந்தது.

இந்தப் பனிரண்டு வருஷ காலத்தில் அவர் வீட்டில்தான் எத்தனை எத்தனை மாறுதல்கள்!

வீட்டு] நிர்வாகத்தை எடுத்து நடத்திவந்த, முதலியாருடைய



தாயாரும் இறந்து போனாள். அவருடைய முதல் மூன்று பெண்களுக்கும் கல்யாணமாகி விட்டது. இரண்டு பேரப் பிள்ளைகளையும், பேத்திகளையும் வேறு அடைந்திருந்தார். வியாபாரத்திலும் முன்னேற்றம் உண்டாகியிருந்தது. அவருக்குத் தள்ளாமையும் ஏற்பட்டிருந்தது.



பெரிய கடையை இனி வைத்து நிர்வகிக்க முடியாது என்றும் அவருக்குப் பட்டுவிட்டது. பரம்பரையாக இருந்து வருகிற வியாபாரத்தை விட்டுவிடுவதற்கு மனமில்லாமல் சிறிய அளவில் ஒரு மளிகைக் கடையை வைத்து, ஒரு பையனையும்கூட ஒத்தாசைக்கு அமர்த்திக்கொண்டிருந்தார்.

அவருடைய மனைவி லட்சுமியம்மாளுக்கு, இத்தனை வருஷங்களாகக் கண்ணப்பனைப்பற்றி ஜோஸ்யம் கேட்பதுதான் வேலை. குறிசொல்லும் குறத்தியிலிருந்து நாடி ஜோஸ்யர் வரைக்கும் கேட்டு வருவாள். ஒவ்வொருவரும், சொல்லி வைத்தாற்போல், கண்ணப்பன் கூடிய சீக்கிரம் திரும்பி வருவான் என்று சொல்லி, அவளிடம் காசு பெற்றுப்போவார்கள். அந்தக் "கூடிய சீக்கிரம்" என்பது பனிரண்டு வருஷங்களுக்குப் பிறகுதான் வந்தது!

முதலியாருக்கு. ஜோஸ்யத்தில் அவ்வளவு நம்பிக்கையில்லை என்றாலும், அப்படியானாலும் அவர்கள் வாக்குப் பலித்து, கண்ணப்பன் என்றேனும் ஒரு நாளைக்குத் திடீரென்று திரும்பி வரக்கூடாதா என்றுதான் நினைப்பார்.



வெளிக்கு மட்டும் கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல் பேசுவார். "அவன் வந்தால் யார் வீட்டில் சேர்க்கப் போகிறார்கள்?" என்று குறி கேட்டு நல்ல சேதி சொல்லும் மனைவியிடம் கோபமாகப் பேசுவார்.

சுருங்கச் சொல்லப்போனால், நடராஜ முதலியாரோ, லட்சுமியம்மாளோ கண்ணப்பனைப்பற்றி ஒரு நிமிஷங்கூட நினைக்காமலிருந்ததில்லை.

மாமனைப்பற்றி எண்ணி எண்ணி அவருடைய பெண்களும் ஒருவர்பின் ஒருவராகக் காத்துக் கிடந்தார்கள். அவனும் திரும்பி வந்து தங்களில் யாரையாவது ஒருத்தியைக் கட்டிக்கொள்ளமாட்டானா என்று ஏங்கினார்கள். முறைக்காரனும் வரவில்லை. அவர்களுக்கும் வேறு எங்கெங்கேயோ கல்யாணங்கள் ஆகியிருந்தன. கடைசிப் பெண்தான் வீட்டில் அடைந்து கிடந்தாள்.

கண்ணப்பன் ஊரைவிட்டு மறைந்து ஐந்து வருஷங்களுக்குப் பிறகு யுத்தமும் வந்தது. சிங்கப்பூரில் குண்டுமாரி பொழிந்தது.

சிங்கப்பூரின் வீழ்ச்சியைப் பற்றிப் பத்திரிகையில் படிக்கும் முதலியார், கண்ணப்பனும் குண்டுக்கு இரையாகி இறந்து போயிருப்பானோ என்று கலங்குவார். அப்போதெல்லாம் அவர் மனம் பதைபதைக்கும். அவனை அரும்பாடுபட்டு வளர்த்தது அவருக்கல்லவா தெரியும்!

யுத்த நிலையிலும் மாறுதல் ஏற்பட்டது. ஜெர்மனியும், ஜப்பானும் சரணாகதியடைந்தன. நேச தேசத்திற்கு வெற்றி கிடைத்தது.

மீண்டும் இந்தியாவுக்கும் சிங்கப்பூருக்கும் கடிதப் போக்குவரத்து ஆரம்பமாயிற்று.

சிங்கப்பூரிலிருந்து எத்தனையோ பேர்கள் தங்கள் உறவினருக்குக்

கடிதம் எழுதிக்கொண்டிருந்தார்கள். முதலியார் இருந்த ஊருக்கு சுற்றுவட்ட கிராமங்களுக்கும் பல கடிதங்கள் வந்தன.

சண்டையினால், இத்தனை கஷ்டப்பட்ட கண்ணப்பனும் கடிதம் போடுவான். அவன் மனமும் திருந்திப்போயிருக்கும் என்று நடராஜ முதலியார் அவனைப் பற்றிக் கனவிலும் நினைத்துக் கொண்டிருப்பார்.

சிங்கப்பூரிலிருந்து எத்தனையோ பேர்கள், சண்டை முடிந்து கிளம்பின முதல் கப்பலிலேயே சொந்த நாட்டிற்குத் திரும்பியிருந்தார்கள்.

ஒவ்வொரு நாளும் கண்ணப்பனைப்பற்றியும், அவன் ஊருக்குத் திரும்பி வருகிற சமாச்சாரத்தைப் பற்றியும், அவனிடமிருந்து ஏதாவது கடிதம் வராதா என்று ஆவலோடும், கவலையோடும் முதலியார் எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்.

அவனிடமிருந்து ஒரு கடிதம் கூட வரவில்லைதான்.

இன்றோ அவனைப்பற்றி அங்கிருந்து வந்த ஆசாமி சொல்லி விட்டுப் போயிருக்கிறார். அதுவே அவனிடமிருந்து வரும் ஆயிரம் கடிதங்களுக்குச் சமமாகிவிட்டது. அவனுடைய விலாசமும் அவருக்குத் தெரிந்துவிட்டது.

அத்தனை குண்டுமாரியிலும் இன்னும் அவன் உயிருடனிருக்கிறான் என்று கேள்விப்பட்டதே அவருக்கு எல்லையற்ற மகிழ்ச்சியை அளித்துவிட்டது. அவனை மீண்டும் குழந்தையாகப் பெற்றுவிட்டதுபோல் அத்தனை ஆனந்தம்.

லட்சுமியம்மாளும் கண்ணப்பனைப்பற்றிக் கேள்விப்பட்டதும், அதிக சந்தோஷமடைந்தாள். "நல்லபடியாக அவன் திரும்பி வர வேண்டும். வந்தவுடன் அவனுக்குக் கல்யாணம் செய்விக்க வேண்டும். நம் கடைசிப் பெண்ணையே அவனுக்குக் கொடுத்து வைத்துக்

தொழிலும் தோற்றமும்

"உயரமாவது எப்படி?" என்ற பிரபல நூலை எழுதியவர்!

கொள்ளலாம். அந்த பெண்களில் தான் யாரையும் மணந்துகொள்ள முடியாது போய்விட்டான். இவளையாவது கொடுத்துத் திருப்தி படுவோமே" என்று அவர்கள் முடிவு கட்டி வைத்திருந்தார்கள்.

முதலியாரும் கண்ணப்பனுக்கு தன் ஆசையை யெல்லாம் கொட்டிக் கடிதம் எழுதினார். அவனும் மனமுருகி கடிதம் எழுதினான். கண்ணப்பனும் சரி, முதலியாரும் சரி, ஒருவர் கடிதத்தை ஒருவர் படிக்கும்போது அழுதே விட்டார்கள்.

எத்தனையோ கடிதங்கள் இரண்டு பேருக்குமிடையில் ஆகாசத்தபால் மூலம் பறந்தன.

கண்ணப்பனும் இந்தியாவுக்குத் திரும்பி வருவதாக எழுதியிருந்தான். "நான் சம்பாதித்தது பலவிதத்திலும் செலவழிந்துவிட்டது. எனக்கு இங்கு அதிக கடன் ஏற்பட்டிருக்கிறது. உடனே ஊருக்கு வருவதாயிருந்தால், கடனை முதலில் அடைத்தாக வேண்டும். இரண்டாயிரம் ரூபாய் அனுப்பினால், எல்லாவற்றையும் ஒழுங்கு பண்ணிவிட்டுத் திரும்பி விடுகிறேன்" என்று அவனும் எழுதியிருந்தான்.

அவன் திரும்பிவந்தால்போதும் என்று எண்ணிய முதலியாரும் பணம் அனுப்பி வைத்தார்.

அவனும் கடைசியாகத் தான் வருகிற கப்பலைத் தெரிவித்து தந்தியடித்துவிட்டான்.

முதலியாரும், லக்ஷ்மியம்மாளும் அவன் திரும்பி வந்ததும் செய்ய வேண்டிய காரியங்களுக்கு இப்பொழுதிருந்தே ஒவ்வொன்றையும் சேகரம் செய்யத் தொடங்கினார்கள். கல்யாணத்தை முடித்து வைக்க நாள்கூடப் பார்த்து வைத்திருந்தார்கள்.

முதலியாருக்கு இருந்த பரபரப்பில், தானே சென்னைத்துறைமுகத்திற்குப் போய் நேரில் அழைத்து வந்து விடலாமா என்றுகூடப் பார்த்தார். லட்சுமியம்மாளால் அவனை வரவேற்பதற்குச் சரியானபடி செய்ய முடியுமோ, முடியாதோ என்ற பயத்தினால் அந்த யோசனையைக் கைவிட்டு, வீட்டில் ஆகவேண்டிய காரியத்தைப் பார்த்து வந்தார்.

அன்றுதான் கண்ணப்பன் குறிப்பிட்டிருந்தபடி வரவேண்டிய நாள்.

ரயிலடியிலிருந்து வண்டி வந்து வீட்டின் முன் நின்றது. அவன் முதலில் இறங்கினான். அவனைத் தொடர்ந்து ஒரு பெண்மணி இறங்கினாள். கூட ஒரு சிறு பையனும், சிறுமியும் இறங்கினார்கள். தனியாக ஓடிய கண்ணப்பன், குடும்பஸ்தனாக வந்து சேர்ந்தான்.

முதலியார் முகத்திலும், லட்சுமியம்மாள் முகத்திலும் ஈயாடவில்லை. ஜன்னல் வழியாக மாமன் வரவைப் பார்த்துக்கொண்டிருந்த அவர்களுடைய கடைசிப் பெண் கண்ணும் கண்ணீரால் நிரம்பிவிட்டது.

பிரம்மசாரி கண்ணப்பன் ஓடுவதற்கு ஐந்நூறு ரூபாய் செலவு. குடும்பஸ்தர் கண்ணப்ப முதலியார் திரும்பி வருவதற்கு இரண்டாயிரம் ரூபாய் செலவு! நடராஜ முதலியார் இரும்புப் பெட்டிக்கு இதைத் தாங்கிக்கொள்ள சக்தியிருந்தது. அவருக்கோ, அவர் மனைவிக்கோ, அவர் கடைசிப் பெண்ணுக்கோ அந்த சக்தியிருக்குமா?

பெண்மை, அழகு, நாகரிகம்

ஸ்ரீமதி லட்சுமி அம்மாள்

சென்ற மாதம், சென்னை ஓர் அபூர்வமான காட்சி கண்டது. அது என்ன அப்படி ஓர் அதிசயம்? சென்னையென்றால் காட்சிகளுக்குப் பஞ்சமா? ஒவ்வொரு நாளும் உலகப் பிரசித்தி பெற்ற சென்னைக் கடற்கரையிலேயே புதுமை புதுமைகளான காட்சிகளைக் காணலாமே! கடற்கரைப் பக்கம் போகாமலே சுற்றிக்கொண்டிருந்தாலும் காட்சி மேல் காட்சிகள். நகரத்திலே நரகக் காட்சிகள் எத்தனையோ! இடையிடையே சொர்க்க போகங்கள் சென்னை புரி வாழும் டம்பர்களினிடையே! கள்ளுக்கடைகள் இல்லைதான்! குட்டிக்கள்ளாகிய காப்பி கடைகளிலும் பெட்டிக்கள்ளாகிய ஸிகரெட் கடைகளிலும்கூட சிற்சில காட்சிகள் காணலாம்...... இப்படியெல்லாம் சுற்றியடிப்பானேன்?—கோப்பைக் காப்பி ஒரு கையிலும், 'தினத்தாள்' ஒரு கையிலுமாகக் காலையெழுந்ததுமே காணாத காட்சிகளெல்லாம் கண்டுவிடலாமே! அரசியல் வாதிகளின் போட்டிகள் பேட்டிகள, பூசல்கள், சூழ்ச்சிகள், பொருமைகள், பரஸ்பர முகஸ்துதிகள், தேர்தல் விநோதங்கள், பாக்கிஸ்தான்-விபரீதங்கள் ஒரு காட்சியை நோக்குவோம். தேசியமயமாய் நடக்கும் விருந்திலே மேனாட்டு முறையில் சொக்காயும் கழுத்துச் சுருக்குமாய்—வெள்ளையரல்ல, நம்மவர் தான்—'மேனாட்டு முறையே மேலான முறை' என்று நிலைநாட்டுவது போல் ஒருவர் வீற்றிருக்கும் காட்சி!—'சுதந்திரம் அடைந்த

5

கம்பரைக் கண்டேன்!

★

பிறகும் கூட......எல்லாம் அடிமைத்தனத்தின் சின்னங்கள்' என்று புதிய ராஷ்டிரபதி கூறியும் கூட. இத்தகைய காட்சி—விநோதங்களையெல்லாம் போங்கள்—என்றால் வருணிக்க முடியாது. கம்பர்தான் வந்து வருணித்துப் பார்க்கவேண்டும்.

ஆம், கம்பர் வந்தார், கம்பரே வந்துவிட்டார்; சென்னைக்கே வந்தார்; சென்ற மாத முற்பகுதியில் வந்தார். ஆனால், சென்னைக் காட்சிகளை அவர் வருணிக்கவில்லை. ஏன், அவர் அந்தக் காட்சிகளைப் பார்க்கவும் இல்லை, வழக்கம்போல், ராமராஜ்யக் காட்சிகளையே கண்டுகொண்டிருந்தார். ராவண ராஜ்யக் காட்சிகளையும் பார்த்தார், வருணித்தார். அந்தக் காட்சிகளிலேயே அங்குமிங்கும் நம் சென்னை மாநகரையும் காட்டிவிட்டார். ஏன் அந்தக் கோபமோ அவருக்கு?—பெரும்பாலும் ராவண ராஜ்யக் காட்சிகளில் நம் சென்னையை மட்டுமல்ல, தற்கால உலகத்தையே காட்டுவதுபோலத் தோன்றியது. நிதானமாய்க் கவனித்த பின்புதான் அவருக்குக் கோபமில்லை, அது அவர் குணம் தான் என்று தெரிந்தது. கடைசியாக எதிர்கால சுதந்திர இந்தியாவின் சுந்தரமான சித்திரத்தையும் தமது ராமராஜ்யத்திலேயே இங்கும் அங்குமாய் எப்படியோ காட்டிவிட்டார். சமீப எதிர்காலத்தைக் கூட ஒருவாறு காட்டினார்.

மௌன்ட்ரோட்—ராஜாஜி மண்டபத்திலே நாலாவது கம்பர் மகாநாட்டையொட்டி ஏற்பாடு செய்திருந்த கண்காட்சியை-கண் கொள்ளாக் காட்சியல்ல, கண் கொண்ட காட்சிதான்—கண்டதுமே நானும் என்னைப்போன்ற தமிழ்ப்பைத்தியங்களும்கம்பரைச் சென்னையில் கண்டுகொண்டோம். எங்களைக் 'கீழ்ப்பாக்கத்தில் கண்டு கொள்ளாமலே தான்.'

தமிழ்த்தாத்தாவின் சீடர் சொன்னார், சுமார் நானூறு கம்பராமாயணச் சுவடிகள் கண்காட்சியில் இருந்ததாக. ஆனால், எனக்குச் சுவடிகள் தெரியவில்லை, கம்பரே தோன்றிவிட்டார்! பேரறிஞர் வ. வே. சு. ஐயரின் சில ஆங்கில மொழிபெயர்ப்புக்களும் அக்காட்சியில் காணப்பட்டன. தேரழுந்தூர் என்ற திருவழுந்தூர் கம்பர் மேட்டிலிருந்தும் சில நினைவுக்குறிகள் வைக்கப்பட்டிருந்தன. இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு, சங்கீதக் கச்சேரிகளையும் கேட்டேன். சில 'சொற்பொழிவு'களையும் கேட்டேன். வெறும் சொற்பொழிவுகளாக மட்டும் இல்லை அவை: பொருட்பொழிவுகளாகவும் இருந்தன. சென்னைப் பிரதமரின் சொற்பொழிவை வேறொருவர் வாசித்த போதிலும், பிரதமருடைய துவேஷமற்ற சமரச மனப்பான்

மையையும் கலைச் சுவையையும் அவரே வெளியிடுவதுபோலத் தோன்றியது.

‘கம்பர் வந்துவிட்டார். சென்னையில் மூன்று நாள் தங்கிப் போனார்! என்ற உணர்ச்சி இன்னும் என்னை விட்டு நீங்கியபாடில்லை.

ஒரே ஒரு வருத்தம். பெண்கள் பெருங்கூட்டமாக வந்து கவிச் சக்கரவர்த்தியைத் தரிசிக்கவில்லையே என்பதுதான். ‘குகப்ரியை’ ஸ்ரீமதி நீலாவதி ராமசுப்பிரமணியம், ஸ்ரீமதி ஆர். வி. சாஸ்திரி முதலானவர்களின் பிரசங்கங்கள் நல்ல முறையில்-வாக்கு வன்மையிலும் ‘ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானம்’ என்ற ரீதியில்—அமைந்திருந்தன. இப்படி எழுதிவிட்டு, ‘ஆனால்’ என்று சொல்லிக்கொண்டே எழுதப் போனேன். உடனே கமலா ‘எனக்குத் தெரியுமே நீ என்ன எழுதப் போகிறாய் என்பது’ என்றாள். அதற்கு நான், ‘நீயே சொல்லிவிடு, அப்படியே நான் எழுதிவிடுகிறேன்’ என்று பதில் சொன்னேன். அவளும் என்னுடன் வந்து கம்பரைக் கண்டவள்தான்! ஆனால், அங்கே என் பக்கத்தில் இருக்கவில்லை.

அவள் சொன்னாள்: ‘வாக்கு வன்மையில் சரிநிகர் சமானம்தான் ஆண்களோடு பெண்களும்: மிஞ்சியும் பேசிவிடலாம். ஆனால், வாக்குத் தவத்தில் பெண்கள் என்ன செய்யமுடியும்? அதாவது, பேசும் கலைபோல் பேசாமல் கேட்டுக்கொண்டிருக்கும் கலை அவ்வளவாகப் பெண்களுக்கு வராது-என்றுதான் எழுதப் போனாய்.’

‘அப்படி ஒன்றும் இல்லையடியம்மா! பெண்கள் அதிகமாய் மகாநாட்டுக்கு வராததால் நான் அப்படி எழுதக்கூடுமென்று நீ நினைக்கிறாய். பெண்கள் கூட்டமாய் வந்திராததற்கு அதுதான் காரணமென்று நான் நினைக்கவில்லை. பேசும் கலையைக் காட்டிலும் கேட்கும் கலை கஷ்டமானதுதான்—பெண்களுக்கு மட்டுமல்ல, ஆண்களுக்கும்தான். இந்தக் கம்பர் மகாநாட்டிலும் பிரசங்கங்கள் நடக்கும்போது ஆண் மக்கள் எல்லாரும் அப்படியே கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள் என்று சொல்லுகிறாயா? அவர்களில் சிலர் ஒருவரோடொருவர் மெள்ளப் பேசிக்கொண்டிருந்ததை நானே கண்டேன். அந்தப் புருஷ அளவையும் கடந்து அதீதமாய்ப் பேசிக்கொண்டிருப்பார்கள் பெண்கள் என்பதையும் நான் ஒப்புக் கொள்கிறேன். அதற்காவது மற்றக் கூட்டங்களுக்கு வருவதுபோல் வந்திருக்கலாமே, அதுவும் இல்லையே!’ என்றேன் நான்.

அதற்கு கமலா, ‘வராதவர்கள் மீது குற்றப் பத்திரிகை படித்தது போதும்; வந்து பேசியவர்கள் மீதும் ஏதோ குற்றப் பத்திரிகை படிக்கத்தானே “ஆனால்” போட்டு ஆரம்பஞ் செய்தாய்’ என்று கேட்டாள்.

‘குற்றப் பத்திரிகை எப்போதும் பொய்தான் என்று நினைக்கிறாயா?’

‘இல்லை; ஆனால்......’ என்று அவள் சொன்னதும், ‘நீயும் “ஆனால்” போட்டு ஏதோ ஆரம்பம் செய்கிறாயே’ என்று நான் நகைத்தேன். பிறகு, ‘நீ சொல்லப்போகும் விஷயம் புரிந்துவிட்டது. அதையும் சொல்லிப் பதிலும் சொல்லட்டுமா?’ என்று கேட்டேன்.

அவளோ, ‘நீ சொல்லப்போகும் சமாதானமும் எனக்குப் புரிந்துவிட்டது. இப்போது எல்லாவற்றையும் நானே சொல்லிவிடுகிறேன்’ என்ற பீடிகையுடன் பேச ஆரம்பித்தாள்.

‘அந்த மூன்று ஸ்திரீ-பேச்சாளர்களும் மற்றவர்களைப் போல் சாதாரண இலக்கிய விமர்சனம் பேசினார்கள். ஆனால், கம்ப ராமாயணத்தில் காணும் பெண்மையைக் குறித்துப் பேசவில்லை. இதுதானே உன் குற்றச்சாட்டு?’

‘ஆம்’ என்பதற்கு அறிகுறியாக மௌனமாய் இருந்தேன். கமலா தொடர்ந்து என் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்வது போலவும் பேசினாள்: ‘அம்மூவரிலும் ஒரு பேச்சாளர் சீதையைக் குறித்துப் பேசினார். காட்டுக்குப் போகும் ராமனோடு சீதாபிராட்டி தானும் போவதாய்ச் சொல்லிப் பிரிந்திருக்க முடியவே முடியாது என்ற அந்த கட்டத்தை — அந்தக் கஷ்டமான கட்டத்தை—நன்றாகத்தான் விமர்சனம் செய்தார். மற்றப்படி பெண்-பேச்சாளர்கள் எடுத்துப் பேசும்படி அவ்வளவு விசேஷமாய்ப் பெண்மையைக் குறித்துக் கம்பர் என்னதான் சொல்லியிருக்கிறார்?’

‘நீ கம்ப ராமாயணம் படித்ததில்லை அதனால்தான் இந்தக் கேள்வி கேட்டாய்!’

‘படிக்காவிட்டாலும் நானும் மகாநாட்டுக்கு வந்து கேட்டேனே,—பக்கத்தில் நீ இராததால் மெள்ளப் பேசிக்கொண்டிருப்பதற்கும் வழியில்லாமல் மெள்ளக் கேட்டுக்கொண்டிருந்தேன்.’

‘மகாநாட்டில் சில பிரசங்கங்களைக் கேட்டுவிட்டால் போதுமா?’

‘சாமானியர்களின் பிரசங்கங்களா? கம்ப ராமாயணத்தைக் கரைத்துக் குடித்த நிபுணர்களல்லவா பிரசங்கம் செய்தார்கள்? அவர்களில் ஒருவர் “மனத்துயரத்திற்கு மருந்து கம்பர் கவிதை” என்றார். ‘கம்பரை’ வைத்தியராக்காமல், உள்ளபடியே அவருக்காகக் கௌரவிப்பதுதான் தமிழ் இலக்கியத்தைக் கௌரவிப்பது” என்றார் ஒரு கௌரவ புருஷர். இன்னொருவர் “கம்பரில்தான் தமிழ்க் கலாசாரத்தின் ஸாரம் இருக்குது!” என்றார். “நவரஸங்களையும் கண்டேன்” என்றார் ஒரு ரஸிகர். “காலதேசம் கடந்த, நாடகத்திறமை நிறைந்த, கவியுலகமே கம்பர் என்றார் ஒருவர். கபந்தனையும் கள்ள மார்க்கெட்டையும் சமதர்மத்தையும் பிணைத்து ஹாஸ்யம் பண்ணினார் ஒருவர். தலைவர்—பேருரை குறித்தும் வரவேற்புரை குறித்தும் சொல்லவா வேண்டும்?-கம்பரின் கவியே உலகத்தில் சிறந்தது என்று இருவரும் முடிவு கட்டினார்கள். நமது பிரதமரோ, “கம்பருடைய ராமராஜ்யம், காந்திராஜ்யம், தமிழ்ராஜ்யம் எல்லாம் ஒன்றே என்று சொல்லி, அந்த ராஜ்யத்தை நிலை நாட்டுவோம் வாரீர்” என்றுசொல்லி விட்டார். நமது மராமத்து இலாகா மந்திரியோ “கம்பராமாயணத்தைப் பொசுக்கவேண்டும் என்பது வெறும் பைத்தியக்காரத்தனம்” என்று சொல்லிவிட்டார் என்றெல்லாம் கமலா மகாகாட்டின் பிரசங்கங்களையெல்லாம் தான் உள்ளபடியே கேட்டுவிட்டதாக நான் நம்பவேண்டுமென்று அவற்றுக்கெல்லாம் விமர்சனம் செய்துகொண்டே போனாள்.

நான் குறுக்கிட்டு, 'இந்தப் பொசுக்கல்-கொள்கையைப் பற்றி நமது மராமத்து இலாகா மந்திரியார் சொன்னதையும் நீ ஞாபகத்தில் வைத்துக்கொண்டு சொல்லி விட்டாய். ஆனால், அந்த மந்திரியாரின் அபிப்பிராயத்தை நீ ஒப்புக்கொள்ளாதது போல் உன் குரல் தொனித்ததே! பொசுக்கல்-கொள்கையினரோடு அனுதாபமா?' என்று கேட்டேன்.

'இரண்டு பேர் பேர் பெற்றவர்கள்—அதைப் பைத்தியக்காரத்தனம் என்று சொல்லிவிட்டார்களே?'

'அதற்காக அனுதாபமா, பொசுக்குகிறவர்களுடன்?'

'இப்போதுள்ள கம்ப ராமாயணம் பதிப்புகளெல்லாம் பிழைகள் நிறைந்தவை என்று ஸ்ரீமான் வையாபுரிபிள்ளை போன்ற பெரும் புலவர்கள் சொல்லுகிறார்களாமே— அது உண்மையானால் போசுக்கவேண்டும் எனச் சிலர் கூறுவது அவ்வளவு வெறும் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றவில்லையே!'

'சரி. சரி; பொசுக்கல்-கொள்கைக்கு ஒரு புதிய காரணம் கண்டுபிடித்துவிட்டாயா? அப்படியானாலும், பொசுக்கப் பொசுக்கத் திருந்திய பதிப்புகள் வரும் என்பது என்ன நிச்சயம்? பழைய பிழைகளோடு புதிய பிழைகளும் சேர்ந்து புதிய புதய பதிப்புக்களாக வந்துகொண்டிருந்தால் அதற்கென்ன செய்வது?'

'என்ன செய்வதா? மறுபடியும் "எரியூட்டுபடலம்" தான். 'பொசுககல்' காரர்கள் சுறுசுறுப்பாகவே இருக்கவேண்டியதுதான்!' என்றுள கமலா.

'அவர்களுக்குத்தக்க கமிஷனும் கொடுப்பார்கள் புஸ்தகக் கடைக்காரர்கள்! கொளுத்தக் கொளுத்தப் புதிய புதிய 'புரூப்பு' பிழைகளுடன் புஸ்தகம் போட்டுப் போட்டு விற்றுப் பணம் சம்பாதிக்கலாமல்லவா?' என்றேன் நான்.

'ஓஹோ! நாம் இருவரும் கம்பராமாயண ஆராய்ச்சிக்காரர்களைக் காட்டிலும் ஒரு புதிய விஷயத்தையல்லவா கண்டு பிடித்துவிட்டோம்? இது இருக்கட்டும். ஏன் சில தமிழர்கள் தமிழகத்தின் கவிச்சக்கரவர்த்திக்கு விரோதிகளாய் இருக்க வேண்டும்? கம்பர் தமிழர்களின் மனசில் அழியாத இடம் பெற்றிருப்பதாகப் பேராசிரியர் டி.பி. மீனாட்சி சுந்தரம்பிள்ளை சொன்னார்.'

'மனசில்தான் அழியாத இடம் கிடைத்துவிட்டதே; வெளியே அழித்துவிட்டால்தான் என்ன? —என்றுகூடப் பொசுக்கல்-வாதிகள் எண்ணியிருக்கலாம்' என்றேன் நான்.

'பரிகாசம் செய்கிறாயா? நான் உள்ளபடியே தான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். சுதந்திர இயக்கம் சம்பந்தமாய்ச் சிறை சென்ற பல அரும் பெருந் தமிழர்களும் கம்பராமாயணம் படித்துச் சிறை வாழ்க்கையை இன்புறக் கழித்ததாகவும், கவர்னர் ஜெனரல் ராஜாஜியே அப்படிச் செய்ததாகவும் பேராசிரியர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பேசினார்- அப்படியிருந்தும் சிலர் கம்பருக்கு விரோதிகளாய்......' என்று கமலா பேசிக்கொண்டிருக்கும்போதே நான் குறுக்கிட்டேன்.

'ஓஹோ! சரி, சரி, அதே காரணமாய் இருக்கலாம். காங்கிரஸ்காரர்களுக்குச் சிறை வாழ்க்கையையும் இன்ப வாழ்க்கை ஆக்கியது என்பது உண்மையானால், காங்கிரஸின் எதிரிகளுக்குக் கோபம் கோபமாய்ப் பொங்கி வருவது இயல்புதானே? காங்கிரஸுக்கு விரோதமாய் "ஹிந்தி வீழ்க" என்கிறவர்கள் கம்பர் கவிதையை நெருப்பில் போட்டு அவர் "இலங்கை எரியூட்டு படலம்" பாடியிருப்பது போல் தாங்களும் ஒரு புதிய எரியூட்டு படலம் பாடி வைத்தாலும் அதிசயமில்லைதான். "சொந்த சுயநலத்தின் காரணமாகவே சிலர் இந்த மகா காவியத்தைப் பழிக்கிறார்கள்" என்று நமது மராமத்து மந்திரியே அன்று தம் பிரசங்கத்தில் சொல்லி விட்டார். ஆகவே, தேசியவாதிகள் ஆதரிப்பதை எதிர்க் கட்சியினர் எதிர்க்க வேண்டியதுதானே' என்றேன்.

'இலக்கியமும் அரசியல் கட்சி பேதங்களுக்கு இரையாக வேண்டுமா?' என்று தன் வருத்தத்தை மறைக்க முடியாமல் கேட்டுவிட்டாள் கமலா. நான் ஒன்றும் வெளிப்படையாகப் பதில் சொல்லவில்லை 'அதனால் கம்பருக்கு நஷ்டமா? ரஸிகர்களுக்கும் அறிஞர்களுக்கும்தான் நஷ்டமா?' என்று என் மூளை உள்ளுக்குள்ளே ஆலோசித்துக்கொண்டிருந்தது.

கமலாவின் மூளையோ திடீரென்று ஒரு புதிய உண்மையைக் கண்டு திருப்தியடைந்தது. 'போகட்டும் பொசுக்கி விட்டால் தான் என்ன? பரீட்சைப் பாடமாக வந்து மாணாக்கர்களையாவது கம்பர் ஹிம்ஸிக்காமல் இருப்பாரானால், அந்தப் பொசுக்கல்-கொள்கையும் சரிதான். மாணாக்கர்களுக்காக நானே ஆதரிக்கிறேன்!' என்றாள்.

'கம்பரும் ஆதரிப்பார் இந்த அபிப்பிராயத்தை!' என்றேன் நான்.

* * * * *

கம்பர் வந்தார், சென்னையில் மூன்று நாள் தங்கினார்-ராஜாஜி மண்டபத்தில்தான், காணாத காட்சிகளைக் காட்டினார். 'ரஸிக்கிறவர்கள் ரஸிக்கட்டும்: ராவண காவியமும் நானே பாடி வைத்திருக்கிறேன், கோபம் வேண்டாம், குணமே வேண்டும், நலமே வேண்டும். 'எரித்துத்தான் ரஸிக்க முடியும்?" என்று நம்புகிறவர்களையும் என்னுடைய ராமராஜ்யம் ஒதுக்கித் தள்ள முடியாது. ஆனால், பரீட்சையென்றோ, பாடமென்றோ, வேறு காரணம் காட்டியோ என் கவிதையை ரஸிக்க முடியாமல் செய்துவிடும் அறிவாளிகளை மட்டும் என்னுடைய ராமனாலும் மன்னிக்க முடியாது!' என்று சொல்லி மறைந்துவிட்டார்.



கதலீபுர நாடகம்

எஸ்.ஜே.

அத்தியாயம் 6

கதலீபுரம் பங்களா வாசலில் ஸ்ரீமான் பயங்கர நரஸிம்மம் தபால்காரனை எதிர்பார்த்துக் கொண்டு நின்றுகொண்டிருந்தார். அவருடைய மூத்த குமாரனை சிரஞ்சீவி பாலுசாமியிடமிருந்து கடந்த பதினைந்து நாட்களாகக் கடிதம் வரவில்லை. யூனிவர்ஸிடி பரீக்ஷைக்கு இன்னும் இருபது நாள்கூட இல்லை. அவன் பரீக்ஷைக்குப் படிக்கிறானா அல்லது ஊர் சுற்றிக்கொண்டிருக்கிறானா என்று அவருக்குத் தெரியவில்லை.

தபால்காரன் பயங்கரத்தினிடம் ஒரு கவரைக் கொடுத்துவிட்டுப் போனான். ஆனால், அது பாலுசாமியிடமிருந்து வரவில்லை என்று தெரிந்ததும் ஏமாற்றமும் ஆத்திரமுமாக இருந்தது அவருக்கு. அந்தக் கடிதத்தை எழுதியிருந்தவர் பாலுசாமியின் கலாசாலை ஆசிரியர்களில் ஒருவர். அந்தக் கடிதம் பின்வருமாறு;—

“ஸ்ரீமான் நரசிம்மம் அவர்களுக்கு,

நமஸ்காரம். இரண்டு நாட்களுக்கு முன்னால் நான் மற்ற ஆசிரியர்களோடு டென்னிஸ் ஆடிவிட்டுத் திரும்பி வரும்போது என் முகத்தில் ஒரு அழுகிய வாழைப் பழமும், அதைத் தொடர்ந்து ஒரு காலி சிகரெட் பெட்டியும் வந்து விழுந்தன. உடனே அங்கு தேடிப் பார்த்ததில், தங்கள் பையன் ஒரு மரத்தின்மீது ஒளிந்துகொண்டிருப்பது தெரிந்தது. தன் சிநேகிதன் யாரோ வருகிறானென்று நினைத்துக்கொண்டு அதை எறிந்ததாய்ச் சொல்லி, என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். இந்த விஷயத்தைப் பிரின்ஸிபாலிடம் சொல்லியிருந்தால், தங்கள் பையனை ‘டிஸ்மிஸ்’ செய்திருப்பார். ஒரு கௌரவமான இடத்தைச் சேர்ந்த பையன், அவனுடைய வாழ்க்கை நம்மால் கெட்டுப் போக வேண்டாம் என்று அவனை மன்னித்துவிட்டேன். போலீஸ் ஸார்ஜெண்டுகளின் குமாரர்கள் அழுகல் வாழைப்பழங்களை ஆசிரியர்கள்மீது எறிவது மிகவும் அதிசயமாயிருக்கிறது. மன்னிக்கவும்.

தங்கள்

ஜடேசன், எம். ஏ ”

அதைப் படித்து முடித்தபோது பயங்கரம் அவர்களுக்குத் தாங்கமுடியாத கோபம் ஏற்பட்டது. அந்த சமயத்தில் அவருடைய கடைக்குட்டி பக்கத்திலிருந்தால்கூட அவருடைய கோபத்திற்குப் பலியாகி இருக்கக்கூடும். ஆனால், சீமாச்சுவுக்கு ஆயுர்பாவம் நிறைய இருந்ததால் நல்ல வேளையாகத் தோட்டத்தில் நண்டு பிடித்துக்கொண்டிருந்தான்!

“வாழைப்பழம்!...அழுகல் வாழைப்பழம்!—அநியாயம்...சிகரெட் பெட்டி... அக்ரமம்... போலீஸ் ஸார்ஜெண்டின் பிள்ளை...” என்று இறுக்கி மூடப்பட்ட அவருடைய உதடுகளுக்கிடையிலிருந்து வார்த்தைகள் வெளிவந்தன.

“என்ன அப்பா! என்னமோபோலிருக்கிறீர்களே?” என்று பயந்துகொண்டே கேட்டாள் விசாலாக்ஷி.

“சீமந்த புத்திரன் வாத்தியார் மேலே அழுகல் வாழைப்பழத்தை விட்டெறிஞ்சால் அப்பா ஆனந்தக் கூத்தாட வேண்டுமா, என்ன?” என்று கேட்டார் பயங்கரம்.

விசாலாக்ஷிக்குசமாச்சாரம் விளங்கிவிட்டது. “அது பொய்யாக இருக்கும் அப்பா!” என்று ஆறுதல் கூறினாள் அவள்.

“பொய்யா! அவன் பேஷாய்ச் செய்திருப்பான்!...அந்த மடேசன் என்கிறவர் ரொம்ப வருத்தப்பட்டுக்கொண்டு எழுதியிருக்கிறார்...”



"சாமீ! இறங்குங்க!'' என்று வாசலில் சப்தம் கேட்டது. தந்தையும் பெண்ணும் வாசல் பக்கம் பார்த்தார்கள். ஒரு ஒற்றைமாட்டு வண்டி நின்றுகொண்டிருந்தது. அதிலிருந்து கையில் ஒரு சிறு பெட்டியுடன் ஓர் இளைஞன் வந்திறங்கினுன். அவன் வேறு யாருமில்லை, சாக்ஷாத் சந்திரசேகரன் தான்!

"குட் மார்னிங், மிஸ்டர் நரஸிம்மம்!'' என்று சொல்லிவிட்டுச் சந்திரசேகரன் சந்தேகத்துடன் "நீங்கள் தானே ரிடையர்டு போலீஸ் ஸார்ஜெண்ட்?'' என்று கேட்டான்.

"ஆமாம், ஆமாம்!'' என்று அலுப்புடன் சொன்னுர் நரஸிம்மம்.

சேகரனுக்குத் தான் வந்த சமயம் சரியல்ல என்று பட்டது.

"உங்கள் விளம்பரத்தைப் பார்த்தேன். ஐ-ஆம்-எ-க்ராஜுவேட் (நான் ஒரு பட்டதாரி)''... என்று ஆரம்பித்தான் சேகரன்.

பயங்கரத்தின் தோற்றம் கொஞ்சம் சாந்தமடைந்தது. ''ஓகோ! ரொம்ப சந்தோஷம்! இந்த வண்டியில்தான் வருகிறீர்களா?''

"ஆமாம்! உங்களைப்போல பெரிய மனுஷாள் வீட்டிலே டியூஷன் சொல்லிக் கொடுக்கிறது என்னைப் போன்றவாளுக்கு ரொம்ப கௌரவமாயிருக்கும்.''

பயங்கரத்தின் முகத்தில் பெருமிதம் தாண்டவமாயிற்று. பெரிய மனிதர்களுக்கு லக்ஷணமான அலக்ஷ்யபாவத்துடன், "ஏகப்பட்ட அப்ளிகேஷன்ஸ் வந்து கிடக்கு ஸார்! எவ்வளவு இருக்கும், அம்மா விசாலம்!'' என்று பெண்ணிடம் கேட்டார். அப்பாவின் கருத்தைத் தெரிந்துகொண்டு விசாலம், "ஐம்பதோ என்னமோ வந்திருந்தது. அதில் பத்து எம். ஏ.க்கள்...'' என்ருள்.

சேகரனுக்கு வந்த சிரிப்பை ரொம்ப சிரமப்பட்டு அடக்கிக்கொள்ள வேண்டியிருந்தது. உண்மையில் அந்தக் கௌரவமான வேலைக்கு இவன் தான் முதலாவதும் கடைசியுமான அபேக்ஷகன்!

"ஏதோ நீங்கள் எனக்கு அந்த வேலையைக் கொடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் நான் அப்ளிகேஷன் கூடப் போடாமல் நேரிலேயே வந்துவிட்டேன்...'' என்ருன் சேகரன் விநயத்துடன்.

"உங்கள் மானர்ஸ் (நடத்தை) எனக்கு ரொம்பப் பிடிக்கிறது, ஸார்! இன்னியிலேருந்தே எங்க சீமாச்சுவுக்குப் பாடம் ஆரம்பிச்சூடுங்கோ. இவனுக்கு டியூஷன் வைக்கிற நோக்கம் என்னவென்று கேட்டா, இப்பல்லாம் ஸ்கூல்களிலே சொல்லிக் கொடுக்கிற இங்கிலீஷ் பிரயோஜனமே யில்லே. எங்க பெரிய பையனுக்கு ஒரு லெட்டர்கூட இங்கிலீஷிலே ஒழுங்கா எழுதத் தெரியாது. நாங்க படிச்ச காலத்திலே மெட்ரிகுலேஷன் பையன்களெல்லாம் ஷேக்ஸ்பியரையும், மில்டனையும் கரைத்துக் குடித்திருந்தார்கள்.... அதனுலே எங்க சீமாச்சுவுக்கு நல்ல இங்கிலீஷ் ஞானம் வரும்படி செய்யவேண்டியது உங்க பொறுப்பு'' என்று முடித்தார் ராவ்பகதூர் பயங்கரம்.

''இன்னும் ஒன்று மறந்துவிட்டேனே. சாப்பாடு போட்டு, தங்க இடமும் கொடுத்து மாதம் ஐம்பது ரூபாய் கொடுத்து விடுகிறேன். தவிர ஒரு சின்ன சமாச்சாரம். என் தாயார் வீட்டோடு இருக்கா. அவ கொஞ்சம் மடி ஆசாரம் பார்க்கிறவள். அவகிட்டே மட்டும் சித்தே ஜாக்கிரதையாக நடந்துக்கணும்... இந்தப் புத்திமதியை நான் எங்கள் வீட்டுக்கு வரவா எல்லோருக்கும் சொல்லற வழக்கம்'' என்று சொல்லிவிட்டு பயங்கரம்,

"எலே சீமாச்சு! சீமாச்சுப் பயலே!'' என்று கூப்பாடு போட்டார்.

சிரஞ்சீவி சீமாச்சு ஓடி வந்தான். "இவர் தாண்டா உன் வாத்தியார். இன்னமே ஒழுங்கா படிக்கணும்" என்று பையனுக்கு உபதேசம் செய்தார் பயங்கரம்.

"ஓகோ! இவர்தானா வாத்தியார்! அதானே என்னடான்னு பார்த்தேன்!..." என்று சொல்லி விட்டு விமர்சனத்திற்கு வரும் நவீனத்தைப் பத்திரிகாசிரியர் பார்ப்பதுபோல மேலும் கீழும் பார்த்தான். அவன் முகத்தில் ஏமாற்றம் பிரதி பலித்தது. சீமாச்சுவுக்குத் தன்குரு நியமனத்தில் அதிக திருப்தியில்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. "உச்சிக்குடுமி வைத்துக் கொண்டு ஒரு பயந்தாங்குளி வாத்தியார் வருவார்; இஷ்டப்படி விளையாடலாம்" என்று அவன் நினைத்துக்கொண்டிருந்தான். ஆனால், சந்திரசேகரனுடைய மிரட்டும் பார்வையும் கம்பீரமான ஆகிருதியும் சேர்ந்து சீமாச்சுவை நடுங்க வைத்துவிட்டன. அது ஒரு நிமிஷம் ஏற்பட்ட சிந்தனை அவ்வளவுதான். "எந்த வாத்தியாராயிருந்தாலென்ன? நம்மை என்ன செய்ய முடியும்?" என்ற எண்ணம் வந்த பிறகு சீமாச்சுவுக்குப் பழைய துணிச்சலும், பழைய திமிரும் தானாகவே வந்துவிட்டன.

சந்திரசேகரனும் தன் சிஷ்யனைக் கூர்ந்து கவனித்தான். உலகத்திற்குப் பிரம்மதேவன் அனுப்பியிருக்கும் உபரிச் சரக்குகளில் (Surplus Products) ஒன்று என்று மனதில் எண்ணிக்கொண்டான். ஆனால், வெளிப்படையாக, "பையனைப் பார்த்தால் ரொம்ப சூடிகையாக இருப்பான்போலிருக்கே!......பேச்செல்லாம்கூட பெரியவா பேசறதுபோல இருக்கு!" என்றான்.

"பையன் ரொம்ப புத்திசாலி என்கிறத்திலே எனக்குச் சந்தேகமேயில்லை. ஆனால் சுத்த விஷமக்கொடுக்கு சொன்னதைக் கேட்கமாட்டான். சதா தவளைபடித்துக்கொண்டிருப்பான்" என்றார் பயங்கரம்.

"இருந்துவிட்டு போகட்டுமே. இதெல்லாம் தேவைக்கு அதிகமான போக்யதாம்சங்கள்!" என்று சொல்லிவிட்டுச் சிரித்தான் சேகரன்.

சீமாச்சு, அப்பாவின் முகத்திலிருந்து சேகரனுடைய முகத்துக்கும், சேகரனுடைய முகத்திலிருந்து அப்பாவின் முகத்திற்குமாக மாறிமாறிக் கண்களைச் செலுத்தினான்.

"எலே கட்டையா! என் ரூமுக்குப் பக்கத்து ரூமை ஐயாவுக்கு ஒழிச்சுக்கொடு..ஏய்!வைத்தா! இவருக்கு டிபன் கொடு!" என்று ஆக்ஞையிட்டு விட்டு பயங்கரம் தோட்டத்திலிருந்த கீற்றுக் கொட்டகைக்குப் போனார்.

பயங்கரம் சென்றபிறகு சேகரனின் உள்ளத்தில் விதவிதமான உணர்ச்சிகள் ஒன்றோடொன்று போட்டியிட்டன. ஆனால், முடிவில் தான் அவ்வூருக்கு வந்தது பெரிய பாக்கியம் என்றெண்ணிக்கொண்டான். ஒரு பொட்டைக் காட்டில் விஷமக் கொடுக்கு ஒன்றுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பது என்னவோ அவ்வளவாக விரும்பத்தக்கதல்ல. மடிமடியென்று அடித்துக் கொண்டிருக்கும் பாட்டிகளும் விரும்பத் தக்கவர்களல்ல என்பதை அவன் மறுக்கவில்லை. ஆனால், அங்கு சௌந்தர்யவதியான ஒரு பெண் திலகம் இருப்பாள் என்று அவன் எண்ணவே யில்லை. இந்தப் "பயங்கரம் அண்டு கோ"வில் அவள் வந்து பிறந்தது ஒரு அதிசயந்தான் என்று அவன் ஆச்சர்யப்பட்டான். எதிரில் டிராமாவின் ராஜபார்ட் வேஷக்காரனைப்போலிருக்கும் ஒரு ஆசாமி என்னவோ சொல்லுவதைக் கேட்ட பிறகுதான் கனவுலகத்திலிருந்து எழுந்தான். ஏதாவது டிராமா பார்த்துக்கொண்டிருக்கிறோமோ என்ற சந்தேகம் எழுந்தது சேகரனுடைய உள்ளத்தில்.

ராஜபார்ட் வேஷதாரி மனிதர், "ஸார்! இலை போட்டுவிட்டேன். டிபன் சாப்பிட வாருங்கள்!" என்று அழைத்தவுடன்தான் சேகரனுக்கு உண்மை புலப்பட்டது: சமையற்காரர்

களுக்கும் சினிமா நடிகர்களுக்கும் எப்படி வித்தியாசம் கண்டுபிடிப்பது என்ற ஆராய்ச்சியில் அவனுடைய மனம் ஈடுபட்டது.

“ஸார்! என்னை ஏமாற்றி விட்டீர்களே!” என்றான் சேகரன்.

“என்ன ஸார்?” என்று ஆவலுடன் கேட்டான் ராஜபார்ட் மனிதன்.

‘நான் உங்களை என்னவென்று நினைத்தேன், தெரியுமா? ஒரு மேடை நட்சத்திரம் என்று நினைத்தேன்.’

வைத்தாவுக்கு வான சாஸ்திரத்தில் அதிகப் பற்றுதலோ அல்லது ஞானமோ இல்லாததால், மேடை நட்சத்திரம் என்ற வார்த்தை வால்





நட்சத்திரத்தைப்போல் ஏதோ ஒரு ஆகாச வஸ்துவைக் குறிப்பிடுகிறது என்றெண்ணினான்.

“மேடை நட்சத்திரமா? அது என்ன ஸார்?” என்றான் சந்தேகத்துடன்.

“பவளக்கொடியில் வரும் கோவலன் பார்ட் மாதிரி இருந்தது. அதனால் நீங்கள் டிராமா நடிகரோ என்றெண்ணினேன்”

“அர்ஜுனன் பார்ட் என்று சொல்லுங்கள். நான் இதுவரை பார்த்த பவளக்கொடிகளில் கோவலன் வந்தது கிடையாது...” என்று தன் அனுபவபூர்வமான உண்மையை எடுத்துச் சொன்னான் வைத்தா.

“ஆமாம், வாய்தவறிச் சொல்லிவிட்டேன். அதைத் தவிர உங்கள் முகத்திலே ஒரு நாடகக் களை இருக்கிறது, ஸார்!......” என்றான் சேகரன்.

நாடகம் என்றால் வைத்தாவுக்கு உயிருக்கு உயிரான விஷயம், அதிலும் அவனிடம் நாடக மேடைக் களை இருக்கிறதென்று யாராவது சொன்னால் வைத்தாவுக்கு உச்சி குளிர்ந்துவிடும்.

“நீங்கள் எப்படி ஸார் கண்டுபிடித்தீர்கள்? முன்னே நான் ஹான்ஸ் லஞ்ச் ஹோம்லே இருந்தேன். அப்போ ஹோட்டல் சிப்பந்திகள் போட்ட நாடகத்திலே என் பார்ட் ரொம்ப நன்றாக இருந்தது என்று எல்லோரும் சொன்னார்கள். அதனால் எங்கள் முதலாளி எனக்கு

ஒரு மாச நோட்டீஸ் கொடுத்து அனுப்பிவிட்டார்''

"உங்கள் பார்ட் நன்றாயிருந்தால் அவர் உங்களை வீட்டுக்கு அனுப்புவானேன்?"

"எல்லாம் பொறுமைதான், ஸார்! அந்த நாடகத்திலே அவர் கிருஷ்ணன் வேஷம் போட்டுண்டார். நாடகம் பார்க்க வந்தவா சில பேர் கிருஷ்ணரின் நடை வாத்து நடக்கிறப்போல் இருக்கிறது என்றார்கள். கிருஷ்ண பகவானுக்கு ஒண்ணரைக்கண் இருப்பதாகப் பாரதத்தில் சொல்லியிருக்கிறதா என்று சிலர் சர்ச்சை செய்தார்கள். கிருஷ்ண வேஷத்துக்குப் பதிலாகக் கோமாளி வேஷம் போட்டுக்கொண்டிருந்தால் ரொம்பப் பொருத்தமாயிருக்கும் என்று சிலர் அபிப்பிராயப்பட்டார்கள்.......''

சேகரன், அர்ஜுன வேஷதாரியான வைத்தாவை ஏற இறங்கப் பார்த்தான். அர்ஜுனனுக்கு இருக்கவேண்டிய யோக்யதாம்சங்கள் வைத்தாவிடம் இருக்கிறதா என்பதைப்பற்றி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவதற்குள், "யாரப்பா நீ! கொஞ்சங்கூட ஆசார விவகாரமே தெரியவில்லையே' நகந்து நில்லு. அந்தக் கோடிலே என் புடவை போட்டிருக்கேன்......... இன்னிக்கு ஏகாதசி. எனக்குப் பலகாரம்...... நான் பலகாரம் இருந்து பாழாய்ப்போகலையா?'' என்ற சொற்கள் வெள்ளம்போலப் பெருகியோடின.

வைத்தா சேகரனைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டிவிட்டு, "நீங்க டிபன் சாப்பிட வாங்கோ, ஸார்!" என்று உள்ளே அழைத்துக்கொண்டு போனான்.

மத்தியான சாப்பாடு ஆனபிறகு சேகரன் தன்னுடைய 'ஜீவ்ஸ்' புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தான். அவன் மனம் புஸ்தகத்தில் இல்லை. விசாலாக்ஷி தன்னோடு பேசுவாளா, அல்லது கர்னாடகப் பெண்களைப் போல வெட்கப்படுவாளா என்ற ஆராய்ச்சியில் சேகரன் ஈடுபட்டிருந்தான்.

அதே சமயத்தில் விசாலாக்ஷி பெர்னார்ட்ஷாவின் பிக்மேலியன் என்ற நாடகத்தைப் படித்துக்கொண்டிருந்தாள். உலகத்தில் உள்ள இளைஞர்களுக்கும் சேகரனுக்கும் இடையே அவள் காண முடியாத ஏதோ ஒரு வித்தியாசம் இருப்பதாக அவள் நினைத்தாள். பார்வைக்கு அழகாயும், சமர்த்தனுயும் இருக்கிற அந்த இளைஞன்—ஒரு பி. ஏ. பட்டதாரி—போயும் போயும் ஒரு பட்டிக்காட்டுக்கு வந்து டியூஷன் சொல்லிக்கொடுக்க ஆசைப்படுவானேன் என்று அவள் ஆச்சர்யமடைந்தாள். பெர்னார்ட்ஷாவைப் படித்துக் குதர்க்க வாதத்தில் தேர்ச்சி பெற்ற அவளுக்கு இது ஒரு சாதாரண சம்பவமாகத் தோன்றவில்லை.

* * * *

கதலிபுர வாழ்க்கை சேகரனுக்கு மிகவும் பிடித்திருந்தது. சீமாச்சுவுக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்கவேண்டிய மூன்று மணி நேரத்தைத்தவிர மற்ற நேரமெல்லாம் ஸ்வர்க்க லோகத்தில் இருப்பது போலத் தோன்றியது. சமையற்கார வைத்தா, கட்டையன் இவர்களிருவரும் சேகரனுக்கு ஆப்தர்களாகிவிட்டார்கள். வேடிக்கை வேடிக்கையாகப் பேசிக்கொண்டு அவர்களுக்குப் பொழுது போவதே தெரியாமல் இருக்கும்படி ஏதாவது தமாஷாகப் பேசிக்கொண்டிருப்பான் சேகரன்.

"இந்தப் போலீஸ் ஸார்ஜெண்டின் குடும்பத்திற்கே—ஒரு ஆசாமியைத் தவிர—பகவான் மூளையை மட்டும் வைக்க மறந்துவிட்டார் போலிருக்கிறது'' என்பான் சேகரன்.

"அதென்ன அப்படிச் சொன்னேள்?" என்று கேட்பான் வைத்தா.

"மூத்த பையன் வாத்தியார்களை வாழைப்பழத்தாலே அடிக்கிறான். சின்ன பையன் பரசுராமன் க்ஷத்ரிய ஸம்ஹாரம் பண்ண ஆரம்பிச்சாப்பலே ஊரிலிருக்கிற தவளைகளையெல்லாம் ஸம்ஹாரம் பண்றான்......''

"சின்ன ஐயா வந்தப்புறம் சாமி! ஊரிலே ஒரு தவளையக்கூட கண்ணுலே காண முடியவில்லை!'' என்பான் கட்டையன்.

"தவளை மார்க்கெட்டில் ஷார்ட்டேஜ் ஏற்பட்டிருக்கு என்று சொல்லு!'' என்று திருத்துவான் சேகரன். "கல்லையெடுத்து தவளை அடிக்கிறதுக்காக ஒரு நோபெல் பரிசு ஏற்பட்டிருந்தால் அது மிஸ்டர் சீமாச்சுவுக்குத்தான் போய்ச் சேரும்......!''

பக்கத்தில் ஸ்ரீமான் போலீஸ் ஸார்ஜண்டின் குரல் கேட்கவே சீமாச்சுவைப்பற்றிய தன் அபிப்ராயங்களைத் தற்காலிகமாக நிறுத்திக்கொண்டான்.

வாசலில் பயங்கர நரஸிம்மம் யாரையோ வரவேற்றுக்கொண்டிருந்தார்.

"வா, அப்பா, வா! உன்னைப் பார்த்து ரொம்ப நாளாச்சு..." என்ருர் ராவ் பகதூர்.

"என்ன மாமா! காற்றடித்த பலூன்போல ஊதியிருக்கேளே!', என்ருன் புதிதாய் வந்த இளைஞன்.

பயங்கர நரசிம்மத்தினிடம் இவ்வளவு துணிச்சலாகவும் சுதந்திரமாகவும் பேசுகிறவன் கூட இருக்கிருனு என்று வியந்தான் சேகரன்.

"ஆமாம். பங்களா வாங்கினேளே, மாமா! வேறே ஊரு கிடைக்கல்லையோ? என்னை ஒரு வார்த்தை கேட்டிருக்கக் கூடாது?'' என்ருன் புது ஆசாமி.

"மிஸ்டர் சேகர்! இவன் என் மருமான். இன்ஷியூரன்ஸ் ஏஜெண்ட்............... இவர் வந்து, நடராஜா! ஒரு பி. ஏ. நம்ம சீமாச்சுவின் பிரைவேட் வாத்தியார்'' என்று அவர்களுக்குள் அறிமுகம் செய்து வைத்தார் நரசிம்மம்.

புது ஆசாமியின் தந்திரமான பேச்சும், முகபாவங்களும் சேகரனுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவன் ஒரு இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்ட் என்று தெரிந்துகொண்டவுடன் சேகரனுடைய வெறுப்பு இன்னும் அதிகமாயிற்று.

"போன மாதத்திலே மாமா! ஒரு லக்ஷ ரூபாய்க்கு பிஸினஸ் பண்ணினேன். முரட்டுப் பிடிவாதமாயிருந்த கேஸ் நாலைந்தை நம்ம பேச்சாலே மடக்கிப்போட்டேன். ஒருபெரிய மில் முதலாளி வரச்சொல்லியிருக்கார் இன்னும் நாலு நாளிலே. அது ஒரு மூணு லக்ஷத்துக்கு ஆச்சு....'' என்று மூச்சுவிடாமல் கணணைச் சிமிட்டிக்கொண்டே பேசிக்கொண்டு போனுன் இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்ட்.

"சரி, சரி! பிஸினஸ்ஸைப்பற்றி அப்புறம் பேசுவோம். ஸ்நானம் பண்ணிவிட்டு சாப்பிடப்போ!'' என்று கூறிவிட்டு நரஸிம்மம் தன் ஷெட்டுக்குப் போனுர்.



கண்ணுடிக்காரர்:— சரி! நீர் சொன்னதுபோல் அந்தப் பிள்ளைக்கு நாலாயிரம் ரூபாய் வரதக்ஷிணை தரேன். பதிலுக்கு அவாள் என்ன செய்வாள்?

தரகர்:— சம்பந்தி பிராமணனிடம் சொல்லி வேணுமானு ஒரு ரசீது எழுதி கையெழுத்தும் போட்டு தரச்சொல்றேன்!

"என்ன விசாலம்! பேசவே காணுமே! கல்யாணத்தைப் பற்றிய யோசனைகளோ? வேண்டியதுதான்!'' என்று விசாலத்தினிடம் பேச்சுக் கொடுத்தான்.

"ஓகோ, அத்தானு? வாங்கோ என்னமோ லக்ஷக்கணக்கிலே ரூபாய் அடிபடறதேன்னு பார்த்தேன்......'' என்று சிரித்துக்கொண்டே சொன்னுள் விசாலாக்ஷி.

விசாலாக்ஷியோடு நடராஜன் பேச்சுக்கொடுப்பதை சேகரன் கொஞ்சம் கவனித்தான். ஏனே அவன் உள்ளத்தில் பொருமைக் கனல் வீசியது. "கதலீபுர நாடகத்தில் ஒரு முக்கியமான கட்டம் இப்போது வந்திருக்கிறது. வில்லன் பார்ட் ஆரம்பமாகிவிட்டது. கதாநாயகன் உஷாராக வேண்டிய சமயம் இது'' என்று சேகரன் தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

(தொடரும்)

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

சந்தா விவரம்

★

(சந்தாவை முன்னதாக கட்டவேண்டும்)

	இந்தியா, சிலோன்	வெளிநாடு
1 வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணு 4

3-மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக் கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்,
'சுதேசமித்திரன்' ஆபீஸ், மவுண்ட்ரோட், மதராஸ்.

மாதர் மகா சபை

குங்குமம்

'என்னமோ போங்கள்' வர வர எல்லாம் சந்தையில் மாடு பிடிக்கிற பேரம் மாதிரி......' என்று சொல்லிக் கொண்டிருந்த ருக்குவின் மாமியார், அப்பொழுது அங்கு வந்து சேர்ந்த சரோஜாவைப்பார்த்து மேற்கொண்டு வாக்கியத்தைப் பூர்த்தி செய்யாமல் அத்துடன் நிறுத்திக்கொண்டு விட்டாள். அத்துடன் மாத்திரமில்லாமல் தான் சொன்னது அவள் காதில் விழுந்திருக்குமோவென்ற பயத்தால் ருக்குவின் மாமியார் பானுவின் முகத்தைப் பார்த்தாள். பானு ருக்குவின் முகத்தைப் பார்த்தாள். எல்லோருடைய முகத்திலும் அசடு சொட்டி வழிந்தது.

'பூஜை வேளையில் கரடி புகுந்துவிட்டது' என்று சரோஜா சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு, 'ஏன் மாமி, வார்த்தையை அரை குறையாய் நிறுத்திவிட்டீர்கள்? ஒன்றும் பயமில்லை. தாராளமாய்ச் சொல்லலாம். சந்தையில் மாடு பிடிக்கிறமாதிரி என்று 'மாதிரி' சப்தமெல்லாம் எதற்காக? சந்தைப் பேரமேதான்' என்றாள் சரோஜா.

'சொல்லவந்ததென்னமோ அதைப்பற்றிதான். இருந்தாலும், உன் மனசில் ஏதாவது தவறுதலாகப் படப்போகிறதேயென்று நிறுத்திக் கொண்டுவிட்டேன். ஆமாம். உண்மையில் நடந்தது என்ன? தலைக்கு ஒருவிதமாகச் சொல்கிறார்கள். நடக்கச்சொல்லிப் பார்த்ததாகவே சொன்னாள் சேஷிப்பாட்டி. நாங்கள் அவ்வளவு கேவலமாக இராது என்று சொன்னோம். நடந்த விஷயம் என்ன?' என்றாள் சரோஜாவைப் பார்த்து ருக்குவின் மாமியார்.

'சேஷிப்பாட்டி சொன்னதில் தவறே இல்லை,' என்றாள் சரோஜா.

'அப்படி என்றால் நடக்கச் சொல்லியா பார்த்தீர்கள்?'

'ஆமாம்.'

'போங்கள் மாமி, அவள் தான் கிண்டல் செய்கிறாள். அதையும் நிஜம் என்று நீங்களும் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்' என்று பானுசொல்லிவிட்டு, 'அதெல்லாம் கிடக்கட்டும். நிஜமாகவே நடந்த விஷயத்தைச் சொல்லு' என்று சரோஜாவைப் பார்த்துக் கேட்டாள்.

'குஞ்சாமணி கலியாணம் நின்றுபோயிற்றே; அதற்கு என்ன காரணம் என்பது ஞாபகத்துக்கு வருகிறதா?' என்றாள்.

தட்டானைக் கூப்பிட்டு வந்து நகைகளை வெட்டிப் பார்க்க வேண்டுமென்று பிள்ளை வீட்டுக்காரர்கள் சொன்னார்களாம். அதற்குக் குஞ்சாமணியின் தகப்பனாருக்குக் கோபம் வந்துவிட்டதாம் என்றாள் பானு.

'நகைகளை ஏன் வெட்டிப் பார்க்கவேண்டுமென்றார்கள் தெரியுமா?'

பெண்ணினுடைய தகப்பனார் சௌந்தரராஜ அய்யங்கார் வெள்ளி நகைகளுக்குப் பொன் முலாம் கொடுத்து, எல்லாம் பொன் நகைகள் என்று சொல்லிப் பிள்ளைவீட்டுக்காரர்களை ஏமாற்றியதுதான் காரணம். ஓரிடத்தில் ஒரு மோசடி நடந்துவிட்டால் அதையொட்டி எல்லோருக்கும் சந்தேகம் ஏற்படுவது சகஜந்தானே'.

'அதேதான் இதற்கும் காரணம்.'!

'நகைக்கும், நடக்கச் சொல்லிப் பார்ப்பதற்கும் என்னடி சம்பந்தம்? என்னமோ ஒன்று மாற்றியொன்று சம்பந்தமில்லாமல் பிதற்றுகிறாள்' என்றாள் ருக்குவின் மாமியார்.

'இல்லை மாமி, நிறைய சம்பந்தம் இருக்கிறது. எல்லாவற்றை

யும் விவரமாகச் சொன்னுல் தானே அதன் தத்துவம் உங்களுக்குத்தெரியும். மேலெழுந்தவாரியாக மூன்ருவது மனிதர்கள் சொல்லும் ஒன்றிரண்டு வார்த்தைகளைக் கேட்டால் அப்படித்தான் அசிங்கமாகத் தோன்றும்' என்ருள் சரோஜா.

'என்னதான் சொன்னுலும் சந்தையில் மாடுகளை 'ஓட்டி'ப் பார்க்கிறமாதிரி ஒரு பெண்ணை நடக்கச் சொல்லிப் பார்ப்பதென்பது மனித சமூகத்துக்கே ஒரு பெரிய அவமானம் தான்' என்ருள் பானு.

'எப்பெர்ழுது கலியாணம் என்பதை ஒரு சந்தை பேரம் மாதிரி கொண்டுவந்துவிட்டார்களோ, அப்பொழுது எல்லாம் அதற்கு உண்டான லட்சணங்களுடன்தான் நடந்தாக வேண்டும்.'

'அப்படியென்ருல்?'

'அப்படி என்ருல் அப்படித்தான். கலியாணப் பெண்களை மாடு ஸ்தானத்துக்கு கொண்டு வந்து விட்டார்கள். சந்தையில் விற்பனைக்கு மாட்டை நன்ருகக் குளிப்பாட்டி, கொப்பி, சலங்கை, மணிகள் எல்லாம் கட்டி அலங்காரம் செய்துகொண்டு வந்து நிறுத்துகிற மாதிரி, பிள்ளை வீட்டுக்காரர்கள் பெண்ணைப் பார்க்க வருகிறதென்றும், அப்பொழுது பெண்ணை அலங்காரம் செய்து பிள்ளையின் எதிரில் பெண்ணைக் கொண்டு நிறுத்துவதென்றும் ஒரு சம்பிரதாயத்தை ஏற்படுத்திவிட்டோம். மாடு வாங்குவதற்கு தரகர்களைக் கொண்டு எங்கெந்த வகையில் பேரம் நடைபெறுகிறதோ அதெல்லாம் கலியாண மார்க்கெட்டிலும் நடைபெறுகிறது. இதில் ஒன்றும் அவமானத்தைக் காணேம். நடக்கச் சொல்லிப் பார்த்து விட்டால் அதில் வந்துவிட்டதாம் அவமானமெல்லாம்!'

'இதென்ன, ஆவேசம், 'ஸ்வேசம்' வந்துவிட்டதா என்ன?' என்ருள் சாந்தா.

'ஆவேச மென்னடி!

எதிரே ஒரு பெண்ணைக் கொண்டு வந்து நிறுத்தச் சொல்லி 'உனக்கு பாடத் தெரியுமா? ஆடத் தெரியுமா? எது வரையில் படித்திருக்கிருய்? ஒரு பாட்டு பாடு பார்க்கலாம். ஒரு ஆட்டம் ஆடு பார்க்கலாம். என்று ஒரு 'பிள்ளை' கேட்டால் அதற்கெல்லாம் சமாதானம் சொல்லலாம். அதில் ஒன்றும் அவமானம் தெரியவில்லை. நடக்கச் சொல்லிப் பார்த்து விட்டால் அதில்தான் வந்து விட்ட தாக்கும் இல்லாத அவமானமெல்லாம். ஏன்? பெண்கள் தான் பிள்ளை வீட்டுக்குச் சென்று பிள்ளையைத் தேர்ந்தெடுக்கட்டுமே? பிள்ளை, பெண்ணைப் பார்த்து மனதுக்குத் திருப்திபட்டால் தேர்ந்தெடுக்கட்டும் என்று எப்பொழுது ஒப்புக் கொண்டு விட்டோமோ, அப்பொழுது சந்தைப் பேரம்தான்' என்ருள் சரோஜா.

'எதற்காக சொல்ல வந்ததை விட்டு விட்டு வீணிற்காவது வார்த்தையை வளர்த்திக் கொண்டு போகிறீர்கள். உன் தம்பியின் கலியாணத்துக்காகப் போனீர்கள். அப்புறம் என்ன நடந்தது சொல்லு' என்ருள் சரோஜாவைப்பார்த்து விமலா.

'இதற்குமுன்னுல் நடந்த ஒரு சம்பவத்தைச் சொன்னுல் தானே நாங்கள் செய்தது சரியா, தவரு என்பதைத் தீர்மானிக்கச் செளகரியமாக இருக்கும். சென்ற ஆனி மாசம் எங்கள் மாமாவின் பிள்ளைக்குக் கல்யாணம் நடந்தது. முன் பின் தெரியாத இடம். தரகரின் வார்த்தையை நம்பிநடைபெற்றது. ஒரு நாள் ராத்திரி, பெண்ணைப் பார்க்க தரகர், மாமா



''......தனக்குத் தெரிந்த அடைமொழிகளை யெல்லாம்......''

"......அந்த சந்தேகத்தையும் தீர்த்துக்கொண்டு விடுவோம் என்று அப்பாவின் காதோடு......"

வின் பிள்ளையை அழைத்துக்கொண்டு போனார். பெண்ணைப் பிள்ளையின் எதிரே கொண்டு நிறுத்தினார்கள். கிளி என்றால் கிளி. தலை நிறைய மயிர், விசாலமான கண்கள். பளிச்சென்று சந்திரனை போன்ற முகம். பார்ப்பதற்கு பிரமித்துப் போகும்படி அவ்வளவு அழகாக இருந்தாள். குயில் மாதிரி குரல். பாடினால் நாளெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கலாம். அலுப்பு சலிப்பே தட்டாது. எஸ். எஸ். எல். ஸி. வரையில் படிப்பு. ஹிந்தியில் ராஷ்டிர பாஷா பாஸ் செய்திருக்கிறாள். வேறென்னவேண்டும்? பையன் சம்மதித்து விட்டான். உடனே முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டது. வழக்கப்படி 'ஒருவேளை'க் கலியாணம் நடந்து, பிள்ளைவீட்டுக்காரர்கள் வீடுவந்து சேர்ந்தார்கள். போனமாசம் பெண் வீட்டுக்காரர்கள் பெண்ணைக்கொண்டு விட்டார்கள். மறுநாள் வீட்டில் கொஞ்சம் கொஞ்சமாகப் 'புகைச்சல்' கிளம்ப ஆரம்பித்தது' என்று சரோஜா சொல்லி முடிப்பதற்குள், 'ஏன், என்ன வந்துவிட்டது ஆபத்து?' என்றாள் பானு.

'பெண்ணுக்கு இடது கால் கொஞ்சம் 'ஊனம்'

'அட பாவமே அப்புறம்?'

'அப்புறம் என்ன? முதலில் உள்ளுக்குள்ளேயே விஷயம் குமுறிக்கொண்டிருந்து. அப்புறம் கொஞ்சமாக அம்பலத்துக்கு வந்து, கடைசியில்பிள்ளை பெண்ணைத் தள்ளி வைத்துவிட்டான்.'

'சே! சே! இது ரொம்ப அக்கிரமம். முதலில் பார்த்து சம்மதித்து ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்ட பிறகு அதைத் தள்ளிவிடுவதுரொம்ப மோசம். மனுஷ்யத் தன்மையே இல்லை. காட்டுமிராண்டித்தனம் என்றுதான் நாலு பேர் சொல்வார்கள்.'

'மாமாவின் பிள்ளையும் ரொம்ப விவேகிதான். உலகத்துக்குப் பயந்தவன்கூட. இருந்தாலும் இப்படி முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்க முயன்றதற்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டுமென்



சிஷ்யர்:—நமது வாழ்நாளில் எவ்வளவு காலம் இச்சத்திரத்தில் கழிப்பதாக உத்தேசம், ஸ்வாமி?

குரு:—பட்டணத்தில் குடியிருக்க ஒரு வீடு கிடைக்கும் வரையில், சிஷ்யரே!

பதுதான் அவனுடைய ஆத்திரமெல்லாம். ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷம் வழியில் சந்தித்துவிட்டுப் போய்விடுகிறவர்களா? ஆயுசு முழுவதும் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாதிருக்க வேண்டிய விஷயம். இதில் இவ்வளவு பொய்யும் பித்தலாட்டமுமா என்று 'மாய்ந்து' போனான்.'

'ஒரு கலியாணத்தை முடித்து வைக்க ஆயிரம் பொய் சொல்லலாம்' என்று ஒரு பழமொழி சொல்வார்களே, ஞாபகமில்லையா?'

'அது கிடக்கட்டுமடி! அது மாதிரி?' என்று பிரஸ்தாப விஷயத்தைப்பற்றி ஆவலுடன் கேட்டாள் விமலா சரோஜாவைப் பார்த்து.

'நாங்களும் அதைத்தான் சொல்கிறோம். இந்தமாதிரியான தகராறுகளெல்லாம் பின்னால் ஏற்பட்டு நாலு பேருடைய ஏச்சுக்கும் பேச்சுக்கும்' ஆளாகக்கூடாதென்றுதான் அந்த மாதிரி செய்தோம். என் தம்பியின் கலியாணம் பற்றிய பிரஸ்தாபம் கிளம்பியதுதான் தாமதம். நூற்றுக்கணக்கான ஜாதகங்களுடன் தரகர்கள் அப்பாவைத் 'தொணதொணக்க ஆரம்பித்துவிட்டார்கள். கடைசியில் ஒருதரகர் வந்து 'இந்திரன், சந்திரன், குபேரன், பொறுமைக்கும் குணத்துக்கும் பேர்போன குடும்பமாக்கும் அது, பெண்ணினுடைய குணத்துக்கும், புத்திசாலித்தனத்துக்கும் கேட்கவே வேண்டியதில்லை. எத்தனையோ வரன்கள் வந்தன; வந்துகொண்டுமிருக்கின்றன. ஆனால் நாலு பேரிடம் சொல்லிக் கொள்ளக் கூடிய குலமும் கோத்திரமும் உள்ள நல்ல பரம்பரை வேண்டுமென்கிறார்கள். அதற்குத் தகுந்த இடம் எவ்வளவுநாழி யோசித்துப் பார்த்தாலும் இதைத் தவிர வேறு தெரியவில்லை என்று தனக்குத் தெரிந்த அடைமொழிகளையெல்லாம் உபயோகித்துப் பேச ஆரம்பித்துவிட்டார்' என்றாள் சரோஜா.

'தரகர்களுக்குச் சொல்லித் தரவேண்டுமா? அப்புறம்?' என்றாள் பானு.

'முன் பின் தெரியாத இடம்தான். எதற்கும் பெண்ணைப் பார்த்துவிட்டு வருவோம் என்று பெண்ணைப்பார்க்கப் போனோம். 'ஆயிரங்காலத்துப் பயிர். அவசரப்பட்டு முடிவு செய்து விடாதே நன்றாகப்பார்த்துக்கொள்' என்றான் என் தம்பியின் கூட வந்த சிநேகிதன் ஒருவன் என் தம்பியைப் பார்த்து. கடைசியில் நம்ம பிள்ளையாண்டான் பெண் பார்த்து முடிவு செய்த கதையாகி விடப் போகிறது. அந்த சந்தேகத்தையும் தீர்த்துக்கொண்டு விடுவோம்' என்று அப்பாவின் காதோடு ரகசியமாய்ச் சொன்னார் மாமா. உடனே அப்பா 'உடலழகையும் குரலழகையும் பார்த்த மாதிரி நடையழகையும் பார்த்துவிடலாமே' என்றார். ஆனால் இந்த மாதிரி 'பச்சையாக'ச் சொல்லாமல் 'எங்களுக்கு தெய்வம் 'தேவாதிகளில்' நம்பிக்கை உண்டு. அதோ அந்த லட்சுமி படத்தையும், ராமன் படத்தையும் போய் ஸேவித்துவிட்டு வா' என்று கொஞ்சம் நாசூக்கான பாஷையில் சொல்லி மாமா ஞாபகப்படுத்தி அந்த நடையழகைப் பார்த்திருக்கலாம். அதுவே தவிர இதில் தவறு என்னவாம்' என்றாள் சரோஜா.

'அப்படியானால் நடக்கச் சொல்லியேதான்பார்த்துவிட்டு வந்திருக்கிறீர்கள்? அதுதான் சேஷிப்பாட்டி சொன்னாள். இல்லாமல் ஒரு விஷயம் இவ்வளவு தூரம் பரவுமா?' என்றாள் பானு.

'சரோஜா சொல்கிறமாதிரி எதையும் அரைகுறையாய்க் கேட்டு ஒருமுடிவுக்கு வருவதைவிட விஷயம் முழுவதையும் நன்றாகத் தெரிந்துகொண்டுதான் எதிலும் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்பது இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில்லவோ தெரிகிறது! சரோஜா சொன்னபிறகு இதில் தவறு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. முன்பெல்லாம் என்றால் ஒருவருக்கொருவர் முன்பின்பழக்கப்பட்ட இடங்களில் பந்துக்களில் சம்பந்தம் செய்வார்கள். ஒருவருக்கொருவரை நன்றாகத் தெரியும். அதனால் பின்னிட்டு தகராறு ஒன்றும் வராது. இப்பொழுதெல்லாம் முன் பின் தெரியாத இடங்களில் தரகர்கள் வார்த்தையை நம்பிப் புது சம்மந்தம் செய்வதினால் எல்லாவற்றையும் கொஞ்சம் தீர யோசித்துத்தான் செய்யவேண்டியதாயிருக்கிறது; என்றாள் ருக்குவின் மாமியார்.

[சென்றவாரத் தொடர்ச்சி]

★

"வெந்நீர் சரியாயிருக்கும்மா, ஸீதாலக்ஷிமி!" என்ருள் மீனுக்ஷியம்மாள்.

"ஓஹோ..." என்பதுபோல நின்ருள் ஸீதாலக்ஷ்மி. பிறகு, "மாப்பிள்ளையைப் பார்த்தேளா மாமி! கொஞ்சம் நிறம் மட்டுன்னு லும், நல்ல கம்பீரம், முகக் குறுகுறுப்பு! இல்லையா? நல்லகுணம்! ரொம்பக் கெட்டிக்காரராம்! படித்தபோதும், இப்போ வேலையிலேயும்!...ஏதோ பத்மாவோட அதிஷ்டம்தான்—"

"சந்தேகமா என்ன?... ராஜா வாட்டமாத்தான் இருக்கான் மாப்பிள்ளை!... பார்த்துட்டுதான் உள்ளே வந்தேன் நானும்!" என்ருள் மீனுக்ஷியம்மாள்.

"பேரும் ராஜா தான்!" என்ருள் ஸீதாலக்ஷ்மி.

"அப்படியா?...மாப்பிள்ளை, மாப்பிள்ளைன்னே சொல்லிண்டு இருந்தேன், பேர் தெரியல்லே! கேக்கவும் எனக்குத் தோணலே! என்ன ராஜா?... நடராஜனு, தியாகராஜனு—"

"தேவலையே மாமி நீங்க! முதல்லேயே சரியான பேர் சொல்லிவிட்டேளே! நடராஜன்தான்!... சுருக்கி வைச்சுண்டு இருக்கிற பேரு ராஜனும்!" என்ருள் ஸீதாலக்ஷ்மி. மாப்பிள்ளையின் பெயர்களை உச்சரிக்கையிலே மாத்திரம் குரல் தாழ்ந்தது, முகத்தில் லேசாக நகை படர்ந்தது.

"என் பிள்ளைபேரும் நடராஜன் தான்! அதான் என் வாயிலே சட்டுன்னு அந்தப் பேர் வந்தது!" என்ருள் மீனுக்ஷியம்மாள்.

"பத்மா சொல்றது சரிதான்! இந்த மாமி எல்லாத்துக்கும் தன்னையும் தன்னைப்பத்தியும் செல்லிக்க ஆரம்பிச்சுட்டா!" என்று தோன்றியதுபோலும் ஸீதாலக்ஷ்மிக்கு. ஒருமாதிரி மௌனமாக அங்கிருந்து வெளிப்பட்டாள்.

சாமிநாசன் மாடிப்படிகளிலிருந்து இறங்கி வந்துகொண்டிருந்தார், 'அவரைக் குளிக்க வரச்சொல்லுங்கோ!" என்ருள் ஸீதாலக்ஷ்மி.

மாப்பிள்ளை ராஜன் குளிப்பதற்கு மாடியிலிருந்து இறங்கி வந்தான். அரையிலே வேஷ்டி, தோள் மீதினின்று முதுகிலும் மார்பிலுமாகத் தொங்கும் 'டர்க்கிஷ்' துண்டு, கையில் சோப்புப் பெட்டி இவற்றுடன் வெகு எளிமையான, கம்பீரமான தோற்றத்துடன் இருந்தான். சரசரவென சமையற் கட்டின் வழியாகப் போகத் தொடங்கினுன்.

"மாப்பிள்ளை! வாருங்கோ!" என்ற குரல் கேட்டு தலை நிமிர்ந்தான் ராஜன்.

இப்போது, வந்து பதினைந்து நிமிஷங்களுக்குப் பின், தன்னை வரவேற்கும் குரலைக் கேட்டு, குரலுக்கு உரிய உருவத்தைக் கண்டு ஒரு வியப்புக் குறி தெறித்தது அவன் கண்களிலே,

"வேறே யாரும்கூட வரவில்லையா? அம்மா அப்பா எல்லாம் வரச் சௌகரியப்படலைன்னு, மாப்பிள்ளைத் தோழனுவது வர வேண்டாமா?..."

"யாரும் வரத்துக்கு இல்லே!" இந்த ஒரே பேச்சுப் பேசிவிட்டு, விடுவிடென்று முன் நடந்தான் ராஜன்.

"ஏன்? நான் ஒருத்தனுய் வந்து குஷியாய் இருப்பது பிடிக்கல்லையா இந்தக் கிழத்திற்கு?" என்று எண்ணும் தோரணையில், பேச்சுப் பிடியினின்று விடுபட்டுக் கொண்டான்.

புழக்கடைப் பக்கம் மாப்பிள்ளை போவதைக் கவனித்து அவனுக்கு வெந்நீர் அறையைக் காட்டணுமென்று, மாப்பிள்ளைக்குப் பின்னுலேயே மெதுவாகத் தொடர்ந்து வந்துகொண்டிருந்த ஸீதாலக்ஷ்மி, மாப்பிள்ளை சமையலறையில் நின்ற இரண்டு நிமிஷங்களையும் கொதிக்கும் மனதுடன் கடத்தினுள். ராஜன் விடுவிடென நடை தொடர்ந்ததும், அவளும் தொடர்ந்தாள். மீனுக்ஷியம்மாள் அருகே சிறிது நின்றுவிட்டு, "மாமி!...ஏதாவது அசந்தர்ப்பமா கேள்வியும் பேச்சும் பேசாதீங்கோ! நான்தான் சொல்லியிருக்கேனே 'அவருக்கு யாரும் கிடையாதுன்னு! இதென்ன அசட்டு உபசாரக் கேள்வி? ஏதாவது கேட்கணுமேன்னு இப்படிக் கேட்கணுமா? நீங்க குசலம் விசாரிக்கணுங்கிறது தான் இப்போ அவ்வளவு முக்கியமா போச்சா? நீங்கதான் அவரைப் பார்த்தது இல்லையே, கேட்கணும்னு என்ன கட்

டாயம் வந்தது?" என்று தாழ்த்திய குரலில் சரமாரியாகக் கேட்டுவிட்டு எச்சரிக்கை செய்துவிட்டு, புழக்கடையில் மாப்பிள்ளை வெந்நீர் அறைக்காக நாற்புறமும் நோக்குவதைக் கண்டு, பரபரப்புடன் விரைந்தாள்.

"இதோ, இதான் வெந்நீர் உள்!............ ஜலம் மொண்டு வைத்திருக்கு!" என்று சொல்லி வந்தாள்.

கூடத்தில் உட்கார்ந்திருக்கும் கணவரிடம் வந்தாள் ஸீதாலக்ஷ்மி.

"இந்தப் பெண்ணும் ஒரு அசடாயிடுத்து, ஜலம் பார்த்துத் தரப்போகமாட்டேங்கறது! சமையற்கார மாமியும் என்னவோ அசட்டுப் பிசட்டுன்னு ஆயிட்டா மாப்பிள்ளை வந்ததும்! கடைசியிலே நம்ப என்ன ஜாக்கிரதையாய் இருந்தாலும், அசட்டுத்தனம் நடத்துடறது!" என்றுள் சலிப்புடன்.

மீனாக்ஷியம்மாள் எட்டிப் பார்த்து விட்டுத் தலையை உள்ளிழுத்துக் கொண்டதைக் கவனித்துவிட்டு, மேலே பேசாமல், பெண் பத்மாவைத் தேடிக்கொண்டு போனாள்.

மாப்பிள்ளை குளித்து விட்டுத் திரும்புகையி மீனாக்ஷியம்மாள் குரல் கேட்டது.

"அந்தத் துண்டை கசக்கி உலர்த்திடறேன், வச்சுடேனப்பா! டிபன் ஆயிடுத்து, சீக்கிரம் வந்துடு!" என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

இதைக் கவனித்தாலும் கவனிக்காததுபோல வந்துகொண்டிருந்த ராஜனுக்கு சீதாலக்ஷ்மி எதிர்ப்பட்டாள்.

"என்னமோ அசடு, பேசுகிறது!" என்பதுபோல இருவரும் பார்த்துக்கொள்ள நேர்ந்தது.

"நீங்க மாடிக்குப் போங்கோ! டிபன் கொண்டுவரச்சொல்றேன்!" என்று அரைகுறைப் புன்முறுவலுடன் மாப்பிள்ளைக்குக் கூறிவிட்டு, வழிவிட்டு நின்றாள். மாடிப் படிகளில் மாப்பிள்ளை ஏறி மறைந்ததும், மீனாக்ஷி மாமியிடம் வந்தாள், ஸீதாலக்ஷ்மி.

"மாமி! என்ன இது? தலை தீபாவளி நடத்திக் கொடுக்க உங்களைவிட எனக்கே தெரியும்போலிருக்கே! டிபனுக்காக, மாப்பிள்ளையை சமையலுள்ளே வரச் சொல்லி உட்கார்த்தறதா? அழகுதான், போங்கோ! நாசூக்கா டிபனை, தட்டுலே வச்சு அனுப்பறது இல்லையா? நான்கூட சொல்லியிருக்கேனே!" என்று கடிந்து கேட்டாள்.

"என்னமோ, இட்டிலியும் சட்டினியும் டிபன் ஆச்சே! இங்கே வந்து சாப்பிட்டா வேணுங்கிறது போட செளகரியமாவும், பாந்தமாவும் இருக்கும்போல தோணித்து, சொன்னேன்" என்று சொன்னாள் மீனாக்ஷியம்மாள்.

"சரியான பேச்சுத்தான்" என்று மனத்துள் தோன்றினாலும், ஸீதாலக்ஷ்மிக்கும், "மாமிக்குத் தெரிந்தது நாசூக்கு அவ்வளவுதான்!" என்ற எண்ணமும் எழுவே, "அது சரிதான் மாமி! ஆனுக்கூட கொஞ்சம் தோரணையாய் இருக்கிறவா. சிறு வயசு! நல்ல பீங்கான் தட்டுலே இரண்டு இட்டிலி கொண்டுபோய்க் கொடுத்தாலும், அதுதான் வயிறு நிரம்பின மாதிரி இருக்கும்! அதுக்குத்தான் சொல்றது!" என்று பொதுவாகச் சொல்லிவிட்டு,

அழகிய வேலைப்பாடுள்ள ஒரு பீங்கான் தட்டை எடுத்து, டிபன் எடுத்து வைத்தாள். பத்மாவைத் தேடிக்கொண்டு போய், அவள் கையில் கொடுத்துவிட்டு, மாடிக்கு அனுப்பி வைத்தாள்'

அதற்கப்புறம் பலசமயங்களிலும் சீதாலக்ஷ்மி மீனாக்ஷியம்மாளிடம் சிறிது அதிகாரத் தொனியுடனே பேசினாள்; காரியம் ஏவினாள். மாப்பிள்ளை வந்திருக்கும் சமயம் சமையற்கார மாமி எப்போதையும் விட மந்தமாகவும், அதிகப் பிரசங்கித்தனமாகவும் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டதாகத் தோன்றவே, "ரொம்ப இடங்கொடுத்து விடக்கூடாது" என்ற முன்னெச்சரிக்கையே தான் காரணம்!

விடியற்காலையில்எழுந்துமங்களஸ்னானங்கள் துவங்குமுன், "மாமி! எல்லாருக்கும் டக்டக்னு ஜலம் பார்த்து வச்சுடுங்கோ! குழந்தைகளுக்கும் தேய்ச்சுடுங்கோ எண்ணெய்! கொஞ்சம் பரபரன்னு கவனிச்சுக்கோங்கோ!" என்றாள் சீதாலக்ஷ்மி.

"ஆகட்டும்மா! பேஷா எண்ணெய் தேய்ச்சுடறேன்! ...பாரு வெந்நீர் தவலையிலே மாப்பிள்ளை பணம் போடணும்! அது ஜலம் பார்த்து இறைச்சுத்தரவாளுக்குச் சேரும்னு சொல்லுவா! வழக்கம்!" என்றாள் மீனாக்ஷியம்மாள்.

"ஓஹோ! ஆமாம்போலிருக்கு! சரி; சொல்றேன்! ஏன், நாங்களே நாலோ ஐந்தோ போட்டுட்டாப் போறது!......மாப்பிள்ளை கிட்ட இதை எப்படிச் சொல்றது!... அவர் ஏதானும் நினைச்சுப்பார்!... நான் போட்டுடறேன்!' என்றாள் ஸ்ரீதாலக்ஷ்மி.

"ஊஹூம், அதெல்லாம் கூடாது!...மாப்பிள்ளையே தான் வந்து போட்டுட்டுப் போகணும்! அவர் கைப் பணம்தான் விழணும் நான் பணத்துக்குச் சொல்லலை! சம்பிரதாயத்துக்குத்தான் சொல்றேன்!...உனக்குச் சொல்ல கூச்சமாயிருந்தால், நானே சொல்றேன் இரு, எனக்கென்ன சங்கோஜம்?" என்றாள் மீனாக்ஷியம்மாள்.

"வேண்டாம்!நானே சொல்லிடறேன். இருங்கோ!" என்று சொன்னாள் ஸ்ரீதாலக்ஷ்மி.

"ஆமாம், உங்களுக்கு கேட்க சங்கோசமா என்ன தெரியுமே! பண விஷயமான சம்பிரதாயத்தை மட்டும் கட்டாயமாச் சொல்லத்தெரியும், பேச முடியும்! சந்தேகம்வேறேயா!" என்ற உட்பொருமலுடனே தான் சொன்னாள்.

சாமிநாதன் மூலம் மாப்பிள்ளைக்குச் சொன்னாள், 'வழக்கம், "ஒரு ரூபாயோ, இரண்டு ரூபாயோ போடச் சொல்லுங்கோ!... அவர் கைப்பணம், அதிகம் சொல்லிவிடாதேங்கோ!" என்றாள்.

'ஸ்ரீதா! மாப்பிள்ளை ஐந்து ரூபாய் போடுறாராம்!..." என்று சொல்லிக்கொண்டே மாப்பிள்ளை பின்தொடர வந்தார், சாமிநாதன்.

"நோட்டாயிருக்குன்னு ஐந்தாப் போடணும்னு சொல்லியிருக்கப் போறார், பத்திரம்! வெந்நீர்லே போடணும் பணம்!" என்று கூறிச் சிரித்தாள் ஸ்ரீதாலக்ஷ்மி.

"அடடா, நிஜந்தான்! மாமி சொல்றது சரிதான்! ரூபா நோட்டு தானே கொண்டுவரேன், இதோ என்று காட்டிவிட்டு, "வெள்ளி ரூபா இல்லையே! சில்லரை கொடுங்கோ!" என்று மாமனாரிடம் நோட்டை நீட்டினான் ராஜன்.

"இருக்கா, ஸ்ரீதா?" என்று மனைவியைக் கேட்டார் சாமிநாதன். "பார்க்கறேன்' என்று உள்ளே போகக் கிளம்பினாள் ஸ்ரீதாலக்ஷ்மி.

'என்னண்டை யிருக்கு தரேன்!' என்று முன் வந்தாள் மீனாக்ஷியம்மாள்.

"எப்படியும் உங்களுக்குச் சேரறதுதானே மாமி! இப்படியே வச்சுண்டுடுங்கோளேன் நோட்டை! வெந்நீர்த் தவலையிலே போடாட்டா என்ன?" என்றார் சாமிநாதன்.

"அதென்ன அப்படிச் சொல்றேள்! நான் சம்பிரதாயத்துக்குன்னா சொல்கிறேன்! பணத்துக்கா சொல்றேன்?" எனவெறெடுத்துக் கேட்டாள் மீனாக்ஷியம்மாள். அந்தக் குரலில் சிலிர்ப்பும் கலவரமும் கண்டார் சாமிநாதன்.

"ஓஹோ, அப்போ, சில்லரையா அண்டாவிலே போடத்தான் வேணும்!" என்றார் சாமிநாதன் உடனே.

ஐந்து ரூபா நாணயங்களும், நோட்டும் இடம் மாறின; கைகள் மாறின. வெந்நீர்த் தவலைக்குள் ரூபா நாணயங்கள் விழுந்து நீருக்கடியில் தங்கின.

மணையில் ராஜனும் பத்மாவும் அமர்ந்து ஆரத்தி பெற்றுகொண்டனர் புது உடைகள் சலசலக்க மனமும் கலகலத்து, முகமும் பளபளக்க, சாமிநாதனையும், ஸ்ரீதாலக்ஷ்மியையும் வணங்கினார்கள்.

"மாமிக்கும் பண்ணுங்கோ," என்றார் சாமிநாதன். ராஜன் உடனே போனான், வணங்கினான். பத்மாவும் குனிந்து வணங்கி விட்டு எழுந்தாள்.

மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் வாய் நிறைய ஆசிகூறி வாழ்த்தினாள் மீனாக்ஷியம்மாள்.

அவள் ஆசிகூறிய பாணி கண்டு கலகலவென நகையொலி எழுந்தது அந்த இடத்திலே.

"பெரியவர்கள் ஆசீர்வாதம் பண்ணுகிறதை கேட்கவே ஆசையாயிருக்கும்!" என்றான் மாப்பிள்ளை ராஜன்.

மாப்பிள்ளையின் வாயினின்று உதிர்ந்த வார்த்தைகளைக் கேட்டதும், ஏகத்தாளமான சிரிப்பொலி அடங்கி விட்டது, 'புஸ்'ஸென்று சொத்தை வாணம்போல.

* * * *

"அம்மா, ஸ்ரீதாலக்ஷ்மி! நான் இவாளோடயே காசிக்குப் போறேன்! அனுப்பிச்சுக் குடுத்துடு என்னை!" என்றாள் மீனாக்ஷியம்மாள்.

"இதென்ன மாமி, திடீர்னு இந்த ஏற்பாடு? ஏன்? ஒரே பரபரப்பா ஆயிட்டேள்?" என்று கேட்டாள் ஸ்ரீதாலக்ஷ்மி, வியப்புடன்.

"எனக்கு அப்புறம் துணை சேருவது கஷ்டம்மா! ஏதோ கையிலேயும் சொற்ப பணம் சேர்ந்திருக்கு!

போயிடறேன்! காரணமும்தான் சொன்னேனம்மா! அவர் கிட்ட சொல்லி ஏற்பாடு பண்ணச் சொல்லிடு!" என்றாள் மீனாக்ஷியம்மாள், கண்டிப்புடன்.

"சரி, மாமி! உங்கள் இஷ்டம்! வற்புறுத்திச் சொல்ல எனக்கும் இஷ்டமில்லே!" என்றாள் ஸீதாலக்ஷ்மி.

கணவரிடம் அன்று சொல்லிவிட்டாள் சமையற்கார அம்மாளின் தீர்மானத்தை.

"கட்டாயம் போகணுமாம், ராமசாமி அய்யரோட குடும்பத்தோடே! நானும் சொல்லியாச்சு! என்னமோ! தீபாவளியானது முதற்கொண்டு ஒரு மாதிரிதான் இருக்கா! என்னிக்கும், எப்பவும் நான் கொஞ்சங்கூட கடுத்துண்டது இல்லே! தீபாவளியின்போதுதான், எனக்கு இருந்த கவலையிலே அப்பப்போ கொஞ்சம் கண்டிப்பாயிருந்துட்டேன்! அதான் கோபமோ, என்னமோ! இதுக்கெல்லாம் 'துஸ்'ஸுன்னு கோபம். வருத்தம் வந்தால் என்ன செய்யறது! போகணும்னு தோணினப்புறம் நிறுத்தி வைக்கக்கூடாது, நிறுத்தவும் முடியாது! நல்லதனமாவே விட்டுடலாம்!" என்றாள் ஸீதாலக்ஷ்மி. இன்னும் ஏதோ சொன்னாள்.

"புருஷன் செத்துப் போனது இரண்டு வருஷம் முந்தின்னா, இப்போ இந்த அலங்கோலம் பண்ணிண்டாகணுமா?...என்னமோ—உம், ஏற்பாடு பண்ணிடறேன், அவா துணையிலே புறப்படறதுக்கு. சொல்லு!" என்றார் சாமிநாதன்.

ஏற்பாடு செய்தார் அவர். ராமசாமி அய்யர் வீட்டினின்று காசிப் படிப்புக்குப் போகும் பையனுடன், அவனுடைய அத்தையும் புறப்பட்டாள். அவ்விருவருடன் புறப்பட்டாள் மீனாக்ஷியம்மாள்,

"பத்மா, போய் வரேனம்மா! நீ புக்காம் போனப்புறம் எனக்கு வீட்டிலே இருப்பே கொள்ளாது போல தோணித்து! அப்புறம் துணைன்னா கிடக்குமா? அதுக்குத்தான் முந்தியே புறப்பட்டுடறேன்! தீர்க்காயுசுடன், தீர்க்க சுமங்கலியாயிரு! போய் வரேம்மா ஸீதாலக்ஷ்மி!" என்று சொல்லிவிட்டு, கரகரக்கும் தொண்டை மேலே பேசவொட்டாமல் செய்ய, ஊருக்குப் புறப்பட்டாள் மீனாக்ஷியம்மாள்.

"முடியுமானால், பாபுவோட அத்தை திரும்பி வரபோதே நீங்களும் வந்துடப் பாருங்கோ, மாமி!" என்று கூறி விடை கொடுத்தார் சாமிநாதன்.

"விசுவேசுவரன் கிருபை!" என்று பதிலிறுத்தாள் மீனாக்ஷியம்மாள். வண்டியேறினாள்.

தற்கால ரயில்வசதியுடன்தான் காசிபோனாள் மீனாக்ஷியம்மாள் என்பதை அறிவார்கள் சாமிநாதனும், ஸீதாலக்ஷ்மியும். எனினும் முற்கால காசிப் பிரயாணிகளைப் போலத்தான் போனாளோ என்று ஐயுறும்படி நாட்கள், வாரங்களாகி கடந்துபோயின. மீனாக்ஷியம்மாளிடமிருந்து கடிதமே காணோம்.

அவ்வூரிலிருந்து காசித் துணை போன பையன் பாபுவும் அவனுடைய அத்தையும், தமிழ் நாட்டிலிருந்து புறப்பட்டு, இவர்களிருக்கும் ஊரில் உறவினர் இருப்பதால் இறங்கிவிட்டுப் பயணம் தொடர்ந்தவர்கள். ஆதலால் உள்ளூர் நண்பர் ராமசாமி வீட்டார் மூலமும் தகவல் தெரியவில்லை.

"பாருங்கோ மீனாக்ஷியம்மாவின் மனசை! கட்டாயம் கடிதம்போடுவாள் என்றுதான் நினைச்சோம். போனாள்! போட்டக்காணோம்! நாம்ப எந்தவிலாஸத்துக்கு எழுதுவோம்!...அவ்வளவுதான்.விட்டுது பந்தம்!...விட்டுப்போச்சு அப்பவே!. அப்படியும் மனசு கேட்கல்லே!" என்றாள் ஸீதாலக்ஷ்மி கணவரிடம்.

"அப்பா! என்னை ஒருநாள் கேட்டாள், "அக்காவும் அத்திம்பேரும் இருக்கிற போட்டே இன்னும் உள்ளே இருக்கான்னு!" என்று சொன்னாள் லலிதா.

'பாருங்களேன்! ஒளிவு மறைவு என்ன இதுலே! அவனைக் கேட்கிறது என்ன! நம்மைக்கேட்டால் என்ன சொல்விடுவோம்! இருந்தால் இருக்குங்கிறோம்' இல்லைன்னா, இல்லேங்கறோம்!" என்றாள் ஸீதாலக்ஷ்மி.

"ஆனால் போட்டோ காப்பி தருவோமா; சமையற்காரிக்கு எதற்குன்னு சொல்லுவோம்! அதான் காப்பி இருக்கா இல்லையான்னு கேட்டுண்டு, அப்புறம நம்மைக் கேட்டுப் பார்க்கலாம்னு அவளைக் கேட்டிருப்பா மாமி!" என்றார் சாமிநாதன்.

"அதென்னமோ, சயற்கார மாமியா லட்சணமா இருக்கல்லே அந்தமாமி! ரொம்ப மரியதை வச்சு வச்சு..." என்று ஆரம்பித்தாள் பத்மா.

"முதல்லே பிடிச்சே அந்தமாமி சமையற் காரியா லட்சணமாவே தோணலே! அதான் எனக்கு அந்த மாமின்னா மரியாதை!" என்றார் சாமிநாதன்.

"அதுவாஸ்தவந்தான்! ஆனா அப்புறம், அதான் தீபாவளிக்கப்புறம் மாறிடுத்து சுபாவம்! கொஞ்சம் அன்னிக்கு 'அதாரிடி'யா நடந்துண்டேனென்று இவ்வளவு சுணக்கமான்னு எனக்கும் அப்புறம் ஒருமாதிரி தோணிடுத்து!... சகஜபாவம் இருக்கல்லே!......." என்றாள் சீதாலக்ஷ்மி.

எனினும் எல்லோரும், ஒரு தகவலும் காணோம் மாமியைப்பற்றி' என்ற நினைப்பு எழுந்தபோது, சிறிது வேதனைப்பட்டார்கள்.

"மாமா! இதோ, எங்காத்து விலாசத்துக்கு கடிதம் வந்திருக்கு!" என்று ஒரு கார்டு கொணர்ந்தான் ராமசாமி வீட்டாரின் பையன்,

காசிக்குப போன மீனாக்ஷிமாமி கங்கையில் விழுந்து உயிர் நீத்தாள். வேணுமென்று 'விரும்பியேதான் நதியோடு போனாளோ என்று சந்தேகப்படத் தோன்றுகிறது, ஏனென்றால்' இறப்பதற்கு இரண்டு நாட்களுக்குமுன்புதான் ஒரு "கங்கைத்தாண்டி" பத்து ரூபாய்க்கு வாங்கினாளாம். "என் பிள்ளை நாட்டுப் பெண்ணுக்கு இதைச் சேர்ப்பித்துவிடணும்' என்று கொடுத்தாளாம்.

பிள்ளையும் நாட்டுப்பெண்ணும் இருக்க இங்கே காசியிலேயே

இருப்பானேன் என்று கேள்வி எழுந்ததற்கு விசித்திரமான பதில் சொன்னாளாம்.

சிறுவயதில், 15, 16, வயதில் வீட்டில் பெற்றோரிடம் கோபித்துக்கொண்டு ஓடின பிள்ளை, நல்ல நிலையில், பெரிய மரியாதையான குடும்பத்தில் மாப்பிள்ளையாக இருப்பதைப் பார்த்துக் கண்ணும் மனமும் குளிர்ந்துவிட்டாளாம்.

நல்ல நிலையிலே யிருக்கும் தாயாரே பிள்ளைக்கும் நாட்டுப் பெண்ணுக்குமிடையே நீடு நிலைத்திருக்க முடியாமற் போகிறது. அப்படியிருக்க நாட்டுப்பெண்ணின் பிறந்தகத்தில் ஊழியம் செய்த தான், எந்த முகத்துடன் பிள்ளை, நாட்டுப் பெண் இவர்களிடம் நிலைத்திருக்க முடியும்? ஆசைப்பட நியாயம் ஏது?

இப்படித்தான் சொன்னாளாம் மீனாக்ஷியம்மாள்.

"அவன் சம்பாத்தியத்திலிருந்து எனக்கு வந்தது ஐந்து ரூபாய் அவன் தொட்டுக் கொடுத்துவிட்டது. மற்றும் ஒரு ஐந்து ரூபாய் இதோ ஆசை தீர, அவனுடைய கடைசி காணிக்கைக்கு, நானும் என் கடைசி காணிக்கையாக இந்த புனித நீர்ச் செம்பு தர விரும்புகிறேன்'' என்று கூறி முடித்தாளாம். அடைத்து அடைத்துக் கார்டில் எழுதியிருந்த இந்த விவரம் படித்து அறிவதற்குள், மூச்சடைத்துப் போகும்போல இருந்தது அனைவருக்கும்.

"அட, பாவமே!'' "என்ன கஷ்டம்!'' "என்ன அநியாயம்?'' மகா அதிசயம்!'' என்றெல்லாம் பொருமினார்கள்.

"அவருடைய அம்மா!'' என்ற நினைப்பு, என்றைக்குமே தன் செருக்குக்கும், வாய்த்துடுக்குக்கும் ஒரு சாட்டையடி கொடுக்கக் கூடியது என்று பத்மா உணர்ந்தாள்.

"சம்பந்திகிடையாது. இவளுக்கு மாமியார் மாமனார் இல்லைன்று சந்தோஷப்பட்டுக்கிற மாதிரி எத்தனை தடவை சொன்னேனே! என்ன வேதனைப்பட்டிருப்பாள்! எப்போ தெரிஞ்சுதோ அவர் தன்

தொழிலும் தோற்றமும்.

வழுக்கையை ஒழிக்கும் தைல வியாபாரி !

பிள்ளைன்று!'' என்று அங்கலாய்த்துஅரற்றினாள் சீதாலக்ஷ்மி.

"தீபாவளிக்கப்புறம் தானே ஒரு திவுசாயிருந்ததாகச் சொன்னே? தீபாவளியின் போதுதான் தெரிஞ்சிருக்கும்!'' என்றார் சாமிநாதன், ஆலை அவருக்கும், "பெற்றமனம் எப்படித் துடித்ததோ?'' என்ற வேதனைவாட்டியது,

"எப்படிப்பா தெரிஞ்சுக்கல்லே அவா?'' என்றனர் குழந்தைகள். பெரியவர்கள் தான் மாறிவிட மாட்டார்கள். சிறுவர்கள் நெடு நெடுவென வளர்ந்து மாறிப் போவார்கள். சிறுவர்கள் பெரியவர்களை அடையாளங் கண்டு கொள்வதுதான் எளிது.

ஆனால், பாசம் பிள்ளையைப் பற்றிய நினைப்பு, நினைவுக் குறிகள், இவைதான் பிள்ளையைக் கண்டுபிடிக்க மாமியை உதவியிருக்கும். மாமி வருத்தத்திலேயும், உழைப்பினாலும் மாறியிருப்பாள் நிறைய. அதனால்தான் மாப்பிள்ளை அம்மாவைக்கண்டுகொண்டிருக்க முடிந்திராது. இதுதான் காரணம் கூறினார் சாமிநாதன்.

"ஓடிப்போன பிள்ளை திரும்பி வருவதற்குத்தான், 'மகா' பிள்ளையாகி அவனை வரவேற்று, உபசாரமாக நடத்துகிறோம் என்றுசொன்னேனே, சீதா; இப்போ எப்படிச் சொல்றது? நமக்கு மாப்பிள்ளையா, மீனாக்ஷி மாமிக்கு 'மகா' பிள்ளையா?'' என்றார் மனைவியைப் பார்த்து. கிலேசமுற்றிருந்த முகத்திலும் லேசான புன்சிரிப்பு கோடிட்டோடியது.

"பாவம், மாப்பிள்ளைக்குத் தெரிந்தால்...'' என்றாள் சீதாலக்ஷ்மி.

தெரிந்தது உண்மை, ராஜனுக்கு. வந்தது பரிசு செம்பு, அவன் கைக்கு.

பூஜைப் பீடத்திலே வீற்றது அன்னையின் பரிசு அன்னையே வீற்றாள் அவன் உள்ளத்திலே.

புனித நீரை அடக்கிக்கொண்டிருந்த செம்புபோலவே, அவன் உள்ளமும், தாயுடன் ஏற்பட்ட இடைச் சந்திப்பையும், அவளுடைய கடைக் காணிக்கையையும் அடக்கிப் பதித்துக்கொண்டது

தன்னுள்ளே கங்கை அகண்டமாக ஓடிப் பிரவகித்தாலும் தீபாவளி தினத்தன்று எங்கெங்கும் யாரும் கங்கா ஸ்னானம் செய்து பெருமைகொள்ள வைக்கும் காசியின் பெருமை, ராஜனின் மனத்தூய்மைக்கும் பெருமைக்கும் ஒக்கும்.

"அம்மாவை நினைத்து விட்டால் கண்களிலிருந்து கங்கை பெருகி, உடலையும் மனதையும் ஸ்னானம் செய்வித்து விடுகிறதே!'' என்று சொல்கிறான் நடராஜன்.

"கங்காஸ்னானம் ஆச்சா?'' என்று தீபாவளிக் குசலம் விசாரிப்பவர்களுக்கும் தான் இந்தப் பதில்!

அவன் வாழ்க்கையிலே, தீபாவளி நாள், அவன் மன நிம்மதியைச் சுட்டுக் கொளுத்திடும் நாள்.

இந்தப் பட்டாசுக்கு ஒலியுமுண்டு, ஒளியுமுண்டு, ஆனால் இந்தப் பட்டாசுக்குத் தீ மூளுவதை யாரும் விரும்புவதில்லை! அவன் மனம் வெடித்துக் குமுறிக் குமைவதை யாரும் விரும்புவதில்லை.

வேண்டாத நல்ல பட்டாசு வெடிகுண்டுதான் அல்லவோ?

26

காளத்தி-வித்தும் விளைவுகளும்

★

தமிழ் வேடரான கண்ணப்பரின் கதை, தமிழர்களோடு ஆந்திரர்களையும் வசீகரித்ததுபோல் வடமொழியாளர்களையும் வசீகரித்தது. அத்வைத ஞான மார்க்கத்தை நிலைநிறுத்திய ஸ்ரீசங்கராச்சாரியாரும் கண்ணப்பரைப் போற்றிப் புகழ்ந்திருக்கிறார். ஏன்? பதினெட்டுப் புராணங்களில் ஒன்றான சிவபுராணத்திலே—வியாஸர் செய்ததாகச் சொல்லப்படும் அந்தப் புராணத்திலேயே—ஸ்ரீ காளஹஸ்தி ஸ்தல மஹாத்மியமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. காளஹஸ்தி என்ற காளத்தியின் பெருமை விசேஷமாய்க் கண்ணப்ப நாயனாரின் பெருமைதான்.

மலைப் பயிர்

தமிழ் நாட்டிலோ காளத்தி வேடரை அறியாதார் யார்? சிவநேசர் திருக்கூட்டத் தலைவரான திருஞான சம்பந்தர் காளத்தி மலைக்கும் கண்ணப்பர் கதைக்கும் முள்ள தொடர்பினை நன்கறிந்தது.

வாய்கலசம் ஆக வழி-
பாடுசெயும் வேடன், மலர்
ஆகு நயனம்,
காய்கணையி னால் இடந்(து)
ஈசனடி கூடு காளத்தி மலையே

[நயனம்-கண். காய்-வருத்துகிற. கணை—அம்பு. இடந்து—தோண்டி.]

என்று மலைச்சிறப்புப் பாடியிருக்கிறார் சம்பந்தர் காலமாகிய ஏழாம் நூற்றாண்டிலே-அதாவது பெரிய புராணம் பிறப்பதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்பே, ஆதி சங்கரர் காலத்திற்கும் நூறு ஆண்டுகளுக்கு முன்பே-கண்ணப்பர் கதை காளத்தி மலையோடு இரண்டறக் கலந்து பிரசித்தமாக இருந்திருக்கவேண்டும்.

வேடர் பிரானின் கல்லாக் கலை

தேவாரம் பாடிய மூவருள் சம்பந்தர் காலத்தினர் அப்பர் என்ற திருநாவுக்கரசர். இவர்களுக்குப் பின்பு தோன்றிய சுந்தரர், கண்ணப்பரை 63 நாயன்மார்களில் ஒருவராகப் போற்றும் போது,

கலை மலிந்த சீர் நம்பி
கண்ணப்பர்க்(கு) அடியேன்

[நம்பி—ஆடவர்களில் சிறந்தவன்]

என்று வழிபடுகிறார். கல்வி மணமே வீசப்பெறாத கண்ணப்பரைக் 'கலைமலிந்த சீர் நம்பி' என்று கூறியிருப்பதைப் பாருங்கள். கடவுள்—அறிவே அறிவு, கடவுளைக் கற்பதே கல்வி, கலை என்ற கொள்கையோடு கூடிய பக்த சிரோமணியான சுந்தரர் இப்படி வழிபடுவதில் அதிசயமில்லை. சுத்த அறிவான சிவத்தோடு ஊன், உணர்வு, உயிர் எல்லாம் ஒன்றுபட்டு ஒழுகக் கற்றுக்கொண்டாரல்லவா கண்ணப்பர்? இந்தக் கலையை, இந்த அன்புக் கல்வியை எத்தனை ஜன்மமாகக் கற்றுவந்தாரோ?—என்பது சுந்தரமூர்த்தி குறிப்பு.

மாணிக்கவாசக சுவாமிகள் என்ற மணிவாசகப்பெருமான் ஓதாதுணர்ந்த இந்தக் கண்ணப்பக் கலைஞரின் 'கல்லாத கலை'யாகிய அன்புக் கலையை,

கண்ணப்பன் ஒப்பதோர்
அன்பின்மை கண்ட பின்

என்று வியந்து பாராட்டுகிறார். சிவபக்தி ரூபமான அன்பிற்கு மேல் எல்லை கண்ணப்பருடைய மகத்தான அன்பு என்பது உள்ளன்போடு உருகி உருகித் திருவாசகம் பாடிய பெரியாரது அபிப்பிராயமென்றால், காளத்தி வேடர் காட்டிய வழி எத்தனை சிவநேசர்களை உத்ஸாகப்படுத்தியிருக்கவேண்டும்!

சைவசமயாசாரியர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக இருந்த

கண்ணப்பரது பக்தித் தொண்டான தியாகத்தை முற்றத் துறந்த பட்டினத்து அடிகளும்,

நாள் ஆறில் கண் இடந்(து)
அப்பவல் லேன் அல்லன்!
நான் இனிச் சென்று
ஆளாவ(து) எப்படி
யோதிருக் காளத்தி
அப்பனுக்கே?

என்று பிரமித்துப் பேசுகிறார். வைராக்கியத்தின் மேல் எல்லையென்று கருதப்பெறும் பட்டினத்தாரே கண்ணப்பரின் பக்தி நிலை குறித்து 'அந்த நிலையை நான் அடையவில்லையே!' என்று கதறுகிறார் என்றால், கண்ணப்பரின் பக்தியையும் தியாகத்தையும் மகா லட்சியமென்று சொல்லக்கூடுமல்லவா? பட்டினத்தாரைப் பத்தாம் நூற்றாண்டினர் என்பர் அதாவது, மாணிக்கவாசகருக்குப் பின், பெரிய புராண ஆசிரியருக்கு முன்பு, இருவர் காலத்திற்கும் இடையே வாழ்ந்தவர்.

பிற்காலத்துசோழப் பேரரசர்களின் காலத்திலே கண்ணப்பரின் உருவச் சிலையும் மற்றநாயன்மார் உருவச்சிலைகளுடன் சிவாலயங்களில் வைக்கப்பெற்றது. சேக்கிழாருக்கு முன்பே நம்பியாண்டார் நம்பியும் (தேவாரம் தொகுத்தவர்) மற்ற நாயன்மார்களைப்போல் கண்ணப்பரையும் பாடியிருக்கிறார்.

வித்து

இத்தகைய கண்ணப்பர் கதையின் வித்து நக்கீரதேவர் (இவர் வேறு சங்ககாலப் பிரசித்தரான நக்கீரர் வேறு) இயற்றிய 'திருக்கண்ணப்ப தேவர் திருமறம்' என்ற சிறிய பிரபந்தம் தான். இந்த வித்தைக் கொண்டு தான் கண்ணப்பர் கதையை வாசகர்களுக்கு முதன் முதல் அறிமுகப் படுத்தியவன் இந்த வித்தையின் அருமை பெருமைகளை இன்னும் கொஞ்சம் சோதித்துப் பார்க்கலாமே.

சேக்கிழாரைப்போல் நக்கீரதேவரும் காளத்தி சென்று இம்மலைக் காட்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும். கைலாசமலையைப் பார்க்க வேண்டுமென்று புறப்பட்ட நக்கீரதேவர், இமயமலை வரை யாத்திரை செய்தாராம். முருகக் கடவுள் இந்த அருமை பக்தரை நோக்கி, 'நீ தட்சிண கைலாசமான காளத்தி கண்டாலே போதும்' என்று அனுப்பிவைத்தாராம். தெற்கே தமிழகத்தின் வட எல்லையாக,—தமிழர்களின் பக்திக் கோட்டைகளில் ஒன்றாக—ஒரு கைலாசம் இருப்பது தெரியாமல், நக்கீரதேவ நாயனார் அவ்வளவு தூரம் தமிழ்த் தென்றல் நடையாடாத பிரதேசங்களிலும் நடமாடிப் போய் விட்டாராம்.

காளத்தி கண்டதும் கண்ணப்பர் கதையைக் கேட்டுக் கேட்டு, நினைத்து நினைத்து இவர் உருகியிருக்கவேண்டும். இவர் வேறு நாயன்மார்களையும் பாராட்டியிருக்கிறார். சிலந்திப் பூச்சியொன்று திருவானைக்காவிலுள்ள சிவலிங்கத்தின்மேல் சருகு உதிராதபடி வலை பின்னிய கதையையும் பாராட்டியிருககிறார். ஆனால், காளத்தி வேடரான கண்ணப்ப நாயனார் கதை தான் நக்கீரதேவரை விசேஷமாக வசீகரித்திருக்கவேண்டும்.

கண்ணப்பர் கதையை நினைத்துக்கொண்டே காளத்தி மலையில் நக்கீரதேவர் திரிந்து கொண்டிருந்தாரென்று ஊகிக்கலாம். 'காளத்தியுள் நின்ற கண்ணப்பராவார் கதை' தன் காலத்திற்கு முன்பே நடந்து முடிந்துவிட்டதாகத் தோன்றவில்லை. நக்கீரதேவரின் பக்திக் கண்களுக்கு 'நேசத்தால் வாயில் நீர்கொண்டு மகுடத்து உமிழ்ந்து அவர் செய்த அன்பின் 'அநாசார' அபிஷேகம் தன் கண்முன்பு நடைபெறுவதுபோலத் தோன்றியது.

கான வேடுவன்
கண் பரிந்(து) அப்ப

வான நாடு

மற்றவர்க்(கு) அருளியும்

[பரிந்து-அன்பு செய்து] என்று காளத்தியப்பரின் அந்த அன்பையும் தியாகத்தையும் அருளையும் பாராட்டினார், பாடினார்.

கண் இடந்த கண்ணப்பர்

தம்மை மிகக் காதலித்து,

விண்ணுலகம் ஈந்த

விறல் போற்றி

[விண்ணுலகம்-இங்கே மோட்ச லோகம். விறல்-வெற்றி; வீரம்.]

என்று பாடிக்கொண்டே, கண்ணப்பர் காதலித்த-கண்ணப்பரைக் காதலித்த-அதே பெருமானை அந்தக் கண்ணப்பர்போல் இருவரும் ஆசை தீரத் தழுவிக் கொண்டாரென்று ஊகஞ் செய்யலாம்.

கல்லாடர் கண்ட கண்ணப்பர்

நக்கீர தேவரின் உள்ளமும் காளத்தி வேடரின் அன்போடு கலந்து, ஆத்ம அனுபவம் பெற்று 'திருக்கண்ணப்ப தேவர் திருமறம்' என்ற பிரபந்தமாகப் பிறந்திருக்க வேண்டும். இந்த பெயருள்ள சிறு பிரபந்தம் வேறொன்றும் உண்டு. இந்தச் சிறு பிரபந்தத்தை இயற்றியவர் கல்லாட தேவர். இந்த இரண்டு சிறு பிரபந்தங்களும் சேர்ந்து, பின்னால் ஆலமரம்போல் கிளை வீசி எழுந்த கண்ணப்பர் பக்திக்கு வித்தாகி விட்டன என்று சொல்லலாம்.

கல்லாட தேவரும் நக்கீர தேவரைப்போல், சேக்கிழாரைப் போல் காளத்தி சென்று அந்தக் காட்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும். இவர் பிரபந்தத்தின் முதல் அடியே,

பரிவின் தன்மை

உருவுகொண் டனையவன்

[பரிவு-அன்பு.]

என்று கண்ணப்பர்-தியாகத்தின் இரகசியத்தை வெளியிடுகிறது. அன்பின் தன்மைதான்-அன்பு என்ற கண்ணுக்குத் தெரியாத அந்தப் பண்புதான்-கண்ணப்பர் என்ற வேட வேடம் தரித்துக் கொண்டதாம். கல்லாட தேவர் கண்ணப்பரின் முரடான அந்த ஸ்தூல ரூபத்தையும் வருணிக்கிறார். உள்ளத்திலோ தெய்விக அன்பு குதிகொள்கிறதே என்று பரவசமானார். இந்த அன்புதான்,

முக்கண் அப்பனுக்(கு)

ஒரு கணில் உதிரம்

தக்கி ணந்திடை

இழிதர, அக்கணம்

அழுது விழுந்து

தொழு தெழுந்(து) அரற்றிப்

புன் மருந்(து) ஆற்றப்

போகா(து) என்று,

தன்னை மருந்தென்று

மலர்க்கண் அப்ப,

ஒழிந்தது! மற்றை

ஒண்திரு நயனம்

பொழிந்த கண்ணீர்க்

கலுழி பொங்க'

அற்ற தென்று

மற்றக் கண்ணையும்

பகழித் தலையால்

அகழ, ஆண்தகை

ஒருகை யாலும்

இருகை பிடித்து,

'ஒல்லை நம்புண்

ஒழிந்தது பாராய்;

நல்லை! நல்லை!

எனப் பெறும்

திருவேட்டுவர்

[தக்கிணம்—வலது பக்கம். இழிதர—விழ. அரற்றி—கதறி, புன்மருந்து—அற்ப மருந்து, ஆற்ற—தணிக்க, ஒண் திருநயனம்—ஒளியோடு கூடிய அழகிய கண். கலுழி—கலங்கல் நீர். பகழித்தலை—அம்பின் நுனி. அகழ—தோண்ட. ஆண்தகை—(இங்கே) சிவபெருமான். ஒல்லை-விரைவில், நல்லை—நீ நல்லவன்.]

என்று கல்லாட தேவர் பாராட்டும் தெய்விகமான தியாகமாகிறது.

'ஐயோ, என் அப்பனுக்கே!' என்று அழுது விழுகிறாராம் அன்பு என்ற கண்ணப்பர், —சிவலிங்கத்தின் வலது கண்ணிலே இரத்தம் கண்டதும், காளத்தியப்பரைத் தொழுதுகொண்டே எழுந்து, ஓவென்று கதறுகிறார். அந்த நோய்க்கு வைத்தியர்களுக்குத் தெரிந்த அற்ப மருந்து போதாதென்று தம்மையே மருந்தாக்குகிறார். பெருமானுடைய மற்றக் கண் கலங்கியதும் கண்ணப்பர் கலங்கவில்லை. மருந்துதான் தெரிந்துவிட்டதே!- தம்முடைய மற்றக் கண்ணையும் 'அம்பு முனையால் தோண்டச் சிவலிங்கம் பளிச்சென்று ஒரு கையால் இரு கையும் பிடித்துக்கொண்டு, 'நம் கண் நோய் தீர்ந்துவிட்டது; இதோ பார்த்துக்கொள் உன்னுடைய அந்தக்கண்ணினாலேயே, என்று வாய் திறந்து பேசினாராம்.

அதே ஜோதிவாய் திறந்து சிவலிங்கம், 'நீ நல்லவன், நல்லவன்!' என்று அந்த அற்புதமான தியாகத்தைப் பாராட்டி, ஒரு பட்டமும் சூட்டிவைத்தாராம். பொல்லாதவனும் 'பெரியவன்' என்று பேர் பெறலாம், பெரிய பெரிய கொடுஞ் செயல்களைச் செய்து செய்து—'மகா அலெக்ஸாண்டர்' 'மகா நெப்போலியன்' என்பதைப்போல! எனவே, 'நல்லவன்' என்று பெயர் பெறுவது எவ்வளவு நல்லது? இந்த நல்லவராகிய வல்லவரைக் கல்லாட தேவர் 'திருவேட்டுவர்' என்றார்.

நக்கீர தேவரைப்போலவே கல்லாடதேவரும் கண்ணப்பர் கதையைச் சுருக்கமாய் ரஸமாய்ச் சொல்லியிருக்கிறார். இக்கதை நக்கீரர் உள்ளத்தை வசீகரித்தது என்பது திண்ணம்.

இந்த இருவர் தூவிய வித்தும் எப்படி வளர்ந்துவிட்டது, பாருங்கள். 'திருவேட்டுவர்' இன்றும் பக்தர்களுக்குக் காளத்தி காட்டும் வழி.



ராமனுதன் அதிக எதிரிகளைத் தனக்குச் சுற்றிலும் எழுப்பிக்கொள்வதில் ஈடுபட்டவன் போல் தோன்றினுன். சங்கரி அவன் பேரில் சீரி விழுந்தாள். "ஏண்டா! வீட்டோடே, வாசலோடே, ஒழுங்காய் இருக்கப் போகிருயோ. அல்லது சந்தி சிரிக்கக் கெட்டழிந்து போகப் போகிருயோ?''

"வீட்டோடே, வாசலோடே இருந்தால்தான் ஒழுங்கு என்றும். வெளியில் புறப்பட்டால் சந்தி சிரிக்கக் கெட்டழிந்து போக வேண்டுமென்றும் பத்தாம் பசலி ஸித்தாந்தத்தை நான் ஒப்புக்கொள்ளவில்லை. வெளியில் போயும் ஒழுங்குடன் வாழலாம்.''

"ஆனுல், நீ அந்தத் தேவடியாள்—''

"இல்லை, என் மாமா பெண்ணைத்தான்''

"அவள் அம்மா என்ன அருந்ததியோ?''

"அருந்ததியோ, ரம்பையோ? அவள் என் அம்மாமி, உன் தம்பி அகமுடையாள்''

"அடே, உன்னைக் கட்டேலே வைக்க! உன் மூஞ்சியிலே முழிக்க இனிமேல் யோக்கியதையில்லை. சரி, உன் அப்பா வரட்டும்.''

"அம்மா! எனக்குப் பணம் காசு வேண்டாம். அப்பா அதைத்தானே இல்லை என்று சொல்ல முடியும்?''

"ஆனுல், அதை இல்லை என்று சொல்லிவிட்டாலும் உனக்குத் தைரியம் தானுே. பணமில்லாவிட்டால் தேவடியாள் வீட்டில் என்ன காரியம்?''

"அம்மா! காதலின் மர்மம் உனக்குத் தெரியாது. பணத்திற்கும் அதற்கும் சம்பந்தமே கிடையாது. காதலுக்காக நான் எதையும் துறக்கத் தயார்''

"என்னத்தைத் துறக்கிறது? இரும்புப் பெட்டியை மறு சாவி போட்டுத் திறக்கவேண்டியதுதான். அல்லது செக்கில் போர்ஜரிக்கையெழுத்துப் போட வேண்டியதுதான்.''

"அம்மா, அதைப்பற்றிப் பேசாதே. நான் மாட்டிக்கொண்டிருந்த விபத்தில் யாரும் எதையும் செய்யத் துணிந்திருப்பார்கள்.''

"ஆமாம், அந்த விபத்து ஏன் வந்தது? நேர் வழியில் நடந்தால் அப்படி மாட்டிக்கொள்ளும்படி ஏற்படுமா?''

"நான் போனது நேர்வழிதான். அதிலும் துரதிர்ஷ்டவசத்திஞல் விபத்துக்கள் வருவதுண்டு. அதை அனுதாபத்துடன் ஆராய்ந்து பார்க்காமல் என்னைப் போலீஸிடம் மாட்டி வைத்து அவமானப்படுத்தியது அப்பாவின் கடின சித்தத்திற்கு அத்தாக்ஷியாகிறது. என்னை அதட்டிக் கேட்க்க அவருக்குப் பாத்தியமுண்டு. நானே உண்மையை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவும், ஸீதாராமனுக்கு என்னுல் ஏற்பட்ட இன்னல்களை விலக்கிவிடவும் சங்கல்பித்துக்கொண்டிருந்தேன். என் விஷயத்தில் துளி அனுதாபம், ஆதரவு விட்டுக்கொடுக்கவும் பொறுத்துக்கொள்ளவும் மன்னிக்கவும் இளகிய மனப்பான்மை சிறிதும் காண்பிக்கப்பட்டிருந்தால் நான் இன்று வேறு ராமனுதனுயிருப்பேன். நான் தவறிப்போயிருந்தாலும் திருந்தி வர எனக்கு நீங்கள் சந்தர்ப்பம் அளிக்கவில்லை வியாதி கண்டால் அதை இன்னது என்று ஆராயாமல் ஸெக்ரிகேஷன் காம்பிற்கு அனுப்பிவிடத் தயாராகவிருக்கும் சுற்றத்தார் துறக்கப்படவேண்டியவரே. இப்போது நான் உலகத்தை எதிர்த்து நின்று போராடத் தைரியமுள்ளவனுனேன். அதற்கு நீங்களே காரணம். எனக்கு நானே துணை என்பதை உணர்ந்தேன். இனி ஒருவர் உதவியும் வேண்டாம்.

"வேண்டாவிட்டால் உன் பெண்டாட்டி நாட்டியமாடி உனக்குச் சம்பாதித்துப் போடுவாளோ?''

"போடலாம். இது பெண்கள் காலம் தானே! அவர்கள் சம்பாதித்துப்போட்டுப் புருஷர்கள் சாப்பிடும் காலம் ஏன் வரக்கூடாது?''

"குசாலாய் வரட்டும்! நீயும் ஆடுகிறவளுக்குப் பின்னே தாளம் போட்டுக்கொண்டு வயிற்றைவளர். உன்னைப் பெற்ற வயிறு எரிகிறதடா!''

சங்கரிக்கு துக்கம் குமுறிக்கொண்டு வந்தது. விம்மி விம்மி அழத்தொடங்கினுள். சிவராமன் அவளைத் தேற்றுவதில் முனைந்தார். ராமனுதன் மாடிக்குச் சென்றுவிட்டான்.

* * * *

அன்று அந்த வீட்டில் கோரமான அமைதி நிலவியது. ஒருவருடன் ஒருவர் பேசவோ, கண்ணெடுத்து ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ளவோ அஞ்சினர். யார் உள்ளத்தையும் ஒரு திகில் பற்றிக்கொண்டிருந்தது. பெரிய மின்னலைக் கண்டதும் பெரிய இடி

இடிக்கப் போகிறதென்று எதிர்பார்க்கும் மக்களின் பீதிகொண்ட நிலைமை யாரிடமும் காணப்பட்டது.

செல்லமும் காந்திமதியும் வழக்கம்போல் பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும், தன் தன் ரூமில் இரவு வரக்கண்ட பக்ஷிகள்போல் பதுங்கினர். மதுரப்பாட்டி வெடி மருந்து உற்பத்திச் சாலையில் நடமாடுபவள்போல் எச்சரிக்கையுடன் நடந்துகொண்டாள். சிவராமன் சுபாவமான கலகலப்பைச் சிறிது அமுக்கியே வைத்துக்கொண்டார். ராமனாதனின் குற்றம் பாதி தன்னைப்பாதிக்குமோ என்ற கவலை அவருக்கிருந்தது. செல்லத்தை வேண்டாமென்று சொன்னதற்குப் பிரதி, தானே ராமனாதனுக்கு உஷாவைத் தயார் செய்திருக்கலாம் என்று அக்கா அத்திம்பேர் சந்தகிக்க நேர்ந்தால், அது மனதிற்கு மிகுந்த ஆதங்கத்தை விளைவிக்கும் என்றும் அவர் ஏங்கினார். அப்படிச் சந்தேகிக்க இடமில்லை என்றாலும், ஆத்திரப்படுபவர்கள் காரணங்களை எங்கே விசாரிக்கிறார்கள்!

சிவராமன் செல்லத்தை நினைத்து மிகவும் துயருற்றார். அவள் ராமனாதனின் நூதன பற்றுக்களை உணர்ந்து மனம் உடைந்து போவாள் என்று அவர் எண்ணினார். அன்றே அவளை சியாமளாம்பாபுரம் அழைத்துச் சென்றுவிடலாமா என்று தீவிரமாய் யோசிக்கலானார். ஆனால், அழகிரியிடம் மறுநாள் உஷாவின் எதிர் கால க்ஷேம நிதி ஏற்படுத்துவதற்காகப் போக வேண்டிய அவசியத்தை உத்தேசித்து ஊருக்குப் போகும் வேகத்தைத் தவிர்த்திக்கொண்டார். இருந்தாலும் செல்லத்தை அவள் ரூமில் சந்தித்துச் சிறிது சல்லாபத்தைத் தொடர அவர் சமயததை எதிர்பார்த்தார்.

சிவராமன் செல்லத்தைக்காண உள்ளே புகுந்தபோது காந்திமதி அவள் பக்கத்தில் இருந்தாள். செல்லம் துயரத்தில் ஆழ்ந்திருந்ததும் காந்திமதி அவளுக்குத் தேறுதல் செய்யப் பிரயத்தனப்படுவதும் அவர் பார்த்த நிமிஷத்தில் அவருக்குப் புலனாயிற்று. சிவராமன் காரணத்தை ஊகித்தார். ராமனாதனின் புது விருத்தாந்தங்கள் அவள் ஹிருதயத்தைத் தாக்கியிருக்க வேண்டுமென்பது அவர் ஊகம். தானும் ஒரு பக்கத்து நாற்காலியில் அமர்ந்து பரிவுடன், அனுதாபத்துடன். தயவுடன், மிருதுவான குரலில் சிவராமன் செல்லத்தினிடம் பேசலானார்.

"நாம் இன்றைக்கோ, நாளைக்கோ ஊருக்குப் போய்விடலாமா? செல்லம்!"

"இன்றைக்கே போகலாம், அப்பா"

"சரி, போவோம்; உனக்கு என்ன உடம்பு?"

"உடம்பு ஒன்றுமில்லை."

"ஏன் சுணக்கமாய் இருக்கிறாய்?"

"சுணக்கமொன்றுமில்லை. சிறிது மயக்கம்போலிருக்கிறது. பள்ளிக்கூடத்தில் இன்று விளையாட்டு நேரத்தில் பந்து அடித்தேன். அப்போது ஓடியாடினதில் படபடப்பு ஏற்பட்டது. திடீரென்று ஆட்டத்திலிருந்து விலகிக்கொள்ள முடியவில்லை. சற்றுப் பொருத்து சிரமம் தாங்காமல் ஆட்டத்தினின்று விலகிக்கொண்டேன். காந்திமதி ஸோடா வரவழைத்துக் கொடுத்தாள். உடனே இருவரும் வீட்டிற்கு வந்தோம். அதுமுதல் களைப்பும் மயக்கமுமாக விருக்கிறது."

"புருஷர்களுக்கு ஏற்பட்ட சரீரப் பயிற்சிகளையெல்லாம் பெண்களுக்கு விதிப்பது எப்படி நன்மை தரும்? ஈச்வரன் இனம் இரண்டாய்ப் பிரித்திருப்பதை நாம் உதாசீனம் செய்துவிட முடியாது. இந்த அர்த்தமற்ற சமத்துவவாதம் அனர்த்தத்தில்தான் முடியும். இப்போது படபடப்பு எப்படி இருக்கிறது?"

"படபடப்பு இல்லை."

"டாக்டரை வரவழைக்கட்டுமா?"

"வேண்டாம். அப்பா! நாம் ஊருக்குப் போவோம். டாக்ஸியை

வரவழையுங்கள்.'' "செல்லம், நாளைக்கு ஊருக்குப் போவோம். இன்று நீ ரெஸ்டு எடுத்துக்கொள்வது அவசியம். நாளைக்குத்தான் பிரயாணம் செய்யச் சௌகரியமாயிருக்கும். மேலும் எனக்கு ஒரு கோர்ட்டு விவகாரம் நாளைக்கு இருக்கிறது. அதை முடித்துக் கொண்டு புறப்பட்டுவிடுகிறேன்.''

"எனக்கு இங்கே இருப்பதே என்னமோபோலிருக்கிறது''.

காந்திமதி சிவராமனைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டிவிட்டு, ஒரு புன்முறுவல் பூத்தாள்.

சிவராமன் அதன் தாத்பரியத்தைப் புரிந்துகொண்டதாய் அவளுக்குக் கண் ஜாடை காண்பித்துவிட்டுத் தலையைக் கவிழ்த்துக் கொண்டு. மேஜையின் பேரில் சாய்ந்துகொண்டிருந்த செல்லத்தை முதுகில் தடவிக் கொடுத்துவிட்டு, முகவாய்க்கட்டையை அன்புடன் நுனிவிரலால் நிமிர்த்தி சிவராமன் பேசலானர்.

"செல்லம்! காந்திமதி உன் பக்கத்தில் இருக்கும்போது உனக்கு வீணாக ஏன் வெறுப்பும் வியாகூலமும். மேலும், ராமநாதன் வழிக்கு வந்துவிடுவான். அதைப்பற்றி உனக்குக் கவலை வேண்டாம்.''

"சிவராமன் மேலே பேசப் போகுமுன் காந்திமதியின் தலை பலமாக அசைந்தது. செல்லத்தின் தலை மறுபடியும் கீழேகவிழ்ந்தது. காந்திமதி ஏதோ தனியே தன்னிடம் சொல்ல விரும்புபவள் போல் சிவராமனுக்குத் தோன்றிற்று. தான்கொண்ட அபிப்பிராயங்களை அவள் திருத்தக் கருதியவள்போல் காணப்பட்டாள்.

சிவராமன், "கொஞ்சம், காப்பி கொண்டு வருகிறேன் செல்லம்! மனதில் ஒன்றையும் நினைத்து ஆயாசப்படாதே. எதை வேண்டுமானாலும் தாராளமாய் மனதை விட்டுச் சொல். உன்னிஷ்டப்படி நடத்தி வைக்கிறேன். துளிக்கூட நீ சிந்திக்க வேண்டாம். இதோ வருகிறேன்'' என்று எழுந்திருந்தார்.

காந்திமதியும், "நீங்கள் இருங்கள் மாமா! நான் காப்பி வாங்கி வருகிறேன்'' என்று கூடவே எழுந்திருந்தாள்.

இருவரும் நடு ஹாலுக்குப் போனதும் வாசலிலே ஒரு ஹார்ண் சப்தம் கேட்டது.

உடனே ஒரு கார் கேட்டின் வழியே உள்ளே வந்தது.

சிவராமன் வாசலுக்குச் சென்றார். காந்திமதி பின்னே தொடர்ந்தாள். செல்லம் உள்ளைவிட்டு வெளியே வந்தாள். சங்கரி பின் கட்டில் இருந்தபடி எட்டிப்பார்த்தாள். மதுரம் இடதுசாரி ரூம்களைத் தாண்டிக்கொண்டு முன்பக்கம் ஜன்னல் ஒன்றை அடைந்து வந்தவர்களை ஆராயப் புகுந்தாள்.

(தொடரும்)

காஷ்மீர்-குஸும்
என்ற மலர் மூலிகையை
கூந்தல் வளர்ச்சிக்கு எண்ணெயில் கலக்கவும்

M.P. & Co.'s
ஸாண்டலக்ஸ்
நறுமண சந்தனக் களிம்பு
தீப்புண், வெட்டு, சொறி பரு, புண்களுக்கு (க்ஷிவர உதவி)

M R ஜெட்டப்பா அவர்களின
பிரேமலீலா
மைசூர் ஊதுவத்திகள்
எமார்ஜஸ், அகர், அம்பர்

நம்பிக்கை பெற்ற நஞ்சன்கூடு மருந்துகளை உபயோகிக்கவும்.

ஏஜெண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் வீதி, மதறாஸ்.
டிப்போக்கள் : மதுரை, கோயமுத்தூர், கும்பகோணம், பம்பாய்.



பிரசித்தி பெற்ற

"காஸினோ"

முகப்பவுடர்

உங்கள் முகத்தை பொலிவுடன்
பிரகாசிக்கச்செய்கிறது.

வாங்கும்பொழுது காஸினோ
மார்க்கைப்பார்த்து வாங்குங்கள்.

CHANDRA TRADING CO.,
93, ACHARAPPAN ST., G.T. MADRAS I

வீட்டிலேயே வாசனை தைலங்கள் தயாரித்தால் பணம் மிச்சமாகும்: கீழ்க்கண்ட மோஹினி பியூர் செண்டுகளில் ஏதேனும் ஒன்றை தேங்காய் எண்ணெய், மணிலா, ஆமணக்கு அல்லது நல்லெண்ணை யில் சேர்த்தால், மலிவான விலையில் சிறந்த வாசனைத் தைலம் கிடைக்கின்றது. இலவசமாக எண்ணெயை சிவப்பாக்கும் ஆல்கானட் வேர்கள் அனுப்புவோம்.

மோஹினி பியூர் செண்ட் ரகங்கள்.

1.	சம்பக் செண்ட்	ரூ. 2-0.	8.	ரோஜா செண்ட்	ரூ. 1-8.
2.	கியோரா	,, 2-0.	9.	சுரங்கி	,, 1-8.
3.	காஸ்	,, 2-0.	10.	வில்லி	,, 1-0.
4.	போகுல்	,, 1-8.	11.	லோடஸ்	,, 1-0.
5.	ஜாஸ்மின்	,, 1-8.	12.	ஆரஞ்சு	,, 1-0.
6.	கரம்பம்	,, 1-8.	13.	மோதியா	,, 1-0.
7.	ஹேனா	,, 1-8.	14.	கோலோன்	,, 1-0.

அரை அவுன்ஸ் புட்டிகளில். பாக்கிங், போஸ்டேஜ் வி. பி. பி. தனி.

S. PAUL & Co., Perfumers, (Dept. S W.) 4, Hospital St., **Calcutta 13.**

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப் படுத்தப்பட்டவை:—

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன ஒரு தாளில் ஒரு கீர்த்தனை தான் இருக்கும். தபால் செலவு ப்ரத்தியேகம்.

மானேஜர்.

"சுதேசமித்திரன்" புத்தகசாலை.
மவுண்ட் ரோடு, சென்னை.



இந்தியாவின் புகழ்

லோத்ரா

கர்பாசய ரோக நிவாரணி

கேஸரி குடீரம் லிட்., மதராஸ்

EASTERNS.394

ஓரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் ஏஜண்டுகள் :—

ஸீதாராமா

ஜெனரல் ஸ்டோர்ஸ்

பர்ஹாம்பூர்--செகந்திராபாத்
பெஜவாடா — மதுரை.

ப்ராங்கைடிஸ்

இரவு இருமல்

மற்றும் இதர மார்பு & சுவாசப்பை தகராறுகளுக்கு

பெப்ஸ் சிறந்தது





பெப்ஸ் மருந்து சத்துக்கள் ஒவ்வொரு சுவாச உறுப்புக்கும் போவதை குறிக்கும் படம்.

ஒரு நல்ல ருசியுள்ள பெப்ஸ் வில்லையை உட்கொள்ளுங்கள். அது கரைந்தவுடன் சுவாசத்துடன் அதன் மருந்து சத்துக்கள் சுவாசப்பைக்குள் சென்று, சீக்கிர நிவாரணமளிக்கும். பெப்ஸ் இருமலை நிறுத்தி, புண்ணாகிய உறுப்புகளுக்குச் சமனமூட்டி, குணமாக்கி சளியைத் தளரச்செய்து அடைப்பை நீக்கும்.

ஏஜண்டுகள்:— மெஸர்ஸ். தாதா & கம்பெனி, பி. டி. மதராஸ்



PEPS

கிருமி நாச

தொண்டை & மார்பு வில்லைகள்

தொண்டை, மார்பு, சுவாசப்பை தகராறுகளுக்கு சிறந்த பயனளிக்கவல்ல நிவாரணி.

Lovely long hair

ASOKA AMLA

HAIR OIL

100% மருந்து பூர்வமானது; வாசனையுள்ளது, மூலிகைச் சத்துக்கள் நிறைந்த கேச மருந்து. மூளைக்குக் குளிர்ச்சியளித்து கேசம் வளர உதவும்.

VIJAYA CHEMICAL & TOILET WORKS
21 & 22 Suriyanarayana Chetty St.,
Royapuram, Madras.

குகன் சோப்புகள்



சலவைக்கு சிறந்தவை

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

A. B. C. Talks	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.

மானேஜர்

"சுதேசமித்திரன்" புத்தகசாலை

மவுண்ட்ரோட், மதராஸ்.

கப ரோக நிவாரணி

இருமல், ஈளை இருமல், வரட்சி, இளைப்பு, சுவாசம் எரைப்பு, மூச் சடைப்பு, புகைச்சல் இருமல், சாதாரண இருமல், மார்ச்சளி, அஸ்தி ஜுரம் கபத்தில் ரத்தம் வருதல், தொண்டை ரணம், ஈரல் ரணம், குலை ரணம் இவைகள் போன்ற இன்னும் எந்தவிதமான தீராத கபரோக வியாதியையும் தீர்த்து கபக் கிருமிகளைக் கொன்று கபத்தை தண்ணீராய் கரைத்து இருமலை அறவே ஒழித்து நல்ல நித்திரையைக் கொடுக்கும் — இது ஓர் நிகரற்ற சஞ்சீவி. இதற்கு பத்தியம் கிடையாது—குழந்தைகளும் உபயோகப் படுத்தலாம். 1 அவுன்ஸ் புட்டி ரூ. 2. பாக்கிங் வி. பி. செலவு தனி. முன்பணமாக 50% அனுப்பவேண்டும்.

தயாரிப்பவர்கள்:

சதர்ன் இந்தியா மெடிகல் ஹவுஸ்,
மைலாப்பூர், : : மதராஸ்.

Sole Selling Agents:

என் ஸீ ஏஜன்ஸீஸ்,
2/36, Luz Church Road, MYLAPORE, MADRAS.

Consult: Dr. V. ராஜரத்னம்,

For Nervous Debility. Diabetes, T. B., etc., at the above address.

மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம், மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானால், இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும்பெற இச்சையுண்டானால் இன்றே,

'ஜீவவசிய பரம ரஹஸ்யம்'

என்னும் அரிய பெரிய தமிழ் நூலைப்படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக. தமிழில் இந்தச் சாஸ்திர சம்மந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத்தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று பிறகு அப்பசித்து வெற்றிபெற்ற ஒரு மகானால் இது வரையப்பட்ட அனுபவ நூலாகும். இன்றே வாங்கிப்படித்து பயன்பெறுங்கள்.

விலை ரூ. 4—8—0.
வி. பி. செலவு அணு 9.

ஷாஜஹான் புக் டெப்போ,
34, சாந்தோம், சென்னை 4.

உங்கள் எதிர்காலம்



பணமில்லமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபகஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணு 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist, MADRAS 5.

S.A.H.
TRADE MARK

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.
285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

எல்லோரும் எங்கள் பீ. எஸ். வஸ்துக்களை உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும் ஆரோக்கியமானது

P.S.

பெருங்காயம் – பாதம் எண்ணெய் – அம்லா ஹேர் ஆயில் – வாசனை தேங்காய் எண்ணை - கஸ்தூரி குங்குமப்பூ - கோரோஜனம் – ஊருகாய் (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபிகுல்கந்து–பஞ்சாப்தேன் - முத்து பன்னீர்–ஓமவாடர் - முறப்பா, நெல்லிக்காய் – இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்கள் :—

மதருஸ் புட்பிராடக்ட்ஸ்,
45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி டி. மதருஸ்.

வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்

(தங்கம் சேர்ந்தது.)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும், திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30மாத்திரை சீசா 1 ரூ.7.

மஹா பில்வாதி லேகியம்

பித்தம், அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்

வியாதி, மனோ விசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி, உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை, பிரதிஸரஸூத்ரம், ஸ்ரீதன்வந்தரீயந்திரம் இவைகளை மந்திரபூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி

எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி

(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)
சென்னை ஹைகோர்ட்டில் உரிமைபெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம். ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

ஜாதகம் ! ஆருடம் !!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.



கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு :—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக கவனியுங்கள் :-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர், விஜய அஸ்ட்ராலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor : C. R. Srinivasan B. A.

Regd. No. 2514.

தலையிட்டோர் சூழ்ச்சி பலிக்கவில்லை



தேவஸ்தானம்
கமிட்டி

திருப்பதி
26-9-48.

பகவான் ஸ்ரீவெங்கடேஸ்வரரின் ரத்னகிரீடத்தில் திகழும் அபூர்வமான வேலைப்பாட்டை கவனிக்கும்போது அதைத்தயாரித்த ஸூரஜ்மல் கம்பெனியாரின் உன்னதமான வேலைத் தரமையில் தங்களுக்குள்ள பெருமதிப்பை தெரிவித்துக்கொள்வதில் திருமலை திருப்பதி தேவஸ்தானக்கமிட்டியார் மிக்க மகிழ்ச்சியடைகின்றனர். கலையின் சிகரம் பூரணப் பொலிவுடன் விளங்கலாமென்பதற்கு இக்கிரீடமே தகுந்த சான்று.

B. வீராசாமி நாயுடு,
கமிஷனர்.

முடிவில் . . . .

உண்மை ஊர்ஜிதம்

ஸூரஜ்மல்ஸ்

திருப்பதி ரத்ன கிரீடம் தயாரித்தவர்.

313, எஸ்பிளனேட் : : மதராஸ்.